
கல்கி
வைரவிழா ஆண்டு
KALKI 9.9.2001
ரூ. 5.00
த.மா.கா.
இனி
ன்ன ஆகும்?
துணிச்சல் ஸ்ரீ!

இமயம் முதல் குமரி வரை
இந்திய ஆடை கலாச்சாரமே
இங்குதான் சங்கமம்!

தமிழகத்திலேயே மிகப் பிரம்மாண்டமான ஜவுளி மாளிகை



தி சென்னை சில்க்ஸ்

சென்னை மாநகருக்கு மேலும் சிறப்பு சேர்க்கிறது புத்தம்புதிய ஜவுளி ஷோரூம் தி சென்னை சில்க்ஸ். காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை அலை அலையாய் ஜவுளிகள் ஆயிரக்கணக்கில்! உங்கள் குடும்பத்தின் ஆடைத் தேவைகள் அனைத்தையும் ஒரே கூரையின் கீழ் நிறைவேற்றும் ஒப்பற்ற ஜவுளி சாம்ராஜ்யத்திற்கு இன்றே வருகை தாருங்கள்.

சிறப்பம்சங்கள்

தரம் மற்றும் டிசைனில் அழகூட்டும் பட்டுச்சேலை தயாரிப்பில் 40 வருட பாரம்பரியம்!

இந்திய ஆடை கலாச்சாரமே இங்குதான் சங்கமம்! காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை அனைத்து ஜவுளிகளும் ஒரே கூரையின் கீழ்!

இந்தியாவில் எங்கும் காணமுடியாத பிரத்யேக டிசைன் பட்டுப் புடவைகள், தி சென்னை சில்க்ஸில் மட்டுமே!

வாராவாரம் புதுப்புது அறிமுகம்! ஒவ்வொரு வாரமும் திங்கட்கிழமை புத்தம்புது டிசைன் பட்டுப்புடவை அறிமுகம்!

வாடிக்கையாளர்கள் விரும்பும் டிசைன்களில் பட்டுச் சேலைகள் தனிக் கட்டணம் எதுவுமின்றி நெய்து தருகிறோம்.

ஒரே வண்ணம், ஒரே டிசைனில் யூனிபார்ம் சாரிகள் மொத்தமாக, உடனுக்குடன் வாங்கும் வசதி

அனைத்து கிரெடிட் கார்டுகளும், ஃபாரின் கரன்ஸிகளும் ஏற்கப்படும்.

ஆடைகளில் எல்லோருக்கும் எல்லாமுமே.

தி சென்னை சில்க்ஸ்


23 (67), உஸ்மான் ரோடு, T. நகர்,
சென்னை - 600 017. ☎ 044 - 4310888 Tel : SILKS

• பட்டுச்சேலை உற்பத்தியாளர்கள்
• மொத்த விற்பனையாளர்கள் • ஏற்றுமதியாளர்கள்

பட்டு உற்பத்தி நிலையம்

G.K மேனர் பில்டிங், 98/1, காந்தி ரோடு,
காஞ்சிபுரம் - 631 501. ☎ 04112 - 29777

E-Mail : thechennaisilks@eth.net Website : www.thechennaisilks.com



செப்டெம்பர் 4, 1902 அன்று பிறந்த கல்கி சதாசிவம் நூற்றாண்டு தொடங்குகிறது.


அவரைப் போல உயர்ந்த ரசனை உடையவர்கள் இருக்க முடியாது. சங்கீதம் மட்டுமில்லை, எல்லா விஷயங்களிலேயும் அந்த ரசனை தெரியும். தோட்டத்தில் எந்தெந்தப் பூச்செடிகளை எங்கெங்கே விதைக்கணும்னு சொல்லுவார். எதெது எப்போ முளை விடும், எத்தனை நாள் கழித்து மலர ஆரம்பிக்கும்னு கணக்கு வைச்சுப்பார். பூக்க ஆரம்பித்ததும் பார்த்தால் அந்தந்தப் பாத்திகளின் நிறங்கள் மாறி மாறி அமைஞ்சு அசாத்திய அழகாகத் தெரியும்... பார்த்துப் பார்த்து மகிழ்ந்து போவார்.

காங்கிரஸில் ரொம்பத் தீவிர ஈடுபாடு இருந்ததால் தெய்வ வழிபாட்டிலே இவருக்கு நாட்டம் இல்லாமல் போய்விடுமோ என்று ஒரு சமயம் நான் நினைத்ததுண்டு. ஆனால் திருப்பதி பெருமாளிடம் மாறாத பக்தி. காஞ்சி முனிவர், பாபா இருவரும் இரண்டு கண்கள்! எத்தனை வேலை இருந்தாலும் கல்கி அலுவலகத்தில் ஆயுத பூஜை ரொம்ப விமரிசையாகக் கொண்டாட ஏற்பாடு செய்வார். அன்றைய தினம் 'நெஞ்சுக்கு நீதி...' 'வெள்ளைத்

சதாசிவம் — 100

சிந்தையில் நிறைந்த விந்தை மனிதர்!

கல்கி இன்டர்நெட் முகவரி : www.kalkiweekly.com ஈ மெயில் : kalkiweekly@vsnl.com



• கல்கி - ராஜாஜி - சதாசிவம்

தாமரை பூவில் இருப்பாள்' என்ற இரண்டு பாரதியார் பாடல்களும் பாடுவேன்.

சுதந்தரம் அடைந்த பிறகு சில ஆண்டுகள் வரை சுதந்தர தினத்தன்று ஃபோர்மேன் ராஜாபாதரைக் கொடியேற்றச் செய்து 'தாயின் மணிக்கொடி'பாடச் செய்தார்.

ஒரு சமயம் டெல்லியில் கச்சேரி- அது ஒரு யுத்த காலம். மேடைக்கு ஒரு சீட்டு எழுதி அனுப்பினார். 'கச்சேரியின் இடையே ஒருவர் பேசுவார். அவர் பேசி முடித்ததும் கை வளையல்களைக் கழற்றி நீ அவரிடம் தர வேண்டும்....' என்று எழுதியிருந்தார். நானும் அப்படியே செய்தேன். அவருடைய சஷ்டியப்த பூர்த்திக்குக் குழந்தைகள் சேர்ந்து அன்பளிப்பாகக் கொடுத்த வளையல்கள்.

யுத்த நிதிக்கான கச்சேரிதான் அது. அதன் இடையிலே நிதிக்காக வேண்டுகோள் விடுத்த போது நாம் முன்னோடியாக வழி காட்ட வேண்டும் என்று விரும்பினார். நாம் ஆரம்பித்து வைத்தால், பலர் பின்தொடர்வார்கள் என்ற நல்லெண்ணம்...

சரீரத்தாலும் சிந்தனையாலும் பொருளாலும் உதவிகள் செய்த பரோபகாரி அவர்.

— எம்.எஸ். சுப்புலக்ஷ்மி

சதாசிவம்
பொருத்தமான பெயர்
நூறு சதவிகிதம்
கேட்ட வரம் தந்திடுவார்
வளர்த்த கடா மார்பில் பாய்ந்தாலும் வருத்தப்படமாட்டார்;
சிவனல்லவா?
சிவனே என்று வாளாவிருந்து விடுவார்.
சதாசிவம் தொட்டதெல்லாம் தங்கம்.
பல இளைஞர்களை வாழ்க்கையில் பரிணமிக்கச் செய்திருக்கிறார்.

பம்பாய் கண்ணன், கல்கி முரளி, ரா. கணபதி, நா. பார்த்தசாரதி, வாண்டு மாமா முதலானோர் இவர் உன்னதப் படைப்புகள்.

விஸ்வாசத்தின் மறுபெயர் சதாசிவம்!

மூதறிஞர் ராஜாஜியின் நிழல்.
இரவிலும் கூட.

ராஜாஜி பெரும் பதவியிலிருந்த போதும், பதவி இல்லாத போதும், அவருக்கு உறுதுணையாய் நின்றவர்.



• சதாசிவம் - காமராஜருடன்...

ராஜாஜிதான் அவருக்கு மாதா, பிதா, குரு, தெய்வம். அரசியல் நெருக்கடி நிலையின் போது, தன்னை எந்த நிமிடமும் கைது செய்வார்கள் என்று எதிர்பார்த்து, பெட்டி படுக்கையுடன், கீதையுடன் தயாராக இருந்தவர்.

அஞ்சா நெஞ்சர்.

ராஜாஜியின் கொள்கைகளைப் பறைசாற்ற ஒரு பத்திரிகையையே வெற்றியுடன் நடத்தியவர். 'ஸ்வராஜ்யா'தான் அந்த சஞ்சிகை.

எது செய்தாலும் அது ஒழுங்காகத்தான் செய்வார். திட்டமிடாமல் எதுவும் செய்யார்.

இன்று சர்வதேச அங்கீகாரம் பெற்று இசை உலகில் உச்சாணியில் இருக்கும் எம்.எஸ்.ஸின். கீர்த்திக்கு மூலகாரணம் சதாசிவம்தான்.

நிகழ்ச்சி நிரல் முதற்கொண்டு முதல்தரமாய்த் தயாரிப்பார்.

கச்சிதமாயிருக்கும் அவர் தயாரிக்கும் நிரல். அறுசுவை மிளிரும்

எல்லா ருசிகளுக்கும் அதில் இடமிருக்கும்.

கல்கி தோட்ட பங்களா பார்க்காதவர்கள் கொடுத்து வைக்காதவர்கள்.

அது ஓர் அன்னதான சத்திரம்.

அட்சய பாத்திரம்.



• சதாசிவம் - எல்லை காந்தியுடன்...

அதுபாட்டுக்குச் சுரந்து கொண்டே இருக்கும்..

ஆண்டி முதல் அரசர் வரை அங்கே எல்லாருக்கும் ஒரே மரியாதை.

எழுத்து மாத்திரம் விற்குமா?

விளம்பரம் வேண்டாமா?

நிர்வாகம் வேண்டாமா?

வெளியுலகத் தொடர்பு வேண்டாமா?

புதிய புதிய அம்சங்கள் புகுத்த வேண்டாமா?

அதை பறைசாற்ற வேண்டாமா?

கல்கி பத்திரிகைக்காக இந்த எல்லாக் கைங்கர்யங்களையும் தனியாக சாதித்த வல்லவர் சதாசிவம்.

சதாசிவம் தாம்பூலப் பிரியர். நாலாவதும் நிறைய உண்டு; பிரும்ம பத்திரம்தான்.

வாயில் கங்கை ஊறிய வண்ணம் இருப்பாள்.

ஒருநாள் ராஜாஜி சொன்னார் : "உங்கள் புகையிலைப் பழக்கத்தைக் குறைத்துக் கொள்ளுங்களேன்" என்று.

அடுத்த கணம் சுருதிப்பெட்டி - வெற்றிலைச் செல்வம்தான் - காணாமல் போயிற்று. தாம்பூலப் பழக்கம் விடைபெற்றுக் கொண்டது.

அவ்வளவு மனோதிடம்!

கொள்கைப் பிடிப்பு.

— சுப்புடு

கல்கியும் சதாசிவமும் சந்தித்ததைச் சுந்தா 'பொன்னியின் புதல்வ'ரில் எழுதுகிறார் :

"குவாரண்டைன் நாட்கள் முடிந்ததும் கிருஷ்ணமூர்த்தியின் விலங்குகளைக் காவலர் அகற்றி அவரை உட்சிறைக்குள் அனுமதித்தார்கள். அந்தப் பெரிய சிறைக் கூடத்தில் அவர் திக்கு திசை புரியாமல் திகைத்து நின்றபோது களையான முகத்துடன் இளம் கைதி ஒருவர் அவரை அணுகி கைலாகு கொடுத்து, "நீங்கள் தானே கிருஷ்ணமூர்த்தி? கரூரிலிருந்து வந்தவர்?" என்று கேட்டு அரசியல் கைதிகளின் பகுதிக்குக் கூட்டிச் சென்றார். அந்த இளைஞர் சதாசிவமும் கிருஷ்ணமூர்த்தியும் அந்தக் கணத்திலிருந்து உயிர்த் தோழர்களானார்கள்."

சுதந்திரப் போராட்டத்தின் ஆரம்பக் காலத்தில் சிறைவாசம் என்பது அரசியல் கைதிகளுக்குக் கூட ரொம்பக் கடுமையானதாக இருந்தது. கைகளையும் கால்களையும் விலங்கிட்டு இரட்டை வடச் சங்கிலியால் பிணைத்து விடுவார்கள். சங்கிலியைத் தூக்கிக் கொண்டேதான் சிறைக்குள்ளும் மெல்ல நடக்க வேண்டும். ஆனால் ஆழ்ந்த தேச பக்தி எல்லா கஷ்டங்களையும் சிரித்துக் கொண்டே ஏற்கச் செய்தது. "நமக்கு நம் பெற்றோர்கள் காப்புப் பண்ணிப் போட்டு அழகு பார்க்க ஆசைப்பட்டிருப்பார்கள்; ஆனால் வசதியில்லை; இப்போது அந்தக் குறையை பிரிட்டிஷ் அரசாங்கம் ஈடு செய்கிறது" என்று சக கைதிகளிடம் சதாசிவம் கூறி மகிழ்வார்.

— கி. ராஜேந்திரன்

கல்கி தோட்டத்துக்கு வராத பிரமுகர்கள் யாருமே இல்லை என்று சொல்லலாம். ஆவடி காங்கிரஸ் மாநாட்டின் போது வந்திருந்த நேருஜி அவர்கள் ஆவடி போகிற வழியில் காரை கல்கி பங்களாவுக்கு விடச் சொல்லி திருமதி எம்.எஸ்., சதாசிவம் இருவரையும் வியக்க வைத்த செய்தி அனைவரும் அறிந்தது தான்.

'டைனமிஸம்' என்ற சொல்லுக்கு அர்த்தம் சதாசிவம் என்றுதான் சொல்ல வேண்டும். எந்த ஒரு முயற்சியாக இருப்பினும் அதை ஒரு இயக்கமாகச் செய்து சாதனை புரியும் ஆற்றல் படைத்தவர். தம் எண்ணத்துக்கு இசைவாகச் சுற்றி இருப்பவர்களையும் இயங்கச் செய்வார்.

அவருக்குக் கோபம் வருவதையும் அடுத்த நிமிடமே சாந்த புருஷராக மாறி விடுவதையும் கல்கி அலுவலகத்தில் நான் பணிபுரிந்த காலத்தில் பலமுறை கண்டிருக்கிறேன்.

'கொஞ்ச நேரம் முன்பு புயலாக இருந்த அவரா இப்போது இப்படி தென்றலாக வீசுகிறார்' என்று ஆச்சரியப்பட்டிருக்கிறேன்.

'கொஞ்ச நேரம் முன்னால் எரிமலையாகக் கொந்தளித்தவரா இப்போது இப்படி பச்சை வாழைப்பட்டையாக மாறி இருக்கிறார்?' என்று வியப்பேன்.

— சாவி

காமராஜர் கண்டெடுத்த காங்கிரஸ் தொண்டர்!

பெருந்தலைவர் காமராஜர்- மூப்பனாரின் சுந்தரப்பெருமாள் கோயில் இல்லத்துக்கு விஜயம் செய்த அந்த நாள்தான் (1954ஆம் வருடம்) மூப்பனாரின் வாழ்க்கையில் திருப்பம் ஏற்படுத்தித்தந்த நாள்.

மூப்பனார் என்கிற ஆற்றல்மிக்க இளைஞரை-காமராஜருக்கு அடையாளம் காட்டியவர் வாண்டையார்.

காமராஜரும் வாண்டையாரும் மூப்பனாரின் மீது வைத்த நம்பிக்கை வீண் போகவில்லை. 1965ல் தஞ்சை மாவட்ட காங்கிரஸ் தலைவர் என்ற பொறுப்பினையேற்ற மூப்பனார் ஏறத்தாழ பத்தாண்டுகாலம் அந்தப் பதவியில் இருந்தார். 1967-தேர்தலில் தஞ்சை மாவட்டத்தை, காங்கிரஸின் கோட்டையாக மாற்றிக் காட்டினார் மூப்பனார்.

1969ல் காங்கிரஸ் இரண்டாக உடைந்தபோது- தமிழகத்தில் காமராஜர் ஸ்தாபன காங்கிரஸின் ஒப்பற்ற தலைவராக இருந்தார். அன்று 'காமராஜரா? இந்திராவா?' என்ற கேள்வி எழுந்தபோது - மூப்பனார் சற்றும் தயக்கத்துக்கு இடமளிக்காது- 'காமராஜர்தான் என் தலைவர்: காங்கிரஸ் என்றால் அது காமராஜர் இருக்கும் காங்கிரஸ்தான்' என்று முடிவு எடுத்தார். காமராஜரின் ஸ்தாபன காங்கிரஸிலேயே அவர் நீடித்தார்.

காங்கிரஸ் ஆட்சியை இழந்தபோது (1977)-பல்வேறு திசைகளிலிருந்தும் அது எதிர்பாராத தாக்குதல்களைச் சந்திக்க நேர்ந்தது. முதல்நாள் வரை 'இந்தியாதான் இந்திரா- இந்திராவே இந்தியா' என்று புகழ்ந்து பேசிக் கொண்டிருந்தவர்களெல்லாம் இந்திரா காந்தியின் பிரதமர் பதவி பறி போன மறுவிநாடியிலிருந்து ''எல்லாவற்றிற்கும் காரணம் இந்திராதான்;• இந்திராவின் எதேச்சாதிகாரம்தான்'' என்று இந்திரா மீது சேற்றை வாரி இறைத்துவிட்டு-இந்திராகாந்தியிடமிருந்து விலகுவதில் போட்டி போட்டார்கள். அப்போது - இந்திரா காங்கிரஸ் தலைமை அலுவலகம்







சின்னக்குத்தூசி

இயங்க அதற்கென்று ஒரு தனிக்கட்டடம் கூட மிஞ்சவில்லை.

அப்போது- மூப்பனார்-யாருமே எதிர் பாராத வகையில்- யாருமே செய்யத் துணி யாத ஒரு காரியத்தைச் செய்தார். திரும்பிய பக்கமெல்லாம் எதிர்ப்புக்கணைகளால் துளைத்தெடுக்கப்பட்டு- போராடிக் கொண் டிருந்த இந்திராகாந்தியையே பிரமிக்க வைத்த காரியம் அது; இந்திராவின் நெஞ்சிலேயே நன்றியுணர்வைத் ததும்பி வழிய வைத்த காரியம் அது.

மாநிலங்கள் அவை உறுப்பினர் என்ற வகையில் மத்திய அரசு மூப்பனாருக்கு ஒரு வீட்டை ஒதுக்கித் தந்திருந்தது.

தமக்களிக்கப்பட்ட அந்த பங்களாவை, கட்சியிடம் ஒப்படைத்தார் மூப்பனார்; இன்று மூப்பனார் இல்லை, ஆனால் இன்றும் மூப்பனார் 1977ல் வழங்கிய அதே கட்ட டத்தில்தான் காங்கிரஸ் தலைமை அலுவலகம் இயங்கி வருகிறது!

சர்ச்சைகளுக்கு மத்தியில்- எதிர்ப்புகளுக் கிடையேதான் பெருந் தலைவர் காமராஜர் இந்திரா காந்தியைப் பிரதமர் ஆக்கினார். அவரது சீடரான மூப்பனாரோ-எவ்வித சர்ச் சைகள்-சிக்கல்களுக்கும் இடம் தராது- இந்திராகாந்தி கொல்லப்பட்ட 24 மணி நேரத் துக்குள் ராஜீவைப் பிரதமர் ஆக்குவதில் வெற்றி கண்டு- காங்கிரஸ் வரலாற்றிலும் ஒரு புதிய சாதனையைப் படைத்தார்.

கர்நாடக சங்கீதத்தின் மீது அவருக்கு இருந்த லயிப்பு காரணமாக திருவையாறு தியாகப்பிரும்ம மகோத்சவ சபையின் தலைவராக சிறப்பாக பணியாற்றினார்.

இசையில் மட்டும்தானா- இலக்கியத்தி லும் மூப்பனாருக்கு எவ்வளவு ஈடுபாடு உண்டு என்பதை கல்கி நூற்றாண்டு விழா நிரூபித்துக் காட்டுவதாக அமைந்தது. ஓராண்டுக்காலம் தொடர்ந்து தமிழகத்தின் பல்வேறு மாவட் டங்களிலும்- இந்தியாவின் பல்வேறு மாநிலங் களிலும் நடைபெற்ற கல்கி நூற்றாண்டு விழாக் கூட்டங்கள்- பேராசிரியர் கல்கி அவர்களின் படைப்பாற்றலுக்குப் புகழாரம் சூட்டும் விழா வாக மட்டுமின்றி இலக்கிய வளர்ச்சிக்கு- பேரு தவியாகவும்- பெருமுயற்சியாகவும் அமைந்தது. கல்கி நூற்றாண்டு விழாவின் முதல் கூட்டத்தி லிருந்து. ஆண்டின் நிறைவில்- சென்னையில் நடைபெற்ற சிறப்பு மிக்க நிறைவு விழா வரை யில்- நூற்றாண்டு விழாக் கமிட்டியின் தலை வராக இருந்து- ஓராண்டுக்காலமும் நூற் றாண்டு விழா நிகழ்ச்சிகள்- தமிழிலக்கிய வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பதிவாகி மின்னும் அளவுக்கு நடைபெற எல்லா விதத்தி லும் தமது ஒத்துழைப்பையும், உதவியையும் தந்து- கல்கி வாசகர்கள்- இலக்கிய ஆர்வலர் கள் எல்லோரது நெஞ்சங்களிலும் நீங்காத இடம் பெற்றவர் மூப்பனார்!

தமிழகப் பொது வாழ்வு - வெறுப்பு- விரோதம்-கசப்பு-காழ்ப்புணர்வுகளின் இருப்



பிடமாகவே மாறிவிட்ட சூழ்நிலையிலும்- எல்லாக் கட்சித் தலைவர்களிடமும்- தமக்கு எதிராகச் செயல்படும் தலைவர்களிடமும் கூட அன்போடு பழகி- பண்புக்கு இலக்கணம் வகுத்தவர் மூப்பனார்! பொது வாழ்வில் நேர்மை-தூய்மை-வாய்மை நிலவ வேண்டும் என்று அவர் விரும்பினார்; தமிழகத்தில் காமராஜர் பெயரால்- மீண்டும் காங்கிரஸ் ஆட்சியை நிறுவ வேண்டும் என்று ஆசைப்பட்டார்; அவரது ஆசைகள்-குறிக்கோள்கள் நிறைவேறுமா? நிறைவேற்றி வைக்கும் வகையில் அவரது தொண்டர்கள் ஒற்றுமையுடன் செயல்படுவார்களா என்பதைப் பொருத்திருந்துதான் பார்க்க வேண்டும். எனினும் மூப்பனாரின் பெயரும் புகழும் தமிழக வரலாற்றிலும் காங்கிரஸ் வரலாற்றிலும் நிலைத்து நிற்கும்; அவரை நினைவுபடுத்திக் கொண்டே இருக்கும்.

த.மா.கா. இனி என்ன ஆகும்?

'தலைவர்கள் வாழ்வதில்லை; தத்துவங்கள்தான் வாழ்கின்றன' என்று சொல்வார்கள். எதேச்சதிகாரமான ஒரு முடிவை காங்கிரஸ் தலைமை திணிக்க முயன்றபோது, அதை எதிர்த்து துவக்கப்பட்ட கட்சிதான் த.மா.கா. ஆனால் யாருடன் கூட்டு சேருவதை எதிர்த்து தனிக் கட்சி துவக்கப்பட்டதோ, அதற்கு முரணாக, அதே கட்சியுடன் கூட்டணி வைத்து தேர்தலில் போட்டியிட்டார் மூப்பனார். 'காமராஜர் ஆட்சி அமைப்போம்' என்ற கோஷம் த.மா.கா.வைப் பொறுத்த மட்டில் வெறும் வாய்ப் பந்தலாகப் போய்விட்டது.



காங்கிரஸுக்கும் த.மா.காவுக்கும் எந்த வேறுபாடும் கிடையாது. த.மா.காவிலும் கோஷ்டிகள் உண்டு.

கடைசி முறையாக மூப்பனார் தில்லிக்குச் சென்றபோது சோனியா காந்தி அவருக்கு அன்புடன் இட்ட கட்டளை 'அக்டோபர் இரண்டாம் தேதிக்குள், காங்கிரஸுடன் வந்து இணைந்துவிட வேண்டும்' என்பதுதான். அது பற்றிப் பேசி முடிவு எடுப்பதற்குள், மூப்பனாரின் உடல்நிலை மோசமாகப் போய்விட்டது. ''காங்கிரஸில் இணைந்தால் தாங்களும் பத்தோடு, பதினொன்றாக ஒரு கோஷ்டி போல் இயங்க வேண்டும். எதற்கெடுத்தாலும் தில்லிக்குக் காவடி எடுக்க வேண்டும்'' என்ற பயம் காரணமாகவே த.மா.கா.வினர் காங்கிரஸில் இணைய தயக்கம் காட்டுகிறார்கள்.

மூப்பனாருக்கு அடுத்தபடியாக தேசிய அளவிலும், தெரிந்த ஒரே தலைவர் சிதம்பரம்தான். அவரது தலைமையில், தனியாக இயக்கம் நடத்தி, காங்கிரஸுடன் இணக்கமாகச் செயல்படலாம் என்று பிரமுகர்கள் சிலர் கருதுகிறார்கள். ஆனால் மூப்பனாரைச் சுற்றி இருந்த சில பிரமுகர்களுக்கு, சிதம்பரம் என்றாலே வேப்பங்காய். தங்களுடைய சில முடிவுகளுக்கு மூப்பனாரை உட்படுத்திய கோஷ்டி அது. உதாரணமாக, ஒரு சில மாவட்ட தலைவர்களை மாற்ற வேண்டும் என்று பிரஷர் கொடுத்து மொத்தமாக எல்லா நிர்வாகிகளையும் தூக்கிவிட்டது இந்தக் கோஷ்டி. உண்மையாகப் பார்க்கப் போனால் கட்சி அமைப்பே இப்போது கிடையாது. இதே கோஷ்டி, கோவிந்தவாசனைத் தலைவராகப் போட்டு, தொடர்ந்து தனியாக இயக்கம் நடத்தும் முயற்சியில் இறங்கியிருக்கிறது. கோவிந்தவாசன் அரசியலுக்குப் புதியவர். இன்னும் பல அனுபவங்கள் பெற வேண்டியவர். அவரைத் தங்கள் கைப் பிடிக்குள் போட்டுக் கொண்டு தங்கள் ஆசைகளையும் முடிவுகளையும் திணித்துக் கொள்ளலாம் என்பது இந்தக் கோஷ்டியின் திட்டம்.

''காங்கிரஸ் – த.மா.கா. இணைப்பு பற்றிப் பேச இது சரியான தருணம் அல்ல'' என்று சோனியா வெளிப்படையாகச் சொல்லியிருக்கிறார். ஆனால் உடனடியாக இல்லாவிட்டாலும் அடுத்த ஒரு மாதத்துக்குள் காங்கிரஸில் இணைந்துவிட வேண்டும் என்று அவர் 'அன்அஃபிஷியலாக'ச் சொல்லிவிட்டுச் சென்றிருக்கிறாராம்.

''மூப்பனார் எதிர்காலத்தில் தம்பியை (வாசன்) தமது வாரிசாகக் கொண்டுவர இருந்தார். மருத்துவமனையில் நன்றாகப் பேசும் நிலையிலிருந்தபோது தமது மகனிடம் அவர் விருப்பப்படி மாநில, மாவட்ட நிர்வாகிகளைப் போட பெயர்களைக் கேட்டார். எனவே காங்கிரஸில் இணைவதில் அவருக்கு விருப்பமில்லை.'' என்று ஒரு செய்தி பரப்பப்பட்டு இருக்கிறது.

''பேசாமலேயே பல அரசியல் மாற்றங்களுக்கு வழி காட்டியவர் மூப்பனார். இனி த.மா.கா. தனித்து இயங்கி சாதிக்க வேண்டியது எதுவும் இல்லை. தேசிய நீரோட்டத்தில் கலந்து விடுவதுதான் தமிழ்நாட்டுக்கும் நல்லது. மகன் தலைமையில் இதைத் தனி இயக்கமாகத் தொடர்ந்து நடத்துவது என்பது சிலருக்கு 'வர்த்தகமாக' இருக்கலாமே தவிர நாட்டுக்கு எந்த நன்மையும் இருக்காது'' என்கிறார் மூத்த தலைவர் ஒருவர்.

— கௌசி

பகவான் கிருஷ்ணரின் பகவத் கீதைக்கு
'ஓஷோ' அவர்களின் மகத்தான விளக்கவுரை

பகவத்கீதை ஒரு தரிசனம்

ஓஷோ

		ரூ.பை
அத்தியாயம் மூன்று	– கர்ம யோகம்	135.00
அத்தியாயம் நான்கு	– ஞான கர்ம சன்யாச யோகம்	300.00
அத்தியாயம் ஐந்து	– கர்மசன்யாச யோகம்	150.00
அத்தியாயம் ஆறு	– தியான யோகம்	350.00
பஜகோவிந்தம்	– அச்சில்	

அத்தியாயம் 7 முதல் 18 வரை முடிய மீதி அத்தியாயங்கள்
ஒன்றன் பின் ஒன்றாக வெளிவரும்.

வெளியீடு :

அதீத பப்ளிகேஷன்

உப்பனூர் ஏரி, தளி – 635 118.
தொலைபேசி : (04347) 34190

பூரண விநியோகஸ்தர்கள் :

கவிதா பப்ளிகேஷன்

த.பெ. எண் : 6123, நெ. 8, மாசிலாமணி தெரு,
(பிரில்லியண்ட் டுடோரியல் அருகில்) தி. நகர், சென்னை–600 017.
தொலைபேசி : 436 4243 ஈ–மெயில் : kavitha_publication@yahoo.com

V.P.P. கிடையாது. நூல்கள் வேண்டுவோர் 'கவிதா பப்ளிகேஷன்' என்ற பெயருக்கு D.D. அல்லது M.O. செய்யவும். புத்தக விலையுடன் பதிவுத் தபால் கட்டணம் ரூ 25.00 சேர்த்து அனுப்பவும்.

ஓ, வைஷ்ணவா! இது உனக்கு வசந்த காலம்! மற்றுமொரு ஐயங்காராத்து கதை. அதுவும் மணிரத்னம் யூனிட்டிலிருந்து! குறைகள் தென்பட்டால் மன்னிப்பாயாக. The manner of giving is worth more than the gift.

ஒரே வீட்டில் இரண்டு நிறைமாத கர்ப்பிணிகள். ஒருத்தி உற்சாகமாக இருக்க, மற்றவர் விரக்தியாக இருக்கிறார். ஏன் என்பதுதான் 'அன்புள்ள சினேகிதியே'யின் கதையாக இருக்கும். குடும்பத் தலைவியாக வரும் மனோரமா ஒரு குதூகல மூட்டை. கணவன்மார்களிடமிருந்து வந்த கடிதங்களுடன் மாடிக்கு ஓடும் அவர்களைப் பார்த்து, "என்னடி எழுதியிருக்கான் நம்ப பையன்? எனக்குப் படிச்சுக் காட்டுங்கோடி!" என்று இவர் கூப்பிடக் கூப்பிட, காதில் வாங்காமலே அவர்கள் போக, 'நிறைமாசப் பிள்ளைத்தாய்ச்சிகள் குடுகுடுன்னு என்னமா - ஓடறதுகள்!' என்று மோவாயில் கைவைத்துக் கொண்டு சிரிக்கும் அழகே அழகு.

மெதுவாக நகரும் தொடர். போகப் போகப் பெருமாள் திவ்யமா அம்சிப்பார். (அம்சிப்பார் = அமுது செய்வார்.)


புசுபுசுவென்று முடி வளர்ந்த கம்பீரமான மார்பைக் காட்டிக் கொண்டு, கட்டு மஸ்தான தேகத்துடன் வந்தவாசி எம்.எல்.ஏ. முருகவேல்ராஜன் சட்ட மன்றத்தில் பிரவேசிக்கும் காட்சி (ராஜ் செய்திகள்) பலவீன இருதயம் படைத்தவர்களுக்கு மாரடைப்பு ஏற்படுத்தியிருக்கும். தமது குறைகளை அரசின் கவனத்துக்குக் கொண்டு வருவதற்காக அப்படிச் செய்தாராம்!

முதலமைச்சர் உடனே கவனிக்க வேண்டும் இவர் பிரச்னையை. ஏனெனில் டெகல்கா அழகிகள் விவகாரத்துக்குப் பிறகு நோக்கம்தான் முக்கியம் என்றும், end justifies the means என்றும் சிலர் நியாயம் கற்பிக்கத்

• 'அன்புள்ள சினேகிதியே'



வைஷ்ணவருக்கு



தொடங்கியிருக்கிறார்கள். ஆகவே முருகவேல்ராஜனின் குறைகளை விரைவாகத் தீர்க்காவிட்டால், இன்று சட்டை இல்லாமல் வருகிறவர், நாளை அடுத்த கட்டப் போராட்டத்தை எப்படி நடத்துவாரோ என்று பயமாயிருக்கிறது.

பாசமும் பற்றும் ஆசையும் அரவணைப்பும் கொண்டவராக, போராடிப் போராடி முன்னுக்கு வருபவராக இருந்ததால்தான் 'சித்தி' எல்லாரையும் கவர்ந்தார். ஆனால் சமீப வாரங்களாக, தேவையில்லாத கண்டிப்பும் வறட்டுத்தனமான கடுமையும் கொண்டவராக ராதிகாவின் கேரக்டர்

மாறி வருகிறது. அனுதாபத்தை இழக்கவைக்கும் அபாயம் இது.

Point of no return வராதபடி சித்திபுத்தி விநாயகர் காப்பாராக.

Teen is an awkward age when a child is too old to say something cute and too young to say something sensible என்று ஒரு குறும்புக்காரர் சொன்னார். ஆனால் புத்திசாலித்தனமாகப் பதில் கொடுப்பதில் டீனேஜருக்கு ஈடு கிடையாது என்பது 'தலைமுறை இடைவெளி' பற்றிய வழக்காடு மன்றத்தில் நிரூபணமாயிற்று.

'அப்பா அம்மாவிடம் பாக்கெட் மணி பறித்துக் கொண்டு போய், வீண் செலவுகள் செய்து கெட்டுப் போகிறீர்கள்' என்று ஒரு குற்றச்சாட்டை வீசினார் பெற்றோர் தரப்பிலிருந்து ஒருவர்.

'பிறந்த குழந்தையைப் பார்க்கப் போகிற நீங்கள் அதன் கையில் ஒரு நூறு ரூபாய் நோட்டைக் கொடுத்து, பிஞ்சுப் பிராயத்திலேயே பாக்கெட் மணி பழக்கத்தை ஆரம்பித்து வைக்கிறீர்கள்' என்று ஓர் இளைஞர் பதிலளித்தார்.

உஷார் காலம்!





• சுஜாதா


அடியும் பதிலடியுமாய் அமர்க்களமாக இருந்தது, 'பணம்' என்ற இந்த நிகழ்ச்சி. ஆனால் யாருமே முழுசாகப் பேசாமல் ஆளுக்கு ஒன்று சொன்னதால் சீரியஸ்னஸ் பற்றாக்குறை; கேலியும் கிண்டலும் ஓவர் டிராப்ட்.

கிராபிக்ஸ் என்றால் கிலோ என்ன விலை என்று கேட்பவர்கள் இப்போதெல்லாம் யாரும் கிடையாது. Ask any commoner அழகாக விளக்குவார். இருந்தாலும் கிராபிக்ஸைப் பற்றிய தகவல்களை 'ஸன்' டி.வியில் கேட்டபோது சுவாரஸ்யமாகவே இருந்தது.

பத்தே நடிகர்களை வைத்துக் கொண்டு பத்தாயிரம் பேர் கொண்ட பிரம்மாண்டக் கூட்டமாகக் காட்ட கிராபிக்ஸ் உதவுகிறது என்றார் ஒரு டைரக்டர். ஒரு கூடை ரோஜாப் பூவை வைத்து ஒரு ரோஜாத் தோட்டத்தையே சிருஷ்டிக்க முடிந்தது என்றார் இன்னொரு டைரக்டர். பக்திப் படங்களின் காலம் மலையேறிவிட்டது என்று எண்ணியிருந்த சமயத்தில், கிராபிக்ஸ் உத்திகளினால் அவைகளுக்குப் புது மவுசு கிடைத்திருக்கிறது என்றார் மற்றொருவர். இவர்களுடைய பேச்சுக்கு ஆதாரமாக நடுநடுவே காட்டப்பட்ட கிராபிக்ஸ் காட்சிகள் பிரமிப்பை உண்டாக்கின.

என்ற போதிலும், பொய்யான தோற்றங்களையும் பொய்யான மனிதர்களையும் இப்படிக் காட்டிக் கொண்டே போனால் நிஜத்துக்கு மதிப்பில்லாமல் போய்விடும் என்றும், அது ஆபத்து என்றும் எச்சரிக்கைக் குரல் கொடுத்த சுஜாதாவின் கருத்துதான் உண்மையாகப்பட்டது. One should know when to stop and where to stop.

வினோத்



2001 செப்டெம்பர் 9
விஷு ஆவணி 24
மலர் : 60
இதழ் : 6

கல்கி




தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.

ஏர்வாடிக்கு வெளியேயும் மனநோயாளிகள்!

மும்பையை அடுத்துள்ள தானேயில் ஒரு தனியார் மருத்துவமனையை எரித்துச் சாம்பலாக்கி விட்டார்கள் சிவசேனா தொண்டர்கள்! காரணம்...? தானே பகுதியின் சிவசேனா தலைவர் ஒருவர், சுனிதி தேவி சிங்கானியா மருத்துவமனையில் இறந்து போனார் என்பதுதான்! மரணமடைந்த ஆனந்த் திகே, ஒரு விபத்தில் கால் முறிவு ஏற்பட, சிகிச்சை பெற்று வந்தார் அந்த மருத்துவமனையில். திடீரென்று அடுத்தடுத்து இருமுறை ஹார்ட் அட்டாக் ஏற்பட, அவர் உயிர் பிரிந்திருக்கிறது.

மரணத்துக்கு மருத்துவமனை மீது பழிபோட்டு, தனது கைவரிசையைக் காட்டி விட்டது சிவசேனா. மருத்துவமனையில் படுத்திருந்த நோயாளிகள், பரிதாபகரமாக உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு ஓடியிருக்கிறார்கள். ஓட முடியாமல் படுத்திருந்த பலர், ஏற்கெனவே இருந்த நோயுடன் தீக்காயங்கள் வேறு ஏற்பட்டு துடித்துக் கொண் டிருக்கிறார்கள். மருத்துவமனையைப் புனர்நிர்மாணம் செய்யச் சில மாதங்கள் ஆகும், பல லட்ச ரூபாய் செலவும் ஆகும்.

தங்கள் வன்முறைப் படையின் அக்கிரமத்தைக் கண்டிக்கும் விதமாகவோ தடுத்து நிறுத்தும் விதமாகவோ சிவசேனா தலைவர்கள் ஒரு வார்த்தை கூட பேசவில்லை என்னும் போது அவர்களிடமிருந்து நஷ்டஈடையா எதிர்பார்க்க முடியும்? பாதிக்கப்பட்ட



அப்பாவி நோயாளிகளுக்கு உதவும் மனிதநேயத்தையா எதிர்பார்க்க முடியும்...?


இறந்து போன திகே, தானே பகுதியின் 'தானை'த் தலைவராயிருந்தார். தடா சட்டத்தின் கீழ் கைதாகி (ஒரு கொலை வழக்கில் குற்றம்சாட்டப் பெற்று) சிறையிலிருந்தவர்.

அப்படிப்பட்ட தலைவருடைய தொண்டர்கள் எத்தகையவர்களாக இருப்பார்கள் என்று கூறத் தேவையில்லை.

'சிவ சேனை' என்று இறைவனின் பெயரால் அணியமைத்து அசுரத்தனமான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிற போக்கு, கேட்பாரின்றித் தொடர்கிறது. மும்பையின் காவல் துறையும் இந்த அழிவுப் படையை எதிர்க்கத் துணிவின்றி அடங்கிப் போய்க் கிடக்கிறது. நடந்த கொடூரங்களில் தலையிட்டுத் தடுக்கக் கூடாது என்ற சிவசேனா ஆணையை வெகு சீரியஸாக எடுத்துக் கொண்டு கைகட்டி வேடிக்கை பார்த்திருக்கிறது!

காவல் துறை தலையிட மறுத்து வேடிக்கை பார்த்த மற்றும் ஒரு கோர சம்பவம் குஜராத்தில் நடந்திருக்கிறது. மத்தியப் பிரதேசத்திலுள்ள ஒரு அனாதை ஆசிரமத்திலிருந்து சாலை வழியே குஜராத் வந்த மூன்று கன்யாஸ்த்ரீகளும், அவர்களுடைய வாகனங்களை ஓட்டி வந்த ஓட்டுனர்களும் அடித்து நொறுக்கப்பட்டிருக்கிறார்கள். காவல் துறையின் பரிபூரண கண்காணிப்பில் இக் கைங்கர்யத்தைச் செய்வித்தனர் பஜ்ரங் தளம் மற்றும் விச்வ ஹிந்து பரிஷத் அமைப்பைச் சேர்ந்த பித்தர்கள்!

உள்ளூர் வி.எச்.பி. தலைவரின் பெட்ரோல் பங்க் ஒன்றில் குழந்தைகளைக் கழிப்பறைக்கு அழைத்துச் சென்றதற்காக கன்யா ஸ்த்ரீகள் பெற்ற தண்டனை இது! ஊரை விட்டு உடனடியாகச் சென்று விடும்படி மிரட்டி, அவர்களை அடிக்க ஆரம்பித்திருக்கிறார்கள் வி.எச்.பி, பஜ்ரங் தள்காரர்கள் - ஒரிருவர் அல்ல... முப்பது



பேர்!

அவ்வழியே சென்ற ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டரிடம் கன்யா ஸ்த்ரீகள் உதவி கேட்க, அவர் பஜ்ரங் தள தலைவரைக் கண்டதும் நழுவி விட்டார்! காவல் நிலையம் சென்று புகார் கொடுக்க முற்பட்டால், அதைப் பதிவுசெய்யவே மறுக்கிறது உள்ளூர் போலீஸ்!

இந்தச் சம்பவமும் அனைத்திந்திய அளவில், எந்த அரசியல் தலைவருடைய கவனத்தையோ கண்டனத்தையோ பெறாமல் போயிருக்கிறது!

பாரதத்தின் பழம்பெரும் மதம் ஹிந்து மதம். அதன் உயர்வும் பெருமையும் அதன் பரந்த மனப்பான்மைதான்; பிற மதங்களையும் மதிக்கும் அதன் கோட்பாடுதான். அத்தகைய உன்னதமான மதத்தின் பெயரால் சகிப்புத்தன்மை துளியும் அற்ற அராஜகங்களும் அசிங்கங்களும் நடக்க அனுமதித்து விட்டுப் பேசாமல் பார்த்துக் கொண்டிருப்பது பேரபாயமான காரியம்.


வி.எச்.பி, சிவசேனா போன்ற ஹிந்துத்வ சார்புடைய அமைப்புகளின் போக்கு இவ் விஷயத்தில் மிக மோசமான பாதையில் தொடர்ந்து கொண்டிருக்கிறது. மக்களை வோட்டு வங்கிகளாக மட்டுமே பார்த்துப் பழகிவிட்டனர் அரசியல்வாதிகள். மத உணர்வுகளைத் தூண்டி விட்டு ஆதாயம் காண முயலும் அரசியல் விளையாட்டுகள் நோயுற்ற மனத்தின் வெளிப்பாடு.

இரு நிகழ்ச்சிகளிலும் மத்திய அரசின் உடனடித் தலையீடும் கண்டனமும் சட்டரீதியான நடவடிக்கையும் தேவைப்படுகின்றன. குறைந்தபட்சம், கண்டனமாவது உடனடியாகத் தெரிவிக்க வேண்டாமா...? பிரதமரும் உள்துறை அமைச்சரும் தாங்கள் 'ஹிந்துத்வா' தலைவர்கள் அல்ல; பாரத நாட்டின் தலைவர்கள் என்பதை உணர்ந்து செயல்படட்டும். ○

டாக்டருக்குத் தலைவலி!

• தே.ஜ.மு.யில் அடித்து-பிடித்துச் சேர்ந்து விட்டாலும் டாக்டருக்குத் தலைவலி தொடர்கிறது. இப்போது அவர் முன் உள்ள பிரச்னை, யாரை அமைச்சராக்குவது என்பதுதான்.





பொன்னுசாமியும், எஸ்.டி. சண்முகமும் அமைச்சரவையில் ஏற்கெனவே பொறுப்பு வகித்தவர்கள். ஆனால் ஆதரவை வாபஸ் வாங்கிவிட்டு மீண்டும் திரும்பி வந்ததன் காரணமாக, ஒரே ஒரு அமைச்சர் பொறுப்பு மட்டும்தான் கொடுக்க முடியும் என்று பிரதமர் சொல்லி விட்டாராம். அந்த ஒன்றை யாருக்குக் கொடுப்பது? சீனியர் என்ற முறையில் பு.தா. இளங்கோவன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார். தமக்குக் கொடுக்காவிட்டால் அவர் அதிரடியான முடிவைக் கூட எடுப்பார் என்று சொல்கிறார்கள். ஏ.கே.மூர்த்தியை போடலாமென்பது டாக்டர் மகனின் விருப்பம். ஏனென்றால் டாக்டர் எள் என்றால் எண்ணெயாகி சிப்ஸ் ஆகிவிடுவார் மூர்த்தி. சண்முகத்துக்கு மீண்டும் அமைச்சர் வாய்ப்பு கிடைப்பது சிரமம் என்கிறார்கள். காரணம் முன்பு அமைச்சர் பொறுப்பில் அவரது செயல்பாடுகள் திருப்திகரமாக இல்லையாம். ஆனால் ஒரு விஷயத்தில் எல்லோரிடமும் ஒற்றுமை இருக்கிறது. அதாவது பொன்னுசாமிக்கு மீண்டும் அமைச்சர் பொறுப்பு கொடுக்கப்படக் கூடாது என்று ஒரே குரலில் சொல்கிறார்கள். இருந்தாலும் டாக்டருக்குப் பொன்னுசாமியின் மேல் ஒரு தனிப்பிடிப்பு இருக்கிறது.

• அக்டோபரில் உள்ளாட்சித் தேர்தல்கள் நடக்குமா? குழப்பத்தில் இருக்கிறார் ஜெயலலிதா. டான்ஸி விவகாரத்தில் கிளியர் ஆகும் பட்சத்தில் அக்டோபரில், தேர்தல் நடத்தி எம்.எல்.ஏ. ஆவது, ஜெ.வின் திட்டம். ஆனால் இப்போது, டான்ஸி வழக்குகளில் தீர்ப்பு தள்ளிப் போய் விடும்! ஆறு மாதம் கழித்து, கொஞ்சம் இடைவெளிவிட்டு, எம்.எல்.ஏ. ஆகாமல் மீண்டும் முதல்வர் ஆவதும் இனி சாத்தியமில்லை. தம்முடைய விவகாரத்தை ஒத்தி வைத்து விட்டு, சூட்டோடு சூடாக அக்டோபரிலேயே உள்ளாட்சித் தேர்தலை நடத்தி விடலாம் என்ற யோசனையும் தீவிர பரிசீலனையில் இருக்கிறது. அதாவது நகராட்சி, மாநகராட்சி தேர்தல்களை மட்டும் ஒத்தி வைத்துவிட்டு, கிராமப்புற வாக்காளர்கள் பெரும்பாலோர் ஓட்டுப் போடும் மாவட்டப் பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன், கிராம பஞ்சாயத்து ஆகியவற்றிற்கு மட்டும் தேர்தல்களை நடத்த இருக்கிறார்களாம். தமது கட்சித் தொண்டர்களுக்கு அதிகமான அளவில் உள்ளாட்சிகளில் இடம் கிடைக்க வேண்டுமென்று, தனித்துப் போட்டியிடும் முடிவைக் கூட ஜெயலலிதா எடுக்கலாம் என்று கிசுகிசுக்கப்படுகிறது.

• அறிவாலயத்தில் பேராசிரியர் அன்பழகன் அறையை இடித்துவிட்டு அந்த இடத்தில் மாடர்ன் வசதிகளுடன் பத்திரிகையாளர் சந்திப்பு அரங்கம் கட்டப்பட்டு வருகிறது.

— சஞ்சயன்

கல்கி கிருஷ்ணமூர்த்தி நினைவு அறக்கட்டளை

அன்புடன் அழைக்கிறது.



அமரர் கல்கி பிறந்த நாள் விழா

09.09.2001

(ஞாயிற்றுக் கிழமை)

மயிலை, பாரதிய வித்யாபவன் அரங்கம்
மாலை 6:00 மணி.

கல்கி கிருஷ்ணமூர்த்தி நினைவுப் பரிசும் விருதும் பெறுபவர்:

இளம் இசைக் கலைஞர் டி.எம். கிருஷ்ணா.

தலைமை:

திருமதி ராஜலக்ஷ்மி ஒய்.ஜி. பார்த்தசாரதி
(பத்மாசேஷாத்ரி கல்வி நிறுவனங்களின் தலைவர்)

மாலை 6.45 மணி: **இன்னிசைக் கச்சேரி:**

டி.எம். கிருஷ்ணா	: பாட்டு
எஸ். வரதராஜன்	: வயலின்
கே. அருண் பிரகாஷ்	: மிருதங்கம்
பி.எஸ். புருஷோத்தம்	: கஞ்சிரா

அனைவரும் வருக!

யானைக்குப் பிடிக்காத கலர்!

உலகில் உள்ள ஜீவராசிகளிலேயே ஒட்டகச் சிவிங்கியின் இதயம்தான் மிகப் பெரியது. அதன் இதயம் இரண்டடி நீளம் உள்ளது. இதயத்தின் சுவர்கள் மிகவும் தடிமனானவை. இவ்வளவு பெரிய இதயம் இருப்பதால்தான் அதன் நீண்ட, உயர்ந்த கழுத்துக்கு ரத்தத்தை 'பம்ப்' செய்ய முடிகிறது.

- இரா. சக்கரபாணி, மதுரை.





தமிழ்நாட்டில் அ.தி.மு.க. ஆட்சியில் சட்டமன்றத்தில் சபாநாயகராக இராசாராம் இருந்தார். ஒரு சமயம், சட்டமன்றத்தில் தி.மு.க. உறுப்பினர் ரகுமான்கான் மானியக் கோரிக்கைமீது பேசிக் கொண்டிருந்தார். நேரம் அதிகமானதை உணர்ந்த சபாநாயகர், மணியை அடித்து, ரகுமான்கானை உட்காரச் சொன்னார்.

ரகுமான்கான் பேச்சை நிறுத்தாமல் பேசிக் கொண்டிருந்தார்.

சலித்துப் போன சபாநாயகர், ரகுமான்கானைப் பார்த்து "உங்களை உட்கார வைக்க ஆண்டவனால் தான் முடியும். என்னால் முடியாது" என்று கூறினார். உடனே கலைஞர் எழுந்து ரகுமான்கானைப் பார்த்து "உட்காருங்கள்" என்றார். ரகுமான்கான் உட்கார்ந்துவிட்டார். கலைஞரைப் பார்த்து 'உங்களுக்கு நன்றி' என்றார் சபாநாயகர்.


'ஆண்டவனால்தான் முடியும் என்றீர்களே. அதனால் நீங்கள் கூறியதற்கேற்ப, நான் அவரை உட்கார வைத்தேன். காரணம், நான் இந்த நாட்டை இதற்கு முன்னர் ஆண்டவன்' என்றார் கலைஞர்.

- கடற்கரை நடேசன், சின்னமனூர்.

உலகின் மிகப் பெரிய அரண்மனை புருனை சுல்தானுடையது. இங்கு 1785 அறைகள், 287 குளியலறைகள், 110 காரேஜ் உள்ளன.

நீங்கள் கோபப்பட்டால் 64 தசைகளும், சிரித்தால் 18 தசைகளும் முகத்தில் வேலை செய்கின்றன.


- கே. ராஜேந்திரன், திருவண்ணாமலை



தித்தித்தது. 'த' வரிசையிலேயே அமைந்த வார்த்தை இது. இதைப்போல் ஒரே எழுத்து வரிசையில் அமைந்த, இதைவிட அதிக எழுத்துக்கள் உள்ள வார்த்தை உள்ளதா?

- ஆர். கமலா, பொள்ளாச்சி


“**யா**ரங்கே, கை இரண்டையும் பின்னால் கட்டிட்டு நிக்கறது யமதர்மராசா இதை அவமரியாதைன்னு நெனச்சுக்குவார்'' என்று பக்தர்களில் ஒருவரை நோக்கி எச்சரிக்கிறது பூசாரியின் குரல். யமனுக்குக் கோவிலா? ஆம், தனிக் கோவில். கோவையை அடுத்த வெள்ளலூர் வயல்காட்டுப் பகுதியில்.



கோவில் வட்ட வடிவம். விமானமும் அப்படியே. நுழைவாயிலில் கணேசர். அடுத்து காவல் தெய்வம் ஆண்டிச்சி அம்மன் - யமன் செக்ரடரி சித்ர குப்தனின் ஸிஸ்டர். சித்ர குப்தன் இடது கையில் ஏடு, வலது கையில் எழுத்தாணி, நம்மைப் பற்றி குறிப்பெழுத! பெண்கள் பூஜா மண்டபம் வரை அனுமதி. ஆண்கள் கர்ப்பக்கிரகம் வரைபோகலாம். அங்கே, எருமைக்கிடா மீது தெற்கு நோக்கி அமர்ந்திருக்கிறார். ஒரு கையில் எருமை அடக்க அங்குசம், மறு கையில் நம் உயிரைக் கவரும் பாசக்கயிறு.


யமனுக்குப் பிடிக்காத கலர் கறுப்பு, பிடிக்காத பூ மல்லிகைப்பூ. பச்சரிசி, பானகம், நீர்மோர், நிவேதனப் பொருட்கள், வாழைப்பழம், வெல்லம், துலாபாரம். சித்ரா பௌர்ணமி மிகவும் விசேஷமான நாள்.

- க. மாரியப்பன், கோவை.



சென்னை தம்புச் செட்டித் தெருவில் 'எஸன்ஷியல் எம்போரியம்' என்ற கடைக்காரர் கடையின் பெயர் பலகையில் கூடவே அழகு தமிழில் 'இன்றியமையாப் பண்டகம்' என எழுதி வைத்துள்ளார்.

மடிப்பாக்கத்தில் ஒரு டூரிஸ்ட் கார் ஆபரேட்டர், தங்கள் பெயர்ப் பலகையில், 'சுற்றுலா வாகன ஏற்பாட்டாளர்' என அழகு தமிழில் எழுதி வைத்துள்ளார்.



- டி.என். பாலகிருஷ்ணன், சென்னை



வாயில் புண் ஏற்பட்டால் தேங்காய் எண்ணெய் அல்லது நல்லெண்ணெய் சிறிதளவு வாயில் ஊற்றிக் கொப்பளித்து, சிறிது நேரம் கழித்துத் துப்பிவிடுங்கள். ஒரு நாளைக்கு மூன்று நான்கு வேளை இம்முறையைப் பின்பற்றினால் வாய்ப்புண் குணமாகும்.

- பா. குணா



சிந்துவின் முகமதிப்பு

அபார அழகுடன் அறிமுகமாகும் எல்லோரும் சினிமாவில் ஜெயித்து விடுவதில்லை. 'தோற்றம் என்பது மாயை, திறமைதான் தேவை' என்று விதிவிலக்காக வெற்றிக் கொடி நாட்டுபவர்களும் அதிகரித்து வருகிறார்கள். "'சமுத்திரம்' படத்தில் நாயகியாக அறிமுகமாகும் சிந்து எந்த ரகம் என்று எடைபோட்டுச் சொல்ல முடியுமா?" என்று பிரபல தயாரிப்பாளர், இயக்குனர், ஒளிப்பதிவாளர், ஒப்பனைக் கலைஞர் ஆகிய நான்கு பேரிடம் கேட்க நினைத்து, கோடம்பாக்க ஸ்டுடியோக்களைச் சுற்றி வந்தோம். பிரசாத் ஸ்டுடியோ வளாகத்தில் பிஸி படப்பிடிப்பில் ஈடுபட்டிருந்த 'சாக்லேட்' பட டீம் நம் கண்களில் சிக்க, சிந்துவின் புகைப் படங்களைக் கையில் பிடித்தபடி களமிறங்கினோம்.

ஆர். மாதேஷ் - தயாரிப்பாளர் : போட்டி மிகுந்த உலகத்தில் 'ஃபேஸ் வேல்யூ' என்பது ஒரு தகுதியாகவே எல்லோராலும் எதிர்பாக்கப்படுகிறது. பொதுவாக ஒருமுறை பார்த்த மாத்திரத்தில், நம் மனக் கேமராவில் பதிந்துவிடுகிற முகங்களுக்கு ஃபேஸ் வேல்யூ இருக்கிறது என்று சொல்லிவிடலாம். இப்படி நம்மை பாதிக்கும் முகம், ரோஜாப்பூ நிறத்தில் கச்சிதமான அச்சில்








வார்த்ததுபோல் இருக்க வேண்டும் என்கிற அவசியமில்லை. உணர்ச்சியை வெளிப்படுத்தாமலேயே, இயல்பாக அந்த முகத்தில் உணர்ச்சி பாவம் எப்போதும் இருக்க வேண்டும்.

சினிமாவைப் பொறுத்தவரை அழகாக இருக்கிற எல்லோரும் ஆர்டிஸ்ட் ஆகிவிட முடியாது. உலக அழகி பட்டம் வென்ற பலர் சினிமாவில் ஜெயிக்க முடியாமல் தோல்வியைத் தழுவியிருக்கிறார்கள். அகல நெற்றி, கிளிமூக்கு உள்ள ஹேமமாலினி ஹிந்திப்பட உலகில் வெற்றிக் கதாநாயகியாக வலம் வந்தார். ஏற்கெனவே பிரபலமான ஒருவரைப்போல இருக்கும் மற்றொரு முகம் சினிமாவில் செல்லுபடியாகாது. திவ்யா பாரதி இறந்த பிறகு அவரைப் போலவே இருந்த ரம்பா வந்தார். வெற்றி கிடைத்தது. ஆனால் ரம்பாவைப் போல இன்னொருவர் வந்தால் வெற்றி பெற முடியாது. அதேபோல மெழுகு பொம்மை போன்ற தோற்றமுடையவர்கள் ஒரு படம் தாக்குப் பிடிக்கலாம். அவ்வளவுதான்.


சிந்துவைப் பொறுத்தவரை, மாடர்ன் உடையிலும் குடும்பப்பாங்கான தோற்றமே வெளித் தெரிகிறது. பக்கத்து வீட்டுப் பெண் மாதிரியான இவரது இயல்பான முகபாவம், நமது தென்னக ரசனைக்கு ஒத்துவரக் கூடியது.



* ஆர். மாதேஷ்



* ஏ. வெங்கடேஷ்











எனவே குடும்பப்பாங்கான பாத்திரங்களில் வலம் வந்தால் ரசிகர்களின் இதயங்களில் இடம் பிடிக்கலாம். கன்னத்தில் கைவைத்திடும் இவரது உடல்மொழியில் தனித்துவம் தெரிவதால், நல்ல நடிப்பை வழங்குவார் என்று நம்பலாம்.

ஏ. வெங்கடேஷ் - இயக்குனர் : நாயகர்களுக்கு இணையாக, எல்லா நாயகியராலும் நீண்ட காலம் நிலைத்து நின்று ஜொலிக்க முடியாததற்கு காரணம், தங்கள் முக அமைப்பிற்கு ஏற்ற பாத்திரங்களை தேர்வு செய்து நடிக்காததுதான். ஓர் இயக்குனர் என்ற முறையில், கதைக்குத் தகுந்த முகங்களே படத்தின் வெற்றிக்கு அடிப்படையாக அமையும் என்பது என் கருத்து. நாயகியரைத் தேர்வு செய்யும்போது, முதலில் கண்களைத்தான் பார்ப்போம். முகத்தில் காட்டக் கூடிய எல்லா உணர்ச்சிகளையும் முதலில் பிரதிபலிக்கக் கூடிய அங்கமாக கண் இருப்பதால், சாந்தமும், தீர்க்கமும் நிறைந்த நடுத்தரமான அளவு கொண்ட கண்கள் வாய்க்கப் பெற்றவர்கள் அதிர்ஷ்டசாலிகள் என்றே சொல்லிவிடலாம். கண்களை வைத்துப் பார்த்தால் சிந்துவுக்கு சென்டம் போட்டுவிடலாம். இவர் புன்னகை செய் கிறபோது கன்னக் கதுப்புகள் திரண்டு நிற்பது, இவரை அதிக சாந்தமாகக் காட்டுகிறது. அத்துடன் தமிழ்ப் பெண்ணுக்குரிய தோற்றமே அதிகம் ஆதிக்கம்




செய்வதால், இவர் கிளாமர் பாத்திரங்களைத் தவிர்ப்பதே நல்லது. காரணம் கிராமிய ஜாடையுள்ள நடிகைகள் கிளாமர் ரோல்களில் நடித்தால் ரசிகர்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

கண்ணை மூடிக் கொண்டு கிடைக்கும் எல்லா பாத்திரங்களையும் ஏற்றுக் கொள்வதை இவர் தவிர்த்தால், இவருக்கு எதிர்காலம் நிச்சயம் என்று சொல்லிவிடலாம். ஐம்பது விழுக்காடு அழகு, ஐம்பது விழுக்காடு நடிப்பு என்ற பாணியில் இவர் எளிதாக ஜெயிக்கலாம்.



• கே.எம். சம்பத்



• விஜய் டி.மில்டன்

விஜய் டி.மில்டன் - ஒளிப்பதிவாளர் :

தோற்றத்தில் பயமுறுத்துகிற எந்தப் பெண்ணையும் தேவதை போலக் காட்டிவிடலாம். அதுதான் ஒளிப்பதிவுக் கலையின் அற்புதம். ஆனால் போட்டோஜெனிக் தன்மை கொஞ்சமாவது அவசியம். அற்புத அழகுடன் விளங்கும் பலருக்கு போட்டோஜெனிக் தன்மை இல்லாமல் போய்விடுவது உண்டு. அப்படிப்பட்டவர்களைக் காப்பாற்றுவது, ஒப்பனை, உடை முக்கியமாக படம் பிடிக்கிறபோது கிடைக்கிற ஒளியின் அளவு போன்றவைதான்.

கேமராமேன் கோணத்தில் பார்க்கிறபோது சிந்துவிற்கு போட்டோஜெனிக் முகம் வாய்த்திருக்கிறது. இவரது ஸ்கின்டெக்ஸ்சர், குறைந்த ஒளியிலும் துல்லியமாகப் பதியுமா என்பதை ஸ்க்ரீன் டெஸ்ட் செய்தபின்பே சொல்ல முடியும். மற்றபடி, தமிழ்ச் சினிமாவில் ஒரு ரவுண்ட் வரும் வாய்ப்பு முகத்தில் தெரிகிறது.

கே.எம். சம்பத் - ஒப்பனைக் கலைஞர்:

சிந்துவின் முக அமைப்பு 'யூ' வடிவில் இருக்கிறது. ஆனால் நெற்றியின் அளவு சற்று அதிகம்தான். நெற்றியின் உயரம், மூக்கின் உயரம், மோவாய் உயரம் மூன்றும் ஒரே அளவில் இருந்தால் ஒப்பனை இல்லாத தோற்றமே அதிக அழகுடன் இருக்கும். சிந்துவின் மோவாய் அளவு, மூக்கு, நெற்றி அளவுகளைக் காட்டிலும் சற்று குறைவானதுதான் என்றாலும், குடும்பப் பாங்கான தோற்றம்தான் முதலில் தெரிகிறது. இவரை 'கலர் கட்டிங் மேக்கப்' மூலம் மாடர்னாக மாற்ற முடியும். இந்த மேக்கப்புக்கு இவரது அகலமான முகமும், நீளமான கூந்தலும் துணை செய்யும். இவரது கண்கள் போதுமான நீரோட்டத்துடன் இருப்பதால் 'ஐஷேடோ' மூலம் இன்னும் பவர்ஃபுல்லாக மாற்ற முடியும். புருவத்திற்கு மாற்றம் தேவையில்லை. அம்மனாக நடிக்கவும் இவர் கண்கள் உதவும். நடுத்தரமான இதழ்கள் என்பதால் பாத்திரத்திற்கு ஏற்ப அவற்றைக் கூர்மையாக்கிக் கொள்ளலாம். பற்களின் அமைப்பு முறை அருமை. புன்னகையைக் காட்டிலும், வாய் திறந்து சிரிப்பது இவரது முகத்தை மேலும் அழகாகக் காட்டும். உடம்பைக் கொஞ்சம் குறைத்துக் கொள்வது நல்லது. மாடர்ன் ரோல்களுக்கு 'ஷேடோ கட்டிங்' ஒப்பனையை இவர் தேர்ந்து கொண்டால் ஜொலிக்கலாம்.

சந்திப்பு : **விஷ்வல்தாசன்**

படங்கள் : **சங்கர் சத்தியமூர்த்தி**

துணிச்சல்

ஆகஸ்டு 12ம் தேதி தி.மு.க பேரணி விவகாரங்களுக்குப் பிறகு ஜெயஸ்ரீ என்ற பெயர் மேலும் பரவியிருக்கிறது. அந்த வன்முறையின்போது போலீஸார் மத்தியில் இவர் மட்டும் நின்று கொண்டிருந்த காட்சியை டீவியில் பலமுறை பார்த்துவிட்டோம். ஜெயஸ்ரீயை 'ஆஜ் தக்' அலுவலகத்தில் சந்தித்துப் பேசியபோது...


"நான் சென்னைப் பெண். மகளிர் கிறித்துவக் கல்லூரியில் ஆங்கில இலக்கியம் படித்தேன். பத்திரிகைத் தொழிலில் ஓர் ஈர்ப்பு இருந்துகொண்டே இருந்தது. அது வளர்ந்து கொண்டும் வந்தது. பட்டம் வாங்கியதும் டெல்லியில் 'இன்ஸ்டிடியூட் ஆஃப் மாஸ் கம்யூனிகேஷன்ஸ்'ல் சேர்ந்தேன். படிப்பே 'சாலஞ்சிங்'காக இருந்தது. வெளியே வந்ததும் 'ஸ்டேட்ஸ்மேன்' பத்திரிகையில் ஒன்றரை மாதங்கள் பணியாற்றினேன். அப்போது பிஸினெஸ் இண்டியா நிறுவனத்திலிருந்து 'டி.வி.ஐ' என்ற தொலைக்காட்சி சேனல் பிரபலமாகி வந்தது. இந்தியாவில், செய்திகளுக்கும், நாட்டு நடப்புகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்த முதல் சேனல் அதுதான். அதுதான் இத்துறையில் முன்னோடி என்று கூடச் சொல்லலாம். அதில் செய்திப் பிரிவில் சேர்ந்தேன். என்னைச் செய்திப் பிரிவில் ஒரு நல்ல பயிராக உருவாக்கிய நாற்றங்கால் டி.வி.ஐ. என்றால் தவறில்லை. இன்றும் கூட நான் அந்த நாட்களின் நினைவில் அமிழ்ந்து போவதுண்டு. ஆனால் பல காரணங்களால் டி.வி.ஐ தான் அடைய வேண்டிய உயரத்தை அடையாமல் நலிந்துபோய்விட்டது. நான் அதிலேயே தொடர முடியாமல் போனது வருத்தம்தான்'' என்றார்.

'ஆஜ்தக்' தொலைக்காட்சி ஜெயஸ்ரீயை அழைத்தது. சரியான இடத்தில் முன் அனுபவம், ஹிந்தி தெரிந்திருந்தது, துணிச்சலான தன்மை எல்லாம் ஜெயஸ்ரீயிடம் சேர்ந்திருந்ததுதான் அந்த அழைப்புக்குக் காரணம்.

கொஞ்ச நாள் டெல்லியில் இருந்த பின்பு, ஆஜ்தக்' சென்னையில் கிளை விரித்ததும் ஜெயஸ்ரீ இங்கே வந்தார்.

"சென்னையில் முதன்முதலில் நீங்கள் செய்த 'ஸ்டோரி' ஞாபகமிருக்கிறதா?"

"கற்றுக்குட்டி லெவலுக்கு அடுத்த லெவலில்தான் நான் அப்போது இருந்தேன். தமிழக அரசியலை ஆர்வமாகப் படித்துக் கொண்டிருந்தேன். முதன் முதலில் செய்த பெரிய ஸ்டோரி என்றால் சத்தியமூர்த்தி பவன் கொடும்பாவி எரிப்பு' அமர்க்களம்தான். காங்கிரஸிலிருந்து பிரிந்து, தமிழ் மாநில காங்கிரஸ், துவக்கப்பட்ட கால கட்டம் அது. சத்தியமூர்த்தி பவனில் நரசிம்ம ராவ் படத்தைக் கொளுத்தி, அதை செருப்பால் அடித்து... தொண்டர்கள் எதிர்ப்பு தெரிவித்தார்களே, அதுதான் நான் சென்னையில் செய்த முதல் பெரிய 'கவரேஜ்''



எதையும் சட்டென்று கிரகித்துக் கொள்ளும் கூர்மை, இயல்பாகவே அமைந்திருந்த ஆர்வம், டி.வி. ஜர்னலிஸ்டாகிவிட்ட பின்பு வந்தே தீர வேண்டிய துணிச்சல்... எல்லாமாகச்



ஸ்ரீ!

சேர்ந்து ஜெயஸ்ரீயை வெகுவிரைவில் தமிழக தனியார் சேனல் செய்தி நிருபர்களில் ஒரு குறிப்பிடத்தக்க இடத்துக்கு இட்டுச் சென்றன.

''தமிழக அரசியல் தலைவர்களில் கிட்டத்தட்ட எல்லோருக்கும் உங்களை அடையாளம் தெரியும். அவர்களைச் சந்திக்கும்போது அவர்கள் எப்படி உங்களை நடத்துகிறார்கள்?''

''நான் எப்போதும் என் மனத்தில் தோன்றுவதை, பட்டென்று கேட்டு விடுவேன். சில சமயங்களில் அது இக்கட்டான நிலையைத் தோற்றுவிக்கும். ஒன்று, அதற்கு பதில் சொல்லாமல் மழுப்புவார்கள். அல்லது கோபப்படுவார்கள்! 'ஆர்.எஸ்.எஸ் அமைப்புக்கு ஆதரவாக நீங்கள் பேசுகிறீர்களே!' என்று ஒருமுறை கலைஞரிடம் கேட்டேன். அவர் முகம் இலேசாக மாறியது. கோபத்தை அவ்வளவாக வெளிக்காட்டாமல் 'நான் அப்படிப் பேசுவதாக நீங்கள்தான் பேசுகிறீர்கள்' என்று சொல்லி நகர்ந்து விட்டார்.

'சேடப்பட்டி முத்தையா தம் பதவியை ராஜினாமா செய்ய வேண்டும்' என்று பேசப்பட்ட நேரத்தில் நான், மேடம் ஜெயலலிதாவிடம் ஒருமுறை 'கட்சித் தலைவர் பதவியை நீங்கள் ராஜினாமா செய்வீர்களா?' என்று கேட்டேன். அவருக்குக் கோபம் வந்துவிட்டது. 'என்ன கேள்வி இது? ராஜினாமா செய்யச் சொல்லி என் கட்சி எனக்கு உத்தரவிடவில்லை' என்று 'கள்'ளென்று விழுந்தார்.

மூப்பனார் எப்பவுமே ரொம்ப ஜாலியாகப் பேசுவார். சகஜமாக ஜோக் அடிப்பார். நாம் கேள்வி கேட்டால் பதில் சொல்வதைவிட எதிர்க்கேள்வி கேட்பது தான் அவருக்குப் பழக்கம். நானும் இன்னொரு பெண்ணும்தான் அவரிடம் ஏதாவது ஏடாகூடமாக அடிக்கடி கேள்வி கேட்போம். வழக்கமான பதில் கேள்விகள் கேட்டுவிட்டு 'பிரஸ் மீட்' முடிந்ததும் எங்களைத் தனியாகப் பார்த்து 'நீங்க ரெண்டு பேரும்தான் எடக்கு மடக்காகக் கேள்வி கேக்கறீங்க. இருங்க... உங்க வீட்ல சொல்லி முதல்ல கல்யாணம் பண்ணி வைக்கச் சொல்றேன்...' என்பார் தமாஷாக.

ஜெயஸ்ரீக்கு ஏமாற்றங்களே ஏற்படுவதில்லையா?

"ஓ... ஒருதரம் இலங்கைக்குப் போய் சந்திரிகாவைப் பேட்டி எடுத்தேன். யாழ்ப் பாணத்தில் போர் மிகவும் உச்ச கட்டத் தில் இருந்த நேரம் அது. நான் வேலையில் சேர்ந்த புதிது. எதைப் பற்றியும் கவலைப் படாமல் 'நான் இலங்கைக்குப் போய் வரட்டுமா?' என்று ஆபீஸில் கேட்டேன். என் துணிச்சலைப் பாராட்டி 'சரி' என்று சொல்லிவிட்டார்கள். கஷ்டப்பட்டு, சந்திரிகாவிடம் நேரம் வாங்கினேன். சொல்லப் போனால் அந்தக் கட்டத்தில் அவர் பேட்டிக்கு நேரம் ஒதுக்கிய முதல் இந்தியப் பத்திரிகையாளர் நான்தான். எனக்குப் பிறகுதான் 'தி ஹிந்து' நாளி தழுக்கு அவர் பேட்டி தந்தார். அருமை யாக வந்தது அந்தப் பேட்டி. ஷூட் பண்ணி முடிந்ததும், அங்கிருந்து அப் படியே 'அப்லிங்க்' பண்ண ஏற்பாடு செய் திருந்தேன். ஆனால் என் துரதிர்ஷ்டம், ஏதோ தொழில் நுட்பக் கோளாறு காரணமாக பேட்டி துண்டு துண்டாய் டெலிகாஸ்ட் ஆனது. முழுவதுமாக ஒளி பரப்பாகியிருந்தால் பல விஷயங்கள் வெளியாகியிருக்கும். இவ்வளவு கஷ்டப் பட்டும் அதற்குப் பலன் கிடைக்காமல் போய்விட்டதே என்ற ஏமாற்றம் எனக்குள் ரொம்ப நாள் இருந்தது.

"சில சமயங்களில் ஏதாவது சென் சேஷனலாகப் பண்ணுவோம். ஏதேனும் ஓர் அரசியல்வாதியை 'எக்ஸ்போஸ்' செய் யும்போது அதன் விளைவாக அந்தக் கட்சியிலேயே கசமுச ஏற்பட்டு யாரே னும் ஒரு முக்கியப் பிரமுகர் கட்சி யிலிருந்து பிரிந்து போவார். 'ஆஹா... நம் ஸ்டோரிக்கு இவ்வளவு எஃபெக்டா?' என்று மனம் குதூகலிக்கும். மூணாவது நாளே பிரிந்து போன அவர் மீண்டும் வந்து சேர்ந்து கொண்டு விடுவார். நமக்கு 'பெப்பே' காட்டுவது போல இருக் கும்."

நடுவில் 1999ல் ஒரு மூன்று மாதம் 'ஷெவ்னிங் ஸ்காலர்ஷிப்' கிடைத்தது ஜெயஸ்ரீக்கு. இங்கிலாந்து நாட்டின் பெருமை மிகு அந்த ஸ்காலர்ஷிப்பில் ஜெயஸ்ரீ சில நாட்கள் பி.பி.சி தொலைக் காட்சியிலும் பயிற்சி பெற்றார்.

தி.மு.க பேரணியின்போது அவர் தாக்கப்பட்டது பற்றி பேச்சு திரும் பியது.

"நான் தாக்கப்பட்டது இது முதல் தடவை அல்ல. அந்த அனுபவம் எனக்கு நிறையவே உண்டு. தி.மு.க ஆட்சியில் ஜெயலலிதா கைது செய்யப்பட்டு நீதிமன் றத்துக்குக் கொண்டு வரப்பட்டபோது நான் அங்கே நின்று 'கவர்' செய்து கொண்டிருந்தேன். பெருங்கூட்டம். போலீஸால் சமாளிக்க முடியவில்லை. தடியடி நடத்தியபோது நான் ஒரு பத்திரி கையாளர் என்று தெரிந்தும் தாக்கினார் கள். உடனே அங்கேயே தரையில் அமர்ந்து தர்ணா செய்தேன். என் னுடன் ஒரு சில பத்திரிகையாளர்கள் உட்கார்ந்தார்கள். பிறகு 'இதைப் பேசித் தீர்த்துக் கொள்ளலாம்' என்று இலே சாக விட்டு விட்டார்கள்.

"தாமரைக்கனி கைது செய்யப்பட்ட போது அதைப் படமெடுக்கச் சென்றேன். அப்போதும் தாக்கப்பட் டேன்.

"இப்போது ஆகஸ்டு 12 பேரணியில் என்ன ஒரு வித்தியாசம் என்றால் இப் போதுதான் ஒன்றாகச் சேர்ந்து பெரிய

"கடற்கரையிலே வயசுப் பொண்ணு பக்கத்துலே இருக்கும் போது கூட உங்களுக்கு ஆஃபிஸ் நினைப்புதானா?"

"ச்சே...ச்சே...அதெல்லாம் இல்லை..."

"ஏன் பொய் சொல்றீங்க...இப்ப கொட்டாவி விட்டீங்களே...!"

– தஞ்சை தாமு



அளவில் எதிர்ப்பைத் தெரிவித்துப் போராடும் எண்ணம் பத்திரிகையாளர்களுக்கு வந்திருக்கிறது.''

செய்தி ஒளிபரப்புத் துறையில் பிரணாய்ராய்தான் ஜெயஸ்ரீயின் ரோல் மாடல். சென்னைக்கு ஒரு தரம் பிரணாய் வந்திருந்தபோது பிரஸ்மீட் ஒன்றில் பேசி முடித்ததும், 'நான் ஜெயஸ்ரீயைப் பார்க்க வேண்டும்' என்று தனியாகப் பெயரிட்டுக் கூப்பிட்டுப் பேசிய போது இவருக்கு ஒரே த்ரில்!



''என்னங்க, ஒரு குட் நியூஸ்! இருந்த ஒண்ணரை லிட்டர் பாலையும் பூனை குடிச்சிடுச்சு!''
''சரி, சரி! எதிர்வீட்டு நியூஸையெல்லாம் எதுக்கு என்னிடம் சொல்லித் தொலைக்கறே?''
– உ. ராஜாஜி

'சொந்தமாக ஒரு நியூஸ் சேனல் தொடங்க வேண்டும்' – இது ஜெயஸ்ரீயின் எதிர்காலத் திட்டம். ''எந்த மொழி என்பது முக்கியமில்லை. நாட்டு நடப்புகளைச் சரியாக மக்களுக்குக் கொண்டு போக வேண்டும்'' என்கிறார் அழுத்தமாக.

ஜெயஸ்ரீயின் ஆர்வங்கள் பல வாறானவை. ஆங்கில இலக்கியத்தில் அபார மோகம். வயலினில் நல்ல பயிற்சி.

''லால்குடி ஸ்ரீமதியிடம் கற்றுக் கொண்டேன். மேடைக் கச்சேரிகளில் பக்க வாத்தியமாகவும், தனிக் கச்சேரியாகவும் வாசித்திருக்கிறேன்.''

''கமல்ஹாசனைப் பிடிக்கும். எதைச் செய்தாலும் அதில் அவர் ஒன்றிப் போய் இன்வால்வ்மென்ட்டோடு செய்கிறாரே அந்த அவரது தொழில் தீவிரம் எனக்குப் பிடிக்கும்'' என்கிறார்.

தன் திருமணம் பற்றிய தீர்மானமான கருத்துகளைக் கொண்டிருக்கிறார்.

''ஒரு ஜர்னலிஸ்ட், இன்னொரு ஜர்னலிஸ்டைத்தான் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும் என்ற சூத்திரத்திலெல்லாம் எனக்கு நம்பிக்கையில்லை. என்னுடைய பணி பாதிக்கப்படாமல் வாழ்க்கை அமைந்தால் ஓ.கே. இல்லையென்றாலும் ஓ.கே. ஒரு விஷயத்தில் நான் ரொம்பவும் தீவிரம். ''அப்பாவும் பிஸி. அம்மாவும் பிஸி. குழந்தையை 'பேபி சிட்டர்' (ஆயா) பாத்துக்கிறாங்க'' என்ற சூழ்நிலை உருவாக அனுமதிக்க மாட்டேன்.''

''குழந்தையைக் கவனித்துக் கொள்வதற்காக வேலையை விட்டு விட்டு, நடுவில் இடைவெளி விழுந்து விட்டால் போட்டி மிகுந்த இந்தத் துறையில் விட்ட முனையை மீண்டும் எடுத்து இணைக்க முடியுமா?''

''முடியும் என்றுதான் எனக்குத் தோன்றுகிறது. அப்படியே இல்லா விட்டாலும் எனக்குப் பல 'ஆப்ஷன்ஸ்' இருக்கே. ஆங்கில இலக்கியத்தைத் தொடர்வேன். வயலினில் மீண்டும் கவனம் செலுத்துவேன். ஒன்று மட்டும் நிச்சயம். என்றைக்கும் என் வாழ்க்கை போர் அடிக்கும் வாழ்க்கையாக இருக்காது.''

ஜெயஸ்ரீயின் பெரிய பலம் அவரது பெற்றோர்கள். குறிப்பாக அம்மா.

''தி.மு.க பேரணிக்குப் பின் பலரும் என்னைக் கேட்ட ஒரு கேள்வி என்ன தெரியுமா? 'உங்கம்மா டி.வியில் உன்னை அந்தப் பயங்கரமான சூழ்நிலையில் பாத்துட்டு, வேலையை உடனே விட்டுடச் சொல்லலையா?'

''அன்று இரவு வீட்டுக்கு வந்தபோது 'அம்மாவின் மனநிலை எப்படி இருக்குமோ?' என்று நான்கூடச் சற்று பயந்தேன். ஆனால் அம்மா என்ன சொன்னார் தெரியுமா?

''இப்படி ஒவ்வொரு அம்மாவும் பயந்து நின்னா, இன்னொரு கிரண்பேடி இந்தியாவில் எப்படி உருவாவாள்?''

சந்திப்பு: **ராணிமைந்தன்**

அட்டை, படங்கள்: **வெங்கடேஷ்**



மனம்

அருண் சரண்யா

"ஐயோ!"

திடீர் அலறல் காதில் விழுந்த அடுத்தகணம் சிவப்ரியா அந்தக் குரல் வந்த திசையை நோக்கி ஓடினாள். அது வேணுவின் குரல்.

அவள் அந்த அறைக்குள் நுழையும் போதே நிலைமையின் தீவிரம் மனத்தில் சட்டென்று உறைத்தது. வேணு கீழே விழுந்திருந்தான். விபத்தில் பட்ட அடியைத் தொடர்ந்து அறுவை சிகிச்சை செய்து பிளாஸ்டர் போடப்பட்டிருந்த அவனது வலது காலில் மீண்டும் பாதிப்பு! பிளாஸ்டர் மேற்பரப்பில் ரத்தம் நொடிக்கு நொடி அதிகமாகப் பரவிக் கொண்டிருந்தது.

"ஐயையோ, இப்படி ஆயிடுச்சே அண்ணா" என்று வீறிட்டுக் கொண்டிருந்த அவன் தங்கை சிவப்ரியாவைப் பார்த்ததும், "டாக்டர், தினமும் கொஞ்ச நேரம் நடக்கணும்னு சொன்னீங்களே. நடக்கலாம்னு கீழே காலை வச்சதுமே விழுந்துட்டார்" என்று தேம்பினாள்.

ஊன்றுகோல் அளிக்கப்பட்டிருந்தது. என்றாலும் முதல் நாள் நடக்கும்போதே வலிமையான ஒருவரைத் துணைக்கு அழைத்துக் கொண்டிருக்க வேண்டாமா? பலவீனமான தங்கை போதுமா? தெரிந்திருந்தால் வார்ட்பாய் யாரையாவது அனுப்பியிருப்பாள் சிவப்ரியா.

உடனடியாக எலும்பு முறிவு சிகிச்சை மருத்துவரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு, அவரது ஆலோசனையின்படி முதலுதவி செய்வதற்காக சிவப்ரியா நெருங்கியபோது வேணு அடித்தொண்டையிலிருந்து கத்தினான். "கிட்ட வராதே. நீ எனக்கு எந்தச் சிகிச்சையும் செய்ய வேண்டாம். என்னைத் திட்டமிட்டுக் கீழே விழவச்சிட்டு இப்போ சிகிச்சை கொடுக்கிற மாதிரி நடிக்கிறியா? போ வெளியே. உடனே வேற டாக்டரைக் கூப்பிடு."

விவாதத்துக்கோ சமாதானத்துக்கோ இது ஏற்ற நேரமல்ல. அந்தப் பக்கம் வந்த டாக்டர் முகர்ஜியிடம் சுருக்கமாக பாதிப்பை விளக்கிய அதே சமயம் அவளது பார்வை வேணு விழுந்த இடத்தில் நிலைகுத்தி நின்றது. அங்கே கொஞ்சம் ஸ்பிரிட் சிந்தியிருந்தது. அதற்கு சற்று முன்தான் நர்ஸ் கோகிலவாணி வேணுவின் உடல் வெப்பத்தையும் ரத்த அழுத்தத்தையும் கணக்கிட்டுச் சென்றிருந்தாள். ஒரு நோயாளியின் வாயிலிருந்து எடுக்கப்பட்ட தெர்மாமீட்டரை உதறிவிட்டு பஞ்சால் துடைத்து, சிறிய ஸ்பிரிட் பாட்டிலில் அதை

வைப்பதுதான் வழக்கம். ஏதோ காரணத்தால் அந்த ஸ்பிரிட் கீழே கொஞ்சம் சிந்தியிருக்கிறது. அதுவே வேணுவை வழுக்கி விழ வைத்துப் பெரும் சிக்கலைத் தோற்றுவித்திருக்கிறது.

சிக்கல் தோன்றியது தனக்கும்தான் என்பதை சிவப்ரியா அப்போது அறிந்திருக்கவில்லை.

"உட்கார் ப்ரியா" என்ற டாக்டர் ராம்ஷேகரின் முகம் வெளுத்திருந்தது. "வேணு ஏன் கீழே விழுந்தார்?"



சிவப்ரியாவால் பதிலளிக்க முடியவில்லை. கோகிலவாணியின் கண்ணீர் நிறைந்த முகம் அவள் மனத்தில் மீண்டும் மீண்டும் எழுந்தது.

"சிந்திய ஸ்பிரிட்டை உடனடியாகத் துடைக்காதது என் தப்புதான். வீட்டுப் பிரச்னையாலே இதுபோன்ற தப்புகள் அடிக்கடி நடக்குது. ஏற்கெனவே வேற ஒரு விஷயத்துக்காக இன்னைக்குக் காலையிலேதான் சீஃப் டாக்டர் என்னைக் கண்டிச்சார். இப்ப இதுவும் தெரிஞ்சதுன்னா என்னை வேலையை விட்டே தூக்கிடுவார். தயவு பண்ணுங்க டாக்டர் ப்ரியா". கணவன் வேறொருத்தியோடு வெளியேறிய பிறகு கோகிலவாணியிடம் பல தடுமாற்றங்கள். வேலையும் தொலைந்த தென்றால் அவள் வாழ்வு அவ்வளவுதான்.

22

"உன்னைத்தான் ப்ரியா. வேணு தான் ஏன் கீழே விழுந்ததாச் சொல்றான் தெரியுமா? அது உன்னோட சதியால்தானா?"

சிவப்ரியாவுக்கு அதிர்ச்சியையும் மீறி இலேசான புன்னகை தோன்றியது. மருத்துவத் துறையில் ஈடுபட்டவர்களுக்கு ஒரு நோயாளியைப் பழிதீர்க்கக் கூட தோன்றுமா என்ன?

"சினிமாவிலே நடிச்சப்போ உனக்கு அவன் மேலே ஏற்பட்ட கோபத்துக்காக நீ வஞ்சம் தீர்த்துக்கறதாச் சொல்றான் அவன். அவனுக்குத் தெரிஞ்ச வேறொரு டாக்டரை இங்கே கூப்பிட்டு, அவனைப் பரிசோதிக்கச் சொல்லணுமாம்."

"எதுக்கு?"

அவன், "நம்ம க்ளினிக் மேலே நுகர்வோர் நீதிமன்றத்திலே வழக்குத் தொடுக்கப் போறானாம் – உன் மேலே

மனமறிய ஆவல்

யும் என் மேலேயும்". தலையின் மீது கொஞ்சம் கொஞ்சமாக யாரோ அதிக பாரத்தை ஏற்றிக் கொண்டிருப்பதைப் போலத் தோன்றியது. இனி அதிகப்படியாக ஒரு மயிலிறகைக் கூட சுமக்க முடியாது.

"நான் வேணா பேசிப் பார்க்கட்டுமா?"


"பலன் இருக்காது ப்ரியா. அவன் ரொம்ப ஆக்ரோஷமா இருக்கான்... தான் நீதிமன்றத்துக்குப் போகக் கூடாதுன்னா அதுக்கு ஒரே வழிதான் உண்டுன்றான் அவன்" என்றவர்,

திடீரென்று தன் பார்வையை அவளிடமிருந்து கவருக்குத் திருப்பினார்.

"உன்னை இந்தக் கிளினிக்கிலேயிருந்து டிஸ்மிஸ் செய்யணுமாம்."

"அதெப்படி இவர் உன்னிடம் அப்படிச் சொல்லலாம். என்கிட்டயே எவ்வளவு பேர் சொல்லியிருக்காங்க தெரியுமா? "டாக்டர் சிவப்ரியா இருப்பது, அனு க்ளினிக்குக்கே ஒரு பெருமை"ன்னு. அந்த ராஸ்கல் பிடிச்சுக்க யார் உதவியையும் கூப்பிடாமல் இறங்கி காலை மறுபடியும் உடைச்சுக்கிட்டான்னா அதுக்கு நீயா பிணை?"

மாமியின் படபடப்புக்குப் பதிலளிக்க வேண்டிய கட்டாயம் சிவப்ரியாவுக்கு. "அவர் மேலே தப்பில்லை மாமி. ஒவ்வொரு செங்கல்லா பார்த்து அவர் உருவாக்கினது அனு க்ளினிக். இன்னிக்கு மெட்ராஸிலேயே சிறந்த க்ளினிக்கிலே ஒண்ணுன்னு பேரெடுத்திருக்குதுன்னா, அதற்காக டாக்டர் எவ்வளவு பாடுபட்டிருப்பார்! என்னாலே அந்த இமேஜ் குறையலாமா? இப்ப என்ன, என்னை நிரந்தரமாவா க்ளினிக்குக்கு வரக்கூடாதுன்னு டாக்டர் சொல்லிட்டார்? அந்த வேணு குணமாகிப் போறவரை என்னை வரவேணாம்னு சொல்லியிருக்கார், அவ்வளவுதானே. எனக்கும் ஒரு இடைவெளி வேண்டியிருக்கு. ஒரு மாசம் அம்மாவோட போய் இருந்துட்டு வரேன்."



"ஊசி போடும்போது கொசு கடிக்கிற மாதிரி இருக்கும்னு சொன்னது உண்மைதான். அதுக்காக உங்களுக்கு மலேரியா வந்ததுக்கு நான்தான் காரணம்னு சொல்றதை ஏத்துக்க மாட்டேன்!"
– தாரை மா. மகேஷ்ப்ரியன்

புன்னகையுடன் சிவப்ரியா தனது பகுதிக்குச் சென்று விட்டாள். எப்படி இந்தப் பெண்ணால் எல்லா அவலங்களையும் சிரித்துக் கொண்டே தாங்கிக் கொள்ள முடிகிறது என்பதற்கான விடை அடுத்த ஐந்தாவது நிமிடமே தெரிந்தது.

"ஊருக்குப் போகிறதே இந்தப் பெண், வழியில் சாப்பிடவாவது எதையாவது நாம் கட்டிக் கொடுக்க வேண்டாமா? விசாரிப்போம்" என்ற எண்ணம் தோன்ற, சத்தமில்லாமல் வீட்டின் பின்பகுதிக்குச் சென்றவள் துடித்துப் போனாள்.

கட்டிலில் படுத்துக் கொண்டு குமுறிக் குமுறி அழுது கொண்டிருந்தாள் சிவப்ரியா.

'எதற்கும் கலங்காதவள் இப்போது தனது லட்சியத்துக்குப் பெரும் சோதனை என்று வரும் போது கதிகலங்கி நிற்கிறாள். ஒரு சினிமாவில் நடித்து விட்ட பாவத்துக்காக மாறி மாறி அவளது டாக்டர் வாழ்வில் புயல் வீசிக் கொண்டிருக்க வேண்டுமா என்ன? கொஞ்ச நாட்களில் இவள் திரும்பி வரப் போகிறாளா அல்லது தன் மீது தொடர்ந்து பட்டுக் கொண்டேயிருக்கும் விஷ நிழலைக் கண்டு பயந்து போய் ஏதாவது தவறான முடிவை எடுத்து விடுவாளா?'

"நானிருக்கேன் உனக்கு. கவலைப் படாதேம்மா. இவருக்கு தன் க்ளினிக்கோட இமேஜ்தான் முக்கியம்னா, கிடக்கட்டும். நீ படித்த டாக்டர் படிப்புக்கு வேறெங்கேயும் மதிப்பில்லையா என்ன?"

தன் அழுகை அம்பலமானதில் கூச்சம் ஏற்பட்டது சிவப்ரியாவுக்கு. கண்களைத் துடைத்துக் கொண்டாள். "எனக்கு இப்போ எதுவுமே தோணலே மாமி. என் வாழ்க்கையை ஏதோ ஒரு சக்தி தாறுமாறா இழுத்துட்டுப் போற மாதிரி படுது. என்னாலே தொடர்ந்து அதன் கூட போராட முடியுமான்னு தெரியலே. ரொம்பக் களைப்பா இருக்கு. நான் மறந்தாலும், என்னுடைய திரைப்பட வாழ்க்கையை மற்ற பலரும் நினைவுபடுத்திக்கிட்டே இருக்காங்க. இப்போ க்ளைமாக்ஸா வேணு, அவ்வளவுதான். நாளைக்கே பேப்பரிலே செய்தி வருமாறு செய்திடுவான் அவன். சில பத்திரிகைகளுக்கு இது சூடான செய்தியாயிடும்."

விடைபெறும்போது கூட டாக்டர் ராம்ஷேகர் வீட்டுக்கு வரவில்லை. வேண்டுமென்றே க்ளினிக்கில் தாமதமாகத் தங்குகிறார்!

அனு கட்டுப்படுத்த முடியாமல் அழுதாள். "அக்கா, நீங்க பத்து நான் கழிச்சு இங்கே வந்துதான் ஆகணும். எங்கப்பாவை நான் நிச்சயம் கேட்பேன். எவனோ ஒருத்

தன் சொன்னதுக்காக உங்க மேலே அவர் எப்படி நடவடிக்கை எடுக்கலாம்னு. அதுவும் அந்த சினிமா டைரக்டர் சரியான ஃப்ராடுன்னுதான் ஏற்கெனவே தெரியுமே" என்றவள் திடீரென்று ஏதோ வெறிபிடித்தவள் போல் கத்தினாள்.

"இந்த சனியன் பிடிச்ச சினிமாவிலே நடிச்சதாலதானே இந்த அவஸ்தையெல்லாம். உங்களுக்கோ அந்த மாதிரி ஆசையே கிடையாது. பின்னே நீங்க நடிச்சதுக்கு யாரு காரணம்?"

"நீதான் காரணம்" என்று வெளிப்பட விருந்த வார்த்தைகளை அவசரமாக வேதனையுடன் விழுங்கிக் கொண்டான் சிவப்ரியா.

தனக்கு விடைகொடுக்க ஒருவேளை ரயில் நிலையத்துக்கு டாக்டர் ராம்ஷேகர் வருவார் என்ற அவளது இலேசான எதிர்பார்ப்பும் பொய்யானது.

கோகிலவாணி வந்திருந்தாள். "நான் செய்த தப்புக்கு உங்களுக்குத் தண்டனையா? அதுவும் இவ்வளவு பெரிய தண்டனையா? நான் பாவி. இப்பவே சீஃப்கிட்டே போய் உண்மையைச் சொல்லிடறேன்" என்று கதறியவளை அடக்கப் பெரும்பாடானது. ரயில் கிளம்பும் வரை இருக்க வேண்டாமென்று வற்புறுத்தி அவளை அனுப்பி வைத்தான்.

ரயிலில் தனது இருக்கையில் அமர்ந்த அடுத்த நிமிடம், "தண்ணி பிடிச்சுக்கிட்டு வரட்டுமா? ஏதாவது பத்திரிகை வாங்கித் தரட்டுமா?" என்ற கேள்விகள் வந்தன.

ஆனந்த். கூடவே அவனது மனைவியும்.

"கவலைப்படாதீங்க டாக்டர். நல்லவங்களுக்குத்தான் சோதனை அதிகம் வரும். தானா எல்லாம் சரியாயிடும்" என்று உஷா கூறியது ஆறுதலாக இருந்தது. அவள் கூறிய வார்த்தைகளில் மட்டும் ஏற்படவில்லை அந்த ஆறுதல். தனக்கு நேர்ந்துள்ள சோதனை பற்றி ஆனந்த் மனைவியிடம் கூறியிருக்கிறான். அவளும் காதுகொடுத்துக் கேட்டிருக்கிறாள். அதாவது தகவல் தொடர்பு அவர்களிடையே தொடங்கி விட்டது.

ஆனந்தின் கண்கள் சிவந்திருந்தன. மனத்துக்குள் தனக்காக அழுகிறான். சிவப்ரியா தனது பார்வையைத் திருப்பிக் கொண்டான்.

சிறிது நேரத்தில் சிவப்ரியாவை சுமந்தபடி தமிழகத் தலைநகரிலிருந்து அந்த ரயில் தன் பயணத்தைத் தொடங்கியது.

(தொடரும்)

அதிசயங்கள் நிகழ்த்தும் அற்புத மருத்துவர்

அறுவை சிகிச்சை இல்லாமலேயே இதய நோய் குணமான அதிசயம்!



முக்திரியாபேகம், அந்தோனி பிள்ளை தெரு, கிழக்கு தாம்பரம், சென்னை – 59.


எனக்கு இதயத்தில் அடைப்பும் வலியும் அடிக்கடி வந்ததால் நான் சில ஆண்டுகளாக மயக்கம் மற்றும் உடல்பலவீனத்தால் அவதியுற்றேன். இதனால் சென்னையில் உள்ள ஒரு பிரபல மருத்துவ மனைக்கு சென்று சிகிச்சை பெற்றேன். ஆனால் அங்கு என்னை சோதனை செய்து என் இதயத்தில் ஒரு மேஜர் ஆ∴பரேசன் செய்ய வேண்டும் என்று கூறிவிட்டார்கள். இதனால் என் மனம் மிகவும் வேதனைப்பட்டு சில நண்பர்கள் மூலம் ரப்பானி **வைத்யசாலா** சென்றேன். இங்கு எனக்கு நல்ல சிகிச்சை கிடைத்ததின் மூலம் என் நோய் படிப்படியாக இப்போது குறைந்துவிட்டது. நான் இப்போது மகிழ்ச்சியாக இருக்கிறேன்.

கர்ப்பப்பை ஆபரேஷன் என்ற பேச்சுக்கே இடமில்லை என்றாச்சு!




வயிற்று வலிக்காக சென்னையில் உள்ள ஒரு பெரிய ஆஸ்பத்திரியில் 3 ஆண்டு வைத்தியம் பார்த்தபின் கர்ப்பப்பையை எடுத்துவிடச் சொன்னார்கள். ரப்பானி வைத்தியசாலாவில் 3 மாதம் மருந்து சாப்பிட்டதில் சரியாப் போச்சு. கர்ப்பப்பையை எடுக்க தேவையில்லை என்று அதே ஆஸ்பத்திரியில் சொல்லிவிட்டார்கள் என்கிறார் போரூர், அண்ணாசாலையைச் சேர்ந்த கோவிந்தராஜின் மனைவி **G.** செல்வி.

மலட்டுத் தன்மை என்பதே இல்லாமல் போச்சு!



குழந்தை இல்லை என்று நாங்கள் ஏறாத ஆஸ்பத்திரி வாசல்கள் இல்லை. பிறகு பலரின் ஆலோசனையைக் கேட்டு ரப்பானி வைத்தியசாலாவிற்கு வந்து தொடர்ந்து மருந்து சாப்பிட்டதில் குழந்தை பெற்று தனது மன மகிழ்ச்சியை அனைவருக்கும் தெரிவிக்கின்றனர். சென்னை தேனாம்பேட்டையைச் சேர்ந்த ஜெயசங்கர்–மாரியம்மாள் தம்பதி.

பக்கவாத நோய் பனிச்சென்று தீர்ந்தது!



பல ஆண்டுகளாக பக்கவாத நோயால் பாதிக்கப்பட்டு செயலற்று இருந்த நான் ரப்பானி வைத்யசாலா **டாக்டர் ஹக்கீம் S.A. சையத் சத்தார்** அவர்களிடம் சிகிச்சை பெற்றபின் இரண்டே மாதங்களில் பூரண குணமடைந்தேன் என்று காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் தெருவில் வசிக்கும் திரு கே. கட்சீஸ்வரன் தெரிவிக்கிறார்.

மருந்தில்லை என்ற சோரியாஸிஸ் மாயமாய் மறைந்து போச்சு!



நான் கடந்த சில வருடங்களாக உடம்பில் அரிப்பு ஏற்பட்டு சோரியாசிஸ் என்ற நோயாலும், கடுமையான மூட்டு வலியாலும் பாதிக்கப்பட்டேன். பல சிகிச்சைகளும் எனக்கு பலன் தராமல் ரப்பானி வைத்தியசாலாவில் காண்பித்தேன். தொடர்ச்சியாக சில மாதங்கள் அங்கு பெற்ற சிகிச்சையின் பலனாக என் பிரச்சனைகள் அனைத்தும் தீர்ந்தது தெரிவிக்கிறார் திருமதி பத்மா ஸ்வாமிநாதன், ரெய்ன் ரிச் அபார்ட்மெண்ட்ஸ், மௌனசாமி மடம் தெரு, வெங்கடபுரம், சென்னை – 53.

மேலும் கை கால் வாதம், மூளை வளர்ச்சி குறைவு, லிவர் பெயிலியர், மூலம், நரம்புத் தளர்ச்சி, ஆண்மைக் குறைவு, யானைக்கால் வியாதி, காக்காய் வலிப்பு போன்ற சகல வியாதிகளுக்கும் சிறந்த சிகிச்சை அளிக்கப்படுகிறது.)


மாதந்தோறும்
Dr. சையத் சத்தாரின்
யுனானி மருத்துவ மாத
இதழ் கடைகளில் கேட்டு
வாங்குங்கள்

டாக்டர் ஹக்கீம் S.A. சையத் சத்தார்
ரப்பானி வைத்ய சாலா

73/1, டாக்டர் பெசன்ட் ரோடு,
மீர்சாகிப்பேட்டை மார்க்கெட் அருகில்,
இராயப்பேட்டை, சென்னை – 600 014.
போன்: 8510969, 8410874




பொத்தல் வாழ்க்கை!



வெள்ளிக் கொண்டை
மினுங்க
அதிகாலைப் புல்
சிட்டுக்குருவிக்கு மோகம்.





அமைதியாய் நில்
பனித்துளியில்
மேகங்களின் ஊர்வலம்.

மொள்ளவும் முடியவில்லை
குடிக்கவும் முடியவில்லை
பொத்தல் வாழ்க்கை.

பாதம் பதித்த சுவடுகளை
பறந்து வந்தழிக்கும்
அலையின்
வெற்றி முழக்கம்.



உதயசங்கர்

ஊமத்தை இன்ஹேலர்!






சென்னை மருத்துவக் கல்லூரியின் நாட்டு நலப் பணித் திட்டத்தினரால் தயாரிக்கப்பட்டு, டாக்டர் என்.எஸ். வியாஸ் தொகுத்துள்ள 'கிராமப்புற மருத்துவம்' நூலிலிருந்து...



காக்கை வலிப்பு வந்தால் செய்ய வேண்டிய முதலுதவி என்ன?

மென்மையாக நோயாளியை அடக்க வேண்டும். பலவந்தமாய் அடக்கினால் ஒருவேளை நோயாளிக்கு ஆபத்து நேரிடும். நோயாளி மோதிக் கொண்டு தீமை செய்து கொள்ளக் கூடிய சாமான் அருகில் இருந்தால் நீக்கி விடவும்.



கரண்டிக்காம்பையாவது வேறு கடின வஸ்துவையாவது ஒரு துண்டில் சுற்றி நாவைக் கடித்துக் கொள்ளாதபடி பின்பற்களுக்கிடையில் வைக்க வேண்டும்.

வாயிலிருந்து வரும் நுரையைத் துடைத்து விட வேண்டும்.

காக்கை வலி மறுபடியும் ஏற்படக் கூடுமாதலால் நோயாளியைத் தனிமையில் விடக் கூடாது.

காக்கை வலிப்பு பற்றிய சில உண்மைகள்:

- காக்கை வலிப்பை மந்திரங்களாலும் பூஜைகளாலும் போக்க முடியாது. மருந்துகளை விடாமல் இரண்டிலிருந்து மூன்று ஆண்டுகள் வரை உட்கொள்ள வேண்டியிருக்கும்.
- இரண்டு ஆண்டுகளுக்கு வலிப்பு வராமல் இருந்தால் மருந்துகளை டாக்டரின் ஆலோசனையுடன் நிறுத்தலாம்.
- மூன்றிலிருந்து ஆறு மாதத்திற்கு ஒரு முறை டாக்டரிடம் சென்று பரிசோதனை செய்து கொள்ள வேண்டும்.
- காக்கை வலிப்பு உள்ள பெண்களை மணம் செய்து கொள்வது தவறல்ல.

அணுசக்திக்கும் புற்று நோய்க்கும் சம்பந்தம் உண்டு!

அமெரிக்காவில் வெடித்த அணுகுண்டு அதன் சமீபத்தில் இருந்த அநேக மக்களுக்கு இரத்தப் புற்றுநோய் உண்டாக்கியது. அதிலும் சிறுபிள்ளைகள் தாம் அநேகமாகப் பாதிக்கப் பட்டார்கள். மற்ற புற்று நோய்களும் வரக் கூடும். அணுமின் சக்தி ஆலைகளான ட்ராம்பே, கல்பாக்கம் போன்ற இடங்களில் வசிக்கும் சிறுவர்களுக்கும் கதிர்வீச்சால் புற்று நோய் வரக்கூடும்.

இன்ஹேலரைக் கண்டுபிடித்தது யார்?

சென்னை விஞ்ஞானி ஒருவர், 1820ம் வருடம் ஆதிவாசிகள் ஊமத்தைச் செடியை உட்காவோடு புகைப்பதையும் அதன்மூலம் ஆஸ்துமா



நோயிலிருந்து அவர்கள் குணம் அடைவதையும் கண்டு ஊமத்தையை இங்கிலாந்து கொண்டு சென்றார். பின்னர் மேற்கத்திய நாடுகள் அதையே இன்ஹேலர் ஆக பயன்படுத்தின. எனவே இந்தியாவில்தான் இன்ஹேலர் முதன் முதலில் கண்டறியப்பட்டது. இங்கிலாந்தில் அல்ல.

அனைவருக்கும் உகந்த அற்புதமான சத்துணவு சொல்லுங்க!

கோதுமை காய்கறி சாதம்

தேவையான பொருட்கள்:

கோதுமை ரவை - 500 கிராம்
பாசிப் பருப்பு, துவரம் பருப்பு கடலை பருப்பு கலவை - 100 கிராம்
கேரட் - 150 கிராம்
பீன்ஸ் - 150 கிராம்
கீரை - 1 சிறிய கட்டு
எண்ணெய் - தாளிக்கத் தேவையான அளவு
தண்ணீர் - 1.5 லிட்டர்
உப்பு - வேண்டிய அளவு
எலுமிச்சம் பழம் - 1

செய்முறை:

பருப்பை வேக வைக்கவும். பருப்பு வெந்தவுடன் கேரட், பீன்ஸ், கீரை ஆகியவற்றைச் சேர்த்து வேக வைக்கவும். வெந்த ரவையுடன் பருப்பு, காய்கறி கலவையைச் சேர்த்துக் கிளறவும். வேண்டிய அளவு உப்பை சேர்த்து, தாளித்து இறக்கவும்.

குழந்தைக்குத் தாய்ப்பால் செரிக்காத நிலை ஏற்பட்டால் என்ன செய்வது?

வட மாநிலங்களிலும், தெற்கே சில பகுதிகளிலும் 'லாக்டோஸ் இன்டாலரன்ஸ்' எனும் ஒரு விதமான என்ஸைம் குறைபாட்டுடனேயே குழந்தைகள் பிறக்கின்றன. இந்தக் குழந்தைகளால் தாய்ப்பாலைச் செரித்துக் கொள்ள முடிவதில்லை. இத்தகைய குழந்தைகளுக்கு லாக்டோஸ் 'நியூரோபீ' போன்ற உணவு வகைகளைத் தரலாம். இதில் அரிசிக் குருணையோடு சோயாபீன் மாவும் கலந்திருக்கும். இந்த 'லாக்டோஸ் இன்டாலரன்ஸ்' என்னும்



கோளாறு தற்காலிகமாக இருந்து சில நாட்களில் சரியாவதும் உண்டு.

கண் வலி, கண் சிவப்பு நீங்க என்ன செய்யலாம்?

கண் வலி வந்து அவதிப்படுகின்றபோது மிகவும் சுலபமாக ஆடாதோடைப் பூக்களினால் குணம் பெறலாம். ஆடாதோடைப் பூக்களைக் கண்களின் மேல் கட்டிக் கொண்டு வர வேண்டும். மூன்று தடவை கட்டினால் கண்களின் சிவப்பு மாறி வலியும் நீங்கிவிடும்.

வெங்காயம் நல்ல இயற்கை உணவா?

வெங்காயம் சத்துள்ளது. இரத்த சுத்தியையும் இரத்த விருத்தியையும் கொடுப்பதில் வெங்காயத்தைப் போன்ற பொருள் வேறு இல்லை. இதில் வைட்டமின் 'சி' சத்து நிறைய இருக்கிறது.

கால்நடைகளைத் தாக்கும் ஒட்டுண்ணிகளை எப்படி ஒழிப்பது?

காற்றில் வெப்பமும், ஈரப்பதமும் கூடிய இடங்களில் வாழும் கால் நடைகள் ஒட்



டுண்ணிகளால் அதிக அளவில் தாக்கப்படுகின்றன. பஞ்சாயத்துக்கள், நகராட்சிகள் தங்கள் இடங்களிலுள்ள கால்நடைகளுக்கு 'பான்மின்த்', 'தையோ பெண்டசால்', 'நில்வர்ம்' போன்ற பூச்சி மருந்துகள் கொடுக்கப்பட ஒழுங்கு செய்தார்கள் என்றால் நல்ல பலன் கிடைக்கும்.



பதிப்பு:
டாக்டர் ஜெயந்தி வியாஸ்
3, A 1/2, 14வது குறுக்குத் தெரு,
பெசன்ட் நகர்,
சென்னை - 90
விலை: ரூ. 30/-



மையம்

அந்த ஞாயிற்றுக்கிழமை மதியம், கிருஷ்ணன் இறந்து போய்விட்டதாக தொலைபேசியில் தகவல் வந்தது.

கிருஷ்ணன் - கல்லூரியில் படிக்கும் காலத்தே என்னோடு சிநேகமானவன். நான் தனியார் நிறுவனமொன்றில் வேலைக்குச் சேர்ந்தேன். அவன் ரியல் எஸ்டேட் பிஸினெஸ் ஆரம்பித்தான். வருடம் முழுக்க வேலை செய்து நான் ஈட்டுவதை அவனால் ஒரே நாளில் சம்பாதிக்க முடிந்தது.

என்னைக்கூட வேலையை விட்டுவிட்டு சொந்தமாகத் தொழில் தொடங்கும்படி பலமுறை சொல்லியிருக்கிறான். என் பலம் எனக்குத் தெரியும். கூட்டுக்குள் வாழ்வது தான் எனது எல்லை. சிறகு விரித்துப் பறக்கும் திறமையோ தைரியமோ கிடையாது. ஆனால் அவன் பறந்தான். லட்சங்களில் மிதந்தான். அவனது இலட்சியம் கோடிகளில் மையம் கொண்டிருந்தது.

சில வருடங்களுக்கு முன் அவனுடைய தொழில் நிலவரம் பாதிப்படைந்தது. நிலங்களின் விலை சரிந்தது. விற்க முன் வந்தவர்கள் ஏராளம். வாங்க ஆளில்லை, கிருஷ்ணன் அதைச் சாதகமாக எண்ணிக் கொண்டு அளவுக்கு மீறி கடன் வாங்கி மலிவாக வந்த அந்த இடங்களை வளைத்துப் போட்டான். விரைவில் நிலைமை சீரடைந்ததும் அதிக விலைக்கு விற்று 'கோடி' இலட்சியத்தை எட்டி விடலாம் என மனக்கணக்குப் போட்டான். கணக்கு தப்பானது. நிலைமை இன்னும் மோசமானது.

கிருஷ்ணன் கோபுரத்திலிருந்து குடிசைக்கு உருண்டான்.

நீண்ட இடைவெளிக்குப் பிறகு சென்ற வாரம்தான் அவன் என்னைத் தேடி வந்திருந்தான். கலைந்த தலையும் அழுக்கேறிய சட்டையுமாகக் காணவே சங்கடமாகத் தோன்றினான். கேண்டீனுக்கு கூட்டிச் சென்று சூடாய் வடையும் காப்பியும் வாங்கிக் கொடுத்தேன்.

மகள் திவ்யாவிற்கு ஸ்கூல் பீஸ் கட்ட அவசரமாக இரண்டாயிரம் ரூபாய் வேண்டும் எனக் கேட்டான். கேட்டவுடன் எடுத்துக் கொடுக்கவும் எனக்கு மனம் வரவில்லை. அதே நேரத்தில் முகத்திலடித்தாற்போல மறுத்துக் கூறவும் முடியவில்லை.

"இப்ப என் கையில் இல்லை கிருஷ்ணா... வேணா இன்னும் ரெண்டு மூணு நாள்ல எங்கயாவது ஏற்பாடு பண்ணித் தர்றேன்."

"ஃபீஸ் கட்ட இன்னைக்குதான் கடைசி நாள். கட்டலேன்னா டி.சி. கொடுத்து அனுப்பிடுவாங்க. எப்படியாவது உதவி பண்ணு." என் கைகளைப் பற்றிக் கொண்டு இறைஞ்சினான்.

"சரி, மதியம் வா. அதுக்குள்ள யார் கிட்டயாவது கைமாத்தா வாங்கி வைக்கறேன்..." எனச் சொல்லி அனுப்பிவிட்டு

ப்யூனை அழைத்து 'செக்'கை கொடுத் தனுப்பி எனது கணக்கிலிருந்து இரண்டா யிரத்தை எடுத்து வரச் செய்தேன்.

மதியம் கிருஷ்ணன் வந்தான்.

"இந்தா.. அவசரம்னு கேட்டியே... அதனால இன்னொருத்தர் கிட்டேயிருந்து கைமாத்தா வாங்கி வைச்சேன்..." கூசாத பொய்தான்.

"ரொம்ப நன்றி... சீக்கிரமா திருப்பிக் கொடுத்துடறேன்..."

கண்கலங்கி நன்றி கூறிவிட்டுப் போன வன் இன்று இறந்து போய் விட்டதாக...

நான் போய்ச் சேர்ந்தபொழுது கிருஷ் ணனின் சிறிய வீடு நிரம்பியிருந்தது. என் னைக் கண்டதும் அவன் மனைவி வசந்தி, "அண்ணா...." எனக் கதறினாள். அடையா ளம் தெரியாத அளவிற்கு உருமாறியிருந் தாள். திவ்யா, ரம்யா கூட இளைத்துப் போயிருந்தார்கள்.


"நெஞ்சு வலிக்குதுன்னாரு. ஹாஸ்பிட லுக்குக் கொண்டு போற வழியில...."

அவனது உடல் தகனமாகும் வரை இருந்து விட்டுத் திரும்பினேன். என்னுள் இரண்டாயிரம் ரூபாய் உறுத்திக் கொண்டே யிருந்தது. இச்சூழ்நிலையில் அதைப் பற்றி எப்படிப் பேசுவது?

அதன்பின் பல சமயம் வீட்டுக்குப் போய் வந்த போதும் இரண்டாயிரம் குறித்துச் சொல்ல என் மனம் ஒப்பவில்லை.

ஒரு நாள் வசந்தியே ஃபோன் செய்து என்னை வரச் சொன்னாள். சென்றேன். இப்பொழுது துக்கத்தின் அடர்த்தி

எஸ். ஆர். உதா பார்த்திபன்



குறைந்து சற்றுத் தெளிந்திருந்தாள்.

"அவர் நிறைய கடன் வாங்கியிருக்கார் போல. தினம் நாலஞ்சு பேர் வந்து கேட்டுட்டுப் போறாங்க. உண்மையா பொய்யான்னு எனக்குத் தெரியல. கடன் விவகாரம் பத்தி உங்ககிட்ட ஏதும் சொல்லியிருப்பாரோன்னுதான் வரச் சொன்னேன்."

"என்கிட்ட எதுவும் சொன்னதில்லம்மா...." என்றேன்.

நான் கொடுத்த இரண்டாயிரத்தைப் பற்றி எப்படிக் கூறுவது? சந்தர்ப்பம் பார்த்து நானும் பொய் சொல்வதாக நினைத்துக் கொண்டால்...? என்னிடம் வாங்கியதைப் பற்றிக் கிருஷ்ணன் சொல்லியிருப்பானோ...? வசந்தியாக வாய் திறந்தால் ஒழிய எப்படித் தெரிந்து கொள்வது?



"பசங்க எதிர்ல என்னைத் திட்டாதே. என்கூட சண்டை போடாதேன்னு எத்தனை தடவைதான் சொல்றது...?"

"அதுக்காக ஒரு நாளைக்கு இருபது தடவை பசங்களை வீட்டைவிட்டு வெளியே துரத்த முடியுமா என்ன?"

– சீர்காழி ரேவதி

"வாங்கின காசைத் திருப்பிக் கொடுக்காம ஏமாத்தறது பாவம். எம் பொண்ணுங்க நாளைக்கு நல்லா வாழ மாட்டாங்க. அதனால யார் யார் கடன் கொடுத்திருக்காங்களோ அவங்களுக்கு எல்லாம் 'செட்டில்' பண்ணிடலாம்னு இருக்கேன்" என்றாள் வசந்தி.

"உங்ககிட்ட அவன் ஒண்ணும் சொன்னதில்லையா?"

"இல்லை. பணம் தேவைன்னா எங்கயாவது அலைஞ்சு திரிஞ்சு கொண்டு வந்துடுவார். கேட்டா விவரம் சொல்ல மாட்டார். அன்னைக்குக் கூடப் பாருங்க, திவ்யாவுக்கு ஸ்கூல் பீஸ் கட்ட பணமில்ல. காலையில போனார். மதியம் பணத்தோட வந்துட்டார். யார்கிட்ட வாங்கினேன்னு மட்டும் சொல்லலை..."

அவ்வளவுதான். இரண்டாயிரத்தை காந்தி கணக்கில் எழுதிவிட வேண்டியதுதான். என் நெஞ்சம் சுருங்கிப் போனது.

"கிருஷ்ணன் டைரி எழுதுவானா?"

"ஒரு நோட்டு வைச்சிக்கிட்டு எழுதுவார்."

"அதில விவரம் இருக்கான்னு பார்க்கலாமே."

"எனக்கு இது தோணாம போச்சே... ஒரு நிமிஷம் இருங்க!"

அவள் உள்ளே போனாள். நான் படபடப்புடன் காத்திருந்தேன். என்னிடம் வாங்கியதைப் பற்றிக் கிருஷ்ணன் அதில் எழுதியிருக்க வேண்டுமென வேண்டிக் கொண்டேன். நூறு, இருநூறு என்றால் கூடப் பரவாயில்லை. இரண்டாயிரம் என்பது சுலபமாக ஒதுக்கிவிடக் கூடிய தொகையில்லையே!

"நல்லவேளை... இதில எல்லாத்தையும் எழுதியிருக்கார்" என்றவாறே வசந்தி வந்தாள்.

கடந்த நான்கு வருடங்களின் கணக்கு வழக்கும் அதில் இருந்தது. முதன்முறையாக யாரிடம் எவ்வளவு வாங்கினான் என்பதிலிருந்து கடைசியாக வாங்கியது வரை தேதிவாரியாக எழுதியிருந்தான். ஆனால் என்னிடம் வாங்கிய விவரம் மட்டும் அதில் இல்லை. எழுத மறந்திருக்கலாம். அல்லது விரைவில் திருப்பிக் கொடுத்துவிடலாம் என விட்டிருக்கலாம். எது எப்படியோ... அந்த இரண்டாயிரம் என்னை விட்டுப் போக வேண்டிய பணம் போலும்.

"இதில இருக்கிற எல்லாருக்கும் கொடுத்துடணும்" என்றாள்.

"எப்படிக் கொடுக்கப் போறீங்க?"

"மூணு லட்சத்துக்கு எல்.ஐ.சி. பாலிஸி எடுத்திருந்தார். அந்தப் பணம் வரும். மொத்த கடனை கணக்குப் போட்டா எண்பதாயிரம் வருது. அதைக் கொடுத்துட்டு மீதி இருக்கிறதை வைச்சி காலத்தை ஓட்டிடுவேன்."

நான் ஏதும் பேசாமல் நின்றேன்.

"அவர் உங்ககிட்ட ஏதும் வாங்கியிருக்காரா?" வசந்தியே கேட்டு விட்டாள்.

"ஆமாம்...!" என்று சொல்லலாம். அவளும் கொடுத்து விடுவாள். ஆனால் மனத்தின் ஒரு மூலையில் சிறிதேனும் சந்தேகம் எழாமல் போகாது. என் மேல் அவள் கொண்டிருக்கும் மதிப்பு சிதைந்து போகலாம். எனவே அவளது கேள்விக்கு 'இல்லை'

என பதில் சொன்னேன்.

"எனக்கு நீங்க இன்னொரு உதவி செய்யணும்!"

"என்ன... சொல்லுங்க?"

"பொம்பளை நான் எங்க போய் அலைவேன்? அதனால எல்.ஐ.சி. பாலிஸியைத் தர்றேன். பணம் கைக்கு வர நீங்கதான் ஏற்பாடு பண்ணணும்."

பரிச்சயமான ஆட்கள் இருந்ததால் எவ்வித செலவுமின்றி இரண்டே நாட்களில் வேலை முடிந்தது. வசந்தியை அழைத்து வந்து கையெழுத்து மட்டும் போடச் சொல்லி 'செக்'கை வாங்கிக் கொடுத்தேன்.

''ரொம்ப நன்றிங்க'' என்றாள் கண்கள் பனிக்க.

திரும்பி வரும் வழியில் "இதுக்கு ஏதும் செலவாச்சா?" எனக் கேட்டாள்.

நான் தயங்கினேன்.

"பரவாயில்ல... சொல்லுங்க. நான் கொடுத்துடறேன். எங்களுக்காக நீங்க ஏன் நஷ்டப்படணும்?"

சொல்ப வினாடிகளுக்கு எனக்குள் மாபெரும் தர்க்கம் நடந்தது. இறுதியில்... "எதுவும் செலவாகலை" என்றேன்.

"தயங்காதீங்க... ஏதாவது செலவு ஆயிருந்தா தந்துடறேன்" என்று மீண்டும் வற்புறுத்தினாள்.


''இல்லம்மா...'' என்றேன் இம்முறை மனசுக்குள் எந்தத் தர்க்கமும் இல்லாமல்.

காணாமல் போன கறுப்புக்கரை!

''என்னுடைய எழுபதாவது வயதில் பிள்ளையார்பட்டி கற்பக விநாயகர் கோவிலில் சிறப்பு பூஜை நடத்தினேன். 76 வயது நிறைவடைய இன்னும் நான்கைந்து நாட்களே உள்ள நிலையில் இன்று வாழ்ந்து கொண்டிருக்கிறேன் என்றால் அந்த கற்பக விநாயகரால்தான்''

தந்தை பெரியாரின் சீடர்களில் ஒருவரான முன்னாள் தமிழக அமைச்சர் க. ராசாராம் சொன்னதுதான் இது!

கறுப்புக் கரைகளும், கட்சிக் கரைகளும் விடைபெற்றுப் போயிருக்க மஞ்சள் கரை வேட்டியும் குங்குமம் நிறைந்த



• விழா மேடையில்...

நெற்றியுடனும் வந்திருந்தார் அவர்.

சிவகங்கை மாவட்டம் பிள்ளையார்பட்டி ஸ்ரீ கற்பக விநாயகர் திருக்கோயில் கருவறைக்கு வெள்ளிக் கதவுகளை வலையபட்டி வி.எம். அண்ணாமலை செட்டியார் நன்கொடையாக வழங்கிய விழா நடைபெற்றது. சென்னை உயர்நீதி மன்ற நீதிபதி சொக்கலிங்கம் அந்தக் கதவுகளைத் திறந்து வைத்தார்.

இந்த விழாவில் பேசியபோதுதான் இப்படிச் சொன்னார் ராஜாராம்.

நீதிபதி சொக்கலிங்கம் பேசியபோது

''எனக்கு ஆறேழு வயதிருக்கும். என்னுடைய தாயார் காரைக்குடி அருகிலுள்ள எனது சொந்த ஊரான ஆறாவயலில் உள்ள பிள்ளையார்கோவிலுக்கு அழைத்துச் செல்வார்கள். அங்கு 'ஊரனைத்தும் வாழ வேண்டும். அங்கு நாங்களும் வாழ வேண்டும்' என்று தொடங்கும் பாடலைப் பாடச் சொல்லுவார்கள். ஒருமுறை, ''எப்பொழுதும் சொல்லும் பாடல்தானே. நீங்கள் மட்டும் போய்ச் சொல்லிவிட்டு வாருங்கள். நான் கோவிலுக்கு வரவில்லை'' என்றேன். அப்போது எனது தாயார் கோபப்பட்டு ''இந்தப் பாடலை உன் வாழ்நாள் முழுவதும் தினமும் பாட வேண்டும்'' என்றார்கள். அந்த வேண்டுதல்தான் இன்று ஊர் அனைத்திற்கும் பொதுவாக இருந்து நெறி தவறாத நீதியை வழங்கும் பணியைக் கொடுத்திருக்கிறது'' என்றார்.

– சி. சிங்காரவடிவேல்



சிவகாமியின் சபதம்

பதினோராம் அத்தியாயம்

ஆயனச் சிற்பி

வானளாவி வளர்ந்திருந்த மரங்களின் கிளைகள் நெடுந்தூரத்துக்கு நெடுதூரம் பரவிப் பின்னிக் கொண்டிருந்த வனப் பிரதேசத்தின் மத்தியில் அழகான சிற்ப வீடு ஒன்று காணப்பட்டது.

மனோகரமான காலை நேரம், சூரியோதயமாகி ஒரு ஜாமம் இருக்கும். ஓங்கி வளர்ந்திருந்த மரங்களின் உச்சியில் வஸந்த காலத்தில் இளந்தென்றல் உலாவியபோது 'சலசல'வென்று இலைகள் அசையும் இனிய ஓசை எழுந்தது.

பட்சி ஜாலங்களின் கண்டங்களிலிருந்து விதவிதமான சுருதி பேதங்களுடன் மதுர மதுரமான அமுத கீதங்கள் பெருகிக்கொண்டிருந்தன.

வீட்டைச் சுற்றியிருந்த மரங்களின் அடியில் ஆங்காங்கே பெரிய பெரிய கருங்கற்கள் கிடந்தன. அந்தக் கருங்கற்களில், தனித் தனியாகவும் இருவர் மூவராகவும் இளம் சிற்பிகள் அமர்ந்து கையில் கல்லுளியுடன் வேலை செய்து கொண்டிருந்தார்கள்.

இளம் சிற்பிகள் கருங்கற்களில் கல்லுளியினால் வேலை செய்தபோது உண்டான 'கல்கல்' என்ற ஓசை, இலைகள் அசையும் ஓசையுடனும் பட்சிகளின் மதுர கானத்துடனும் கலந்து, செவி கொடுத்துக் கேட்பவர்களுக்கெல்லாம் நாத போதையை உண்டாக்கிற்று.

அமரர் கல்கி


இத்தகைய கீதப் பிரவாகத்துக்கிடையே, திடீரென்று வீட்டிற்குள்ளிருந்து 'ஜல்ஜல்' என்ற சத்தம் வந்தது.

இளம் சிற்பிகள் அவ்வளவு பேரும் சொல்லி வைத்தாற்போல் வேலையை நிறுத்திவிட்டுக் காது கொடுத்துக் கேட்டார்கள். அவர்களுடைய முகங்கள் எல்லாம் ஏக காலத்தில் மலர்ந்தன.

ஏனெனில், அந்த 'ஜல்ஜல்' ஒலியானது, அவர்களு



டைய ஆச்சாரிய சிற்பியின் மகள் சிவகாமி தேவியின் பாதச் சதங்கை ஒலியென்பதை அவர்கள் அறிந்திருந்தார்கள். மூன்று நாளாக ஏதோ ஒரு காரணத்தினால் சோகத்தில் ஆழ்ந் திருந்த சிவகாமி இன்றைக்குச் சோகம் நீங்கி





மீண்டும் நடனம் செய்ய ஆரம்பித்திருக்கிறாள் என்பதை அந்த 'ஜல்ஜல்' ஒலி பறையறைந்து தெரிவித்தது.

சற்று நேரம் அந்த இனிய ஒலியைக் கேட்டுக் கொண்டிருந்து விட்டு, ஒருவரோடொருவர் முக பாவத்தினாலேயே சம்பாஷித்து விட்டு, இளம் சிற்பிகள் மறுபடியும் தங்கள் வேலையை ஆரம்பித்தார்கள்.

ஆயனரின் சிற்பக் கோயிலுக்குள்ளே நாம் பிரவேசிப்பதற்கு முன்னால், அவர் அந்த நடுக்காட்டில் வந்து வீடு கட்டிக் கொண்டு வசிக்க நேர்ந்ததேன் என்பதைச் சிறிது கவனிப்போம்.

தெற்கே பாண்டிய நாட்டின் எல்லையிலிருந்து வடக்கே கிருஷ்ணா நதி வரையில் பரந்திருந்த பல்லவ ராஜ்யத்தில் காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு மகேந்திரவர்ம சக்கரவர்த்தி சிறப்புடன் ஆட்சி புரிந்துகொண்டிருந்த காலத்தில், தமிழகமெங்கும் ஓர் அதிசயமான 'கலை மறுமலர்ச்சி' ஏற்பட்டிருந்தது.

செந்தமிழ் நாடெங்கும் மகா சிற்பிகளும் சித்திரக் கலைஞர்களும் தோன்றிச் சிற்ப, சித்திரக் கலைகளை அற்புதமாக வளர்த்து வந்தார்கள். குன்றுகளைக் குடைந்து கோயில்களாக்கும் கலையும், கற்பாறைகளிலே சிற்பங்களைச் செதுக்கும் கலையும் எங்கெங்கும் பரவி வந்தன.

அதேசமயத்தில் தெய்வத் தமிழகத்தில் சைவ, வைஷ்ணவ சமயங்கள் புத்துயிர் பெற்றுத் தழைக்கத் தொடங்கின. சிவனடியார்களும், வைஷ்ணவப் பெரியார்களும் ஸ்தல யாத்திரை என்ற வியாஜத்தில் தேசமெங்கும் பிரயாணம் செய்து, சைவ வைஷ்ணவ சமயங்களைப் பரப்பி வந்தார்கள்.

இது காரணமாகத் தமிழகத்தில் சென்ற சில நூற்றாண்டு காலமாய் வேரூன்றியிருந்த புத்த, சமண சமயங்களுக்கும் சைவ, வைஷ்ணவ சமயங்களுக்கும் தீவிரப் போட்டி ஏற்பட்டது. அந்தந்தச் சமயத் தத்துவங்களைப் பற்றிய விவாதங்கள் எங்கே பார்த்தாலும் காரசாரமாக நடந்து கொண்டிருந்தன.

மேற்படி சமயப் போட்டியானது கலைத் துறையில் மிகுதியாகக் காணப்பட்டது. ஒவ்வொரு சமயத்தினரும் தங்கள் தங்கள் சமயத்தையொட்டிக் கலைகளை வளர்க்க முயன்றார்கள்.

சைவ வைஷ்ணவர்கள் சிவன் கோயில்களையும், பெருமாள் கோயில்களையும் நாடெங்கும் நிர்மாணிக்க விரும்பினார்கள். புத்தர்களும் சமணர்களும் எங்கெங்கும் புத்த விஹாரங்களையும் சமணப் பள்ளிகளையும் நிறுவத் தொடங்கினார்கள்.

பாறைகளுக்கும் குன்றுகளுக்கும் கூடப் பெரிய போட்டி ஏற்பட்டது! ஒவ்வொரு மதத்தினரும், "இது எங்கள் குன்று; எங்கள் பாறை!" என்று பாத்தியதை கொண்டாடினார்கள். அந்தப் பாறைகளையும் குன்றுகளையும் குடைந்து கோயில்களையும் விஹாரங்களையும் நிர்மாணிக்கும் ஆசையினால் தான் அத்தகைய போட்டி உண்டாயிற்று.

அதேமாதிரி சிற்பிகள், சித்திரக் கலைஞர்களின் விஷயத்திலும் பலமான போட்டி ஏற்பட்டிருந்தது. பெயர் பெற்ற சிற்பிகளிடமும் சித்திரக் கலைஞர்களிடமும் நாலு மதத்தினரும் வந்து "எங்கள் கோயிலில் வேலை செய்யுங்கள்!" என்று மன்றாடி அழைத்தார்கள்.

அத்தகைய பலமான போட்டிக்கு ஆளாகியிருந்தவர்களில் ஆயனச் சிற்பியும் ஒருவர்.

காஞ்சிமா நகரில் பிறந்து வளர்ந்து கலை பயின்ற ஆயனர், இளம் பிராயத்திலேயே 'மகா சிற்பி' என்று பெயர் பெற்று விட்டார். ஆயனருடைய புகழ் வளர வளர,

அவருடைய வேலைக்குக் குந்தகம் அதிகமாக ஏற்பட்டுக்கொண்டிருந்தது. மகேந்திர சக்கரவர்த்தி முதல் சாதாரண ஜனங்கள் வரையில் அடிக்கடி அவருடைய விடுதிக்கு வருவதும் அவருடைய சிற்ப வேலைகளைப் பாராட்டுவதுமாக இருந்தார்கள். வந்தவர்களை வரவேற்று உபசரிப்பதிலேயே அவருடைய காலம் அதிகமாகச் செலவழிந்து வந்தது.

சைவ குலத்தில் பிறந்த ஆயனர், இயற்கையாகச் சைவ மதப் பற்றுக் கொண்டிருந்தார். அதோடு, பழந் தமிழ் நாட்டுச் சிற்ப வடிவங்களில் சிறந்த ஸ்ரீ நடராஜ வடிவம் அவருடைய உள்ளத்தைப் பூரணமாய்க் கவர்ந்திருந்தது. எனவே, அவருடைய சிற்ப வேலைகள் பெரும்பாலும் சைவ மதத்தைத் தழுவியனவாக இருந்தன. இது காரணமாக, புத்த பிக்ஷுக்களும் சமண முனிவர்களும் ஆயனரைத் தங்கள் சமயத்தில் சேர்த்துக் கொள்ள இடைவிடாத முயற்சி செய்த வண்ணமிருந்தார்கள்.

இந்தத் தொல்லையிலிருந்து விடுபடுவதற்காக, ஆயனச் சிற்பியார் ஒரு தீர்மானத்துக்கு வந்தார். அதாவது காஞ்சி நகரை விட்டுச் சென்று எங்கேயாவது நடுக்காட்டில் ஏகாந்தமான பிரதேசத்தில் வீடு அமைத்துக் கொண்டு வசிக்க வேண்டும் என்பதுதான்.

அவ்விதம் ஆயனர் தீர்மானித்ததற்கு இன்னொரு முக்கியமான காரணமும் இருந்தது. அந்த மகா சிற்பி, சிற்ப சித்திரக் கலைகளை நன்கு பயின்றதோடு, பரத சாஸ்திரம் என்னும் மகா சமுத்திரத்தையும் கரை கண்டவராக இருந்தார்.

அவருடைய ஏக புதல்வி சிவகாமி குழந்தையாயிருந்த போதே நடனக் கலையில் அவள் சிறந்த தேர்ச்சியடைவாள் என்பதற்கு அறிகுறிகள் காணப்பட்டன.

ஆயனருடைய உள்ளத்தில் ஒரு பெரிய ஆசை உதயமாயிற்று.

'குழந்தை சிவகாமிக்குப் பரத நாட்டியக் கலையில் பயிற்சி அளிக்க வேண்டும்; அவளுடைய நடனத் தோற்றங்களைப் பார்த்து அவற்றைப் போல் ஜீவகலையுள்ள நவநவமான நடன வடிவங்களைச் சிலைகளிலே அமைக்க வேண்டும்' என்னும் மனோரதம் அவருக்கு உண்டாகி, நாளுக்கு நாள் வலுப்பெற்று வந்தது. நகரத்தை விட்டு எங்கேயாவது ஏகாந்தமான பிரதேசத்துக்குப் போனாலொழிய மேற்படி மனோரதம் நிறைவேறுவது சாத்தியமாகாது என்பதையும் அவர் நன்கு உணர்ந்தார்.

ஆயனர் தமது விருப்பத்தை மகேந்திர சக்கரவர்த்தியிடம் விண்ணப்பித்துக் கொண்டபோது, கலைஞர்களுடைய விசித்திர குணாதிசயங்களை நன்கு அறிந்தவரான மகேந்திர பல்லவர் உடனே அவருடைய யோசனைக்குச் சம்மதம் அளித்தார். அதற்கு வேண்டிய சௌகரியங்களையும் செய்து கொடுக்க முன்வந்தார்.

காஞ்சியிலிருந்து ஒரு காத தூரத்தில், ராஜபாட்டையிலிருந்து விலகியிருந்த அடர்ந்த வனப் பிரதேசம் ஒன்றை ஆயனர் தேர்ந்தெடுத்து, அங்கே வீடு கட்டிக் கொண்டு, குழந்தை சிவகாமியுடனும், பதியை இழந்திருந்த தம் தமக்கையுடனும் வசிக்கலானார்.

எந்த நோக்கத்துடன் ஆயனர் அந்த ஏகாந்தமான பிரதேசத்தைத் தேடி வந்தாரோ அந்த நோக்கம் சில அம்சங்களில் நன்கு நிறைவேறி வந்தது. சிவகாமி நாட்டியக் கலையில் நாளுக்கு நாள் தேர்ச்சி அடைந்து வந்தாள். அவளுடைய நடனத் தோற்றங்களைப் பார்த்து ஆயனர் முதலில் அவை போன்ற சித்திரங்கள் வரைந்து கொண்டார். பிறகு அந்தச் சித்திரங்களைப் போலவே அதிசயமான ஜீவகளை பொருந்திய நடன உருவங்களைக் கல்லிலே அமைக்கலானார்.

ஆயனர் ஏகாந்தமான பிரதேசத்துக்குப் போன போதிலும், வெளி உலகம் அவரை அடியோடு தனியாக விட்டு விடவில்லை.

கலைஞர்களும், கலைகளில் பற்றுடையவர்களும் காட்டு வழிகளிலே புகுந்து ஆயனர் வீட்டை அடிக்கடி தேடிச் சென்றார்கள். அவ்வாறு சென்றவர்களில் முக்கியமானவர்கள் மகேந்திர சக்கரவர்த்தியும் அவருடைய குமாரர் மாமல்லருந்தான்.

இவர்கள் ஆயனர் வீடு செல்லுவதற்கு முக்கியமான முகாந்திரமும் இருந்தது.

சக்கரவர்த்தியும் மாமல்லரும் ஒரு நாள் துறைமுகத்துக்குச் சென்றிருந்த போது, கடற்கரையோரமாகப் பரந்து கிடந்த குன்றுகளும் பாறைகளும் அவர்களுடைய கவனத்தைக் கவர்ந்தன. அந்தக் குன்றுகளிலும் பாறைகளிலும் விதவிதமான சிற்ப வேலைகளைச் செய்து அந்தக் கடற்கரையை ஒரு சொப்பன லோகமாகச் செய்துவிட வேண்டுமென்று அவர்கள் தீர்மானித்தார்கள். இந்த யோசனை முதன் முதலில் குமார சக்கரவர்த்தியின் மனத்தில் தோன்றியபடியால் அந்தத் துறைமுகப் பிரதேசத்திற்கு மாமல்லபுரம் என்ற பெயரைச் சக்கரவர்த்தி வழங்கி சிற்ப வேலைகள் தொடங்கச் செய்தார்.

தமிழகமெங்குமிருந்தும் ஆயிரக்கணக்கான சிற்பிகள் அங்கு வந்து வேலை செய்யத் தொடங்கினார்கள்.

இந்த வேலைகள் சம்பந்தமாக ஆயனரிடம் கலந்து ஆலோசிப்பதற்கும், அவ்வப்போது அவரை அழைத்துச் சென்று நடந்திருக்கும் வேலைகளைக் காட்டுவதற்குமாகச் சக்கரவர்த்தியும் மாமல்லரும் அவருடைய வீட்டுக்கு அடிக்கடி வர வேண்டியிருந்தது. அப்படி வரும்போதெல்லாம் ஆயனரின் நடனச் சிற்பங்களைப் பார்த்து அவர்கள் பாராட்டியதுடன் சிவகாமியை நடனமாடச் சொல்லியும் பார்த்து மகிழ்ந்தார்கள்.

சிவகாமி மங்கைப் பருவத்தையடைந்து நடனக் கலையில் ஒப்பற்ற தேர்ச்சியும் அடைந்த பிறகு, காஞ்சி ராஜ சபையில் அவளுடைய நடன அரங்கேற்றத்தை நடத்த வேண்டுமென்று சக்கரவர்த்தி ஆக்ஞாபித்தார்.

அந்த அரங்கேற்றம் எப்படி இடையில் தடைப்பட்டுப் போயிற்று என்பதை இந்த வரலாற்றின் ஆரம்ப அத்தியாயங்களில் பார்த்தோம்.


பன்னிரண்டாம் அத்தியாயம்

தெய்வமாக் கலை

அரண்ய மத்தியில் அமைந்த ஆயனர் வீட்டின் உட்புறம் கண்கொள்ளாக் காட்சியளித்தது.

வெளித் தாழ்வாரத்தையும் முன் வாசற்படியையும் தாண்டி உள்ளே சென்றதும், நாலு புறமும் அகன்ற கூடங்களும், நடுவில் விசாலமான முற்றமாக அமைந்த பெரிய மண்டபமும் காணப்பட்டன. முற்றத்துக்கு மேலே மண்டபம் எடுப்பாகத் தூக்கிக் கட்டப்பட்டிருந்தது. கூடங்களின் ஓரங்களில் சிற்ப வேலைப்பாடு அமைந்த தூண்கள் நின்றன. அவை, மேல் மண்டபத்தைத் தாங்குவதற்காக நின்றனவோ அல்லது அலங்காரத்துக்காக நின்றனவோ என்று சொல்ல முடியாமல் இருந்தது.

நாலு புறத்துச் சுவர்களிலும் விதவிதமான வர்ணங்களில் அழகழகான சித்திரங்கள் காணப்பட்டன. அந்தச் சித்திரங்களில் ஸ்ரீ நடராஜ மூர்த்தியின் நாதாந்த நடனம், தாண்டவ நடனம், குஞ்சித நடனம், ஊர்த்வ நடனம் ஆகிய



தோற்றங்கள் அதிகமாக இருந்தன. அம்மாதிரியே ஓர் அழகிய இளம் பெண்ணின் பலவகை அபிநய நடனத் தோற்றங்களும் அதிகமாகக் காட்சியளித்தன.

முற்றத்தில் பெரிய கருங்கற்களும், உடைந்த கருங்கற்களும், பாதி வேலை செய்யப் பெற்ற கருங்கற்களும் கிடந்தன. ஒரு பக்கத்துக் கூடத்தில் வேலை பூரணமாகி ஜீவ களையுடன் விளங்கிய சிலைகள் வரிசையாக வைக்கப்பட்டிருந்தன. சித்திரங்களில் தோன்றிய அதே இளம் பெண்ணின் மோகன வடிவந்தான் அந்தச் சிலைகளிலும் விளங்கின. ஒவ்வொரு சிலையும் பாத சாஸ்திரத்தில் சொல்லியிருக்கும் நூற்றெட்டு அபிநயத் தோற்றங்களில் ஒன்றைக் குறிப்பிடுவதாயிருந்தது.

ஆனால், நாம் குறிப்பிடும் சமயத்தில் அந்தச் சிற்ப மண்டபத்துக்குள் பிரவேசிப்பவர்கள் மேற்கூறிய சிற்ப அதிசயங்களையெல்லாம் கவனம் செலுத்திப் பார்த்திருக்க முடியாது. அவர்களுடைய கருத்தையும் கண்களையும் அம் மண்டபத்தின் ஒரு பக்கத்துக் கூடத்தில் தோன்றிய காட்சி பூரணமாகக் கவர்ந்திருக்கும்.

சித்திரங்களிலும் சிலைகளிலும் தோற்றமளித்த இளம் பெண்ணானவள் அங்கே சுயமாகவே தோன்றி, கால் சதங்கை 'கலீர் கலீர்' என்று சப்திக்க நடனமாடிக் கொண்டிருந்தாள். அவளுக்கெதிரே சற்றுத் தூரத்தில் ஆயனச் சிற்பியார் உட்கார்ந்து கண் கொட்டாத ஆர்வத்துடன் பார்த்துக்கொண்டிருந்தார்.

பார்த்துக்கொண்டிருந்தவர் திடீரென்று "நில்!" என்றார். அந்த க்ஷணமே சிவகாமியும் ஆட்டத்தை நிறுத்தி, அப்போது நின்ற நிலையிலேயே அசையாமல் நின்றாள்.

ஆயனர் கையில் கல்லுளியை எடுத்தார். அவர் அருகில் ஏறக்குறைய வேலை பரிபூரணமான ஒரு சிலை கிடந்தது. அதன் கண் புருவத்தின் அருகே ஆயனர் கல்லுளியை வைத்து இலேசாகத் தட்டினார். மறுபடியும் சிவகாமியை நிமிர்ந்து பார்த்து, "சற்று இரு! அம்மா!" என்று கூறி, மேலும் அச்சிலையின் புருவங்களில் சிறிது வேலை செய்தார். பிறகு, "போதும், குழந்தாய்! இங்கே வந்து உட்கார்!" என்றார்.

சிவகாமி ஆயனர் அருகில் சென்று உட்கார்ந்தாள். அவள் முகத்தில் முத்து முத்தாகத் துளித்திருந்த வியர்வையை ஆயனர் தம் அங்கவஸ்திரத்தினால் துடைத்துவிட்டு, அம்மா! சிவகாமி! பரத சாஸ்திரத்தை எழுதினாரே, அந்த மகா முனிவர் இப்போது இருந்தால் உன்னிடம் வந்து அபிநயக் கலையில் நுட்பங்களைக் கற்றுக் கொள்ள வேண்டியதாயிருக்கும். கண் பார்வையிலும், புருவத்தின் நெறிப்பிலும் என்ன அற்புதமாய் நீ மனோபாவங்களைக் கொண்டு வந்து விடுகிறாய்? நடனக் கலைக்காகவே நீ பிறந்தவள்!" என்றார்.


"போதும் அப்பா, போதும். எனக்கு ஒன்றுமே பிடிக்கவில்லை!" என்று அலுப்பான குரலில் கூறினாள் சிவகாமி.

"பிடிக்கவில்லையா? என்ன பிடிக்கவில்லை?" என்று ஆயனர் வியப்புடன் கேட்டார்.

"நான் பெண்ணாய்ப் பிறந்ததே பிடிக்கவில்லை!" என்றாள் சிவகாமி.

"சிவகாமி! இது என்ன இது? மூன்று நாளாகத்தான் உடம்பு நன்றாக இல்லை என்று சொன்னாய். இன்றைக்கு ஏன் இத்தனை வெறுப்பாய்ப் பேசுகிறாய்? என் பேரில் ஏதாவது கோபமா?" என்று ஆயனர் பரிவுடன் கேட்டார்.

"உங்கள் பேரில் எனக்கு என்ன கோபம், அப்பா! பரத சாஸ்திரம் என்று ஒன்றை எழுதினாரே, அந்த முனிவரின் பேரில்தான் கோபம். எதற்காக இந்தக் கலையைக் கற்றுக் கொண்டோம் என்றிருக்கிறது" என்று கூறிப் பெருமூச்சு விட்டாள் சிவகாமி.



"ஆகா! என்ன வார்த்தை சொன்னாய்? பரத முனிவரின் பேரில் கோபமா? சிவகாமி! நிருத்யக் கலையில் நீ அபூர்வமான தேர்ச்சியடைந்திருக்கிறாய். ஆனால், அந்தக் கலையின் பெருமையை நீ உணரவில்லை. நிருத்யக் கலைதான் மற்ற எல்லாக் கலைகளுக்கும் அடிப்படை. சிவகாமி! அதனாலேதான் இதைத் தெய்வமாக் கலையென்றும் பிரம்ம தேவர் பரத முனிவருக்கு அருளிய 'நாட்டிய வேதம்' என்றும் சொல்கிறார்கள். நிருத்யக் கலையிலிருந்துதான் சித்திரக் கலை உண்டாயிற்று. அதிலிருந்துதான் சிற்பக் கலை வளர்ந்தது. இசைக் கலைக்கும் நிருத்யக் கலைதான் ஆதாரம். பரத சாஸ்திரம் அறியாதவர்கள் சங்கீதத்தின் ஜீவ தத்துவத்தை அறிய முடியாது. அம்மா! அன்றைக்கு ருத்ராச்சாரியாரே இதை ஒப்புக்கொண்டு விட்டார்..."

"யார் ருத்ராச்சாரியார்? சக்கரவர்த்திக்குப் பக்கத்தில் பெரிய வெள்ளைத்தாடியோடு உட்கார்ந்திருந்தாரே, அவரா?"

"ஆம்; அவர்தான். நமது மகேந்திர சக்கரவர்த்தியின் சங்கீத ஆசிரியர். சங்கீதத்தைப் பற்றிச் சாஸ்திரம் எழுதியிருக்கிறார். இப்போது கிழவருக்கு வயது அதிகமாகிவிட்டது. இருந்தாலும் தடியை ஊன்றிக்கொண்டு உன்னுடைய அரங்கேற்றத்துக்கு வந்திருந்தார். உன்னுடைய ஆட்டத்தைப் பார்த்துப் பிரமித்துப் போய்விட்டார். சபை கலைந்தவுடனே அவர் என்னைக் கூப்பிட்டு, 'உன் மகள் நன்றாயிருக்க வேண்டும். அவள்தான் இன்று என் குருட்டுக் கண்களைத் திறந்து ஒரு முக்கியமான உண்மையை உணரச் செய்தாள். நான் சங்கீத சாஸ்திரம் எழுதியிருக்கிறேனே, அதெல்லாம் சுத்தத் தவறு. பரத சாஸ்திரம் பயிலாமல் நான் சங்கீதத்தைப் பற்றி எழுதியதே பெரும் பிசகு!' என்று சொன்னார். சங்கீத மகாசாகரமாகிய ருத்ராச்சாரியாரே இவ்வாறு சொல்லுகிறாரென்றால்..."

"அப்பா! யார் என்ன சொன்னால் என்ன? எனக்கு என்னமோ ஒன்றும் பிடிக்கவில்லை. பரதம், சங்கீதம், சிற்பம், சித்திரம் - இவற்றினால் எல்லாம் உண்மையில் என்ன பிரயோஜனம்?"

"சிவகாமி! நீதானா கேட்கிறாய், கலைகளினால் என்ன பிரயோஜனம் என்று? மகளே! நான் கேட்கிறதற்கு விடை சொல். வஸந்த காலத்தில் மரங்களும் செடிகளும் பூத்துக்குலுங்குவதனால் என்ன பிரயோஜனம்? பௌர்ணமி இரவில் பூரண சந்திரன் பால் நிலவைப் பொழிகிறதே, அதனால் என்ன உபயோகம்? மயில் ஆடுவதனாலும், குயில் பாடுவதனாலும் யாது பயன்? கலைகளின் பயனும் அவை போன்றதுதான். கலைகளைப் பயில்வதிலேயே ஆனந்தம் இருக்கிறது. அந்த ஆனந்தத்தை நீ அனுபவித்ததில்லையா? இன்றைக்கு ஏன் இப்படிப் பேசுகிறாய், அம்மா?"

சிவகாமி மறுமொழி சொல்லாமல் எங்கேயோ பார்த்த வண்ணம் இருந்தாள். காதளவு நீண்ட அவளுடைய கரிய கண்களில் முத்துப்போல் இரு கண்ணீர்த் துளிகள் துளித்து நின்றன.

இதைப் பார்த்த ஆயனர் திடுக்கிட்டவராய்ச் சற்று நேரம் சிந்தனையில் ஆழ்ந்திருந்தார். பிறகு, சிவகாமியின் கூந்தலை அருமையுடன் தடவிக் கொடுத்த வண்ணம் கூறினார்:

"அம்மா! எனக்குத் தெரிந்தது... உன்னை அறியாப் பிராயத்துச் சிறு குழந்தையாகவே நான் இன்னமும் எண்ணிக்கொண்டிருக்கிறேன். அது தவறுதான். உனக்குப் பிராயம் வந்து உலகம் தெரிந்துவிட்டது. உன்னை ஒத்த பெண்கள் கல்யாணம் செய்துகொண்டு குடியும் குடித்தனமுமாய் வாழ்கிறார்கள் என்பதைப் பார்த்திருக்கிறாய். உன் அன்னை உயிரோடு இருந்திருந்தால், இத்தனை நாளும் உனக்குக் கல்யாணம் செய்து வைக்கும்படி என் பிராணனை வாங்கியிருப்பாள். ஆனால், நானும் அந்தக் கடமையை மறந்து விடவில்லை. சிவகாமி! பரத சாஸ்திரத்தில் சொல்லியிருக்கும் நூற்றெட்டு அபிநயத் தோற்றங்களில் நாற்பத்தெட்டு தோற்றங்களைச் சிலைகளில் அமைத்து விட்டேன். இன்னும் அறுபது சிலைகள்

அமைந்தவுடனே, உனக்குத் தக்க மணாளனைத் தேடிக் கல்யாணம் செய்து கொடுத்துவிட்டு மறுகாரியம் பார்ப்பேன்!"

இவ்விதம் ஆயனர் சொன்னபோது சிவகாமி கண்களைத் துடைத்துக் கொண்டு அவரை நிமிர்ந்து பார்த்து, "கல்யாண பேச்சை எடுக்க வேண்டாம் என்று எத்தனை தடவை சொல்லியிருக்கிறேன். அப்பா! எனக்குக் கல்யாணமும் வேண்டாம், ஒன்றும் வேண்டாம். உங்களைத் தனியாக விட்டு விட்டு நான் போவேனா? அத்தகைய கிராதகி அல்ல நான்!" என்றாள்.

உண்மை என்னவென்றால், சிவகாமியைக் கல்யாணம் பண்ணிக் கொடுப்பதில் ஆயனருக்கு அந்தரங்கத்தில் விருப்பம் கிடையாது. குழந்தைப் பிராயத்திலிருந்து அவளைக் கண்ணுக்குக் கண்ணாக வளர்த்தவர் அவர். கல்வியும் கலையும் பயில்வித்தவர் அவர். பெண்ணை விட்டுப் பிரிந்து ஒரு நிமிஷங்கூடத் தாம் உயிர் வாழ முடியாது என்று ஆயனர் எண்ணினார். ஆனாலும், என்றைக்காவது ஒரு நாள் அவளைக் கல்யாணம் செய்து கொடுத்துத்தானே ஆக வேண்டும் என்னும் நினைவு அடிக்கடி அவர் மனத்தில் உறுத்திக்கொண்டிருந்தது.

எனவே, சிவகாமியின் கல்யாணத்தைப் பற்றி அவர் சில சமயம் பிரஸ்தாபிப்பது உண்டு. அப்போதெல்லாம் சிவகாமி, "எனக்குக் கல்யாணம் வேண்டாம்" என்று மறுமொழி கூறுவதைக் கேட்பதில் அவருக்கு மிகவும் ஆனந்தம்.

இன்றைக்கும் சிவகாமியின் மறுமொழி ஆயனருக்கு ஆறுதலை அளித்தது. எனினும், அவர் மேலும் தொடர்ந்து "அதெப்படி, சிவகாமி! மணம் செய்து கொடுக்காமலேயே நான் உன்னை என் வீட்டிலேயே வைத்துக் கொண்டிருந்தால் நன்றாயிருக்குமா? உலகம் ஒப்புக் கொள்ளுமா? ஒரு தகுந்த பிள்ளையாகப் பார்த்துக் கல்யாணம் பண்ணிக் கொடுக்க வேண்டியது தான். ஆனால் இந்த யுத்தம் ஒன்று வந்து தொலைத்திருக்கிறது. இதனால் நமது குமார சக்கரவர்த்தியின் திருமணம்கூடத் தடைப்படும் போலிருக்கிறது."

சிவகாமியின் முகத்தில் அப்போது ஒரு அதிசயமான மாறுதல் காணப்பட்டது. ஆங்காரத்தினால் ஏற்பட்ட கிளர்ச்சி அந்த அழகிய முகத்தை இன்னும் அழகுபடுத்தியது.

"என்ன அப்பா சொல்கிறீர்கள்? யாருக்குத் திருமணம்? குமார சக்கரவர்த்திக்கா?" என்றாள்.

"ஆமாம்! மாமல்லருக்கு இந்த ஆண்டில் திருமணம் நடத்த வேண்டுமென்று மகாராணிக்கு மிகவும் ஆசையாம். யுத்தம் முடிந்த பிறகுதான் கல்யாணம் என்று சக்கரவர்த்தி சொல்லி விட்டாராம். இதனால் புவன மகாதேவிக்கு மிகுந்த வருத்தம் என்று கேள்வி."

சிவகாமி குரோதம் ததும்பிய குரலில், "அப்பா! யார் வேணுமானாலும் கல்யாணம் செய்து கொள்ளட்டும்! அல்லது செய்து கொள்ளாமல் இருக்கட்டும். நான் என்னவோ கல்யாணம் செய்து கொள்ளப் போவதில்லை" என்றாள்.

ஆயனர் மீண்டும், "அதெப்படி முடியும். சிவகாமி! சைவ குலத்துப் பெண்ணை மணம் செய்து கொடுக்காமல் எப்படி வைத்திருக்கலாம்? நாலு பேர் கேட்டால், நான் என்ன சொல்லுவது?" என்றார்.

"அப்பா! நீங்கள் கவலைப்பட வேண்டாம். நான் புத்த மதத்தைச் சேர்ந்து பிக்ஷுணியாகி விடுகிறேன். அப்போது உங்களை ஒருவரும் ஒன்றும் கேட்க மாட்டார்கள்" என்றாள் சிவகாமி.

அவள் இவ்விதம் சொல்லி வாய் மூடிய அதே சமயத்தில், வாசற்புறத்தில் "புத்தம் சரணம் கச்சாமி" என்று குரல் கேட்டது.

இருவரும் திரும்பிப் பார்த்தார்கள். வாசற்படிக்கு அருகில் நாகநந்தி அடிகளும், அவருக்குப் பின்னால் வியப்புடன் உள்ளே எட்டிப் பார்த்துக் கொண்டு பரஞ்சோதியும் நின்று கொண்டிருந்தார்கள்.

(தொடரும்)

ரியல் சல்யூட்!









பரட்டைத் தலைமுடி, அழுக்கான அலங்கோலமான ஆடைகள். 'குப்'பென்று வாடை வீசும் தேகம். 'தெய்வீகச் சிரிப்பு ஐயா... உந்தன் சிரிப்பு!' எனச் சொல்லுமளவுக்கு வசீகரப் புன்னகை. சிலசமயங்களில் 'உர்'ரென்று முறைப்பு. எதற்கும் சலனமில்லை. ஏகாந்தம்! பசியும், ருசியும் அறியாத மனநிலை பாதிக்கப்பட்ட இவர்களை சாலையோர சித்தர்களாக பாவித்து கடந்த எட்டு மாதங்களாக அவர்களுக்கு தினசரி ஒருவேளை உணவளித்து வருகிறது திருச்சி, ஸ்ரீ பரமஹம்ஸ ஸேவா சங்கம்.

சாலையோர சித்தர்கள் சுமார் இருபத்தி ஐந்து பேர், அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்குத் தங்கியிருக்கும் ஏழை நோயாளிகள் இருபத்தைந்து நபர்கள் என மொத்தம் ஐம்பது நபர்களுக்கு தினசரி ஒரு வேளை உணவை அன்புடன், தயாரித்து ஸ்ரீ பரமஹம்ஸ ஸேவா சங்கத்தினருக்குக் குறைந்த கட்டணத்தில் அளித்து வருகிறார் ஸ்ரீ சரவண பவன் ஹோட்டல் உரிமையாளர் தனபால்.

திருச்சி மத்திய பேருந்து நிலையம்.

குளித்தலை கரூர் செல்லும் பேருந்துகள் நிற்குமிடத்திற்கு எதிரில். சுவர் ஓரத்தில், எழுபது வயதாகும் கிறிஸ்டோபர் தாமஸை காணலாம். எங்கும் எழுந்து சென்று நடக்க முடியா







டதில் கால் ஊன்றி எழுந்து நடக்க இயலவில்லை. மருத்துவர்கள் கை விரித்த பின்னர் குடும்பத்தினரின் 'நல்ல எண்ணத்தினால்' திருச்சி மத்திய பேருந்து நிலையத்தில் தெரிந்தே தொலைக்கப்பட்டவர்.

சாலையோர சித்தர்கள் பலருக்கு சங்கத்தினரே பெயர் சூட்டி உள்ளார்கள். சந்திக்கும்போதெல்லாம் அந்தப் பெயர்களையே கூறி அழைத்து வருகிறார்கள். ஸ்டேட் பேங்க் வெளியே நடைபாதையில் வீற்றிருக்கும் சாலையோர சித்தர் ஒருவர் பெயர் சாத்தையன். தரை மீது இலை விரித்து உணவு பரிமாறப்படுகிறது. சுற்றும் முற்றும் முறைத்துப் பார்க்கிறார். பின்னர் அந்த உணவையே வெறித்து நோக்குகிறார். கைகளை அலம்பி விட்டு 'சாப்பிடு சாத்தையா!' என்று சொன்ன பிறகே எதிலிருந்தோ மீண்டவராக விடுபட்டு வேகமாகச் சாப்பிடத் துவங்குகிறார்.

தலைமை தபால் நிலைய அலுவலக நடைபாதை வெட்ட வெளியில் அமர்ந்திருப்பவர் ஒரு வட



தவர். ஆங்கிலம் தவிர வேறு மொழி பேசாத பெங்களூர்க்காரர். ஹிந்துஸ்தான் ஏரோனாட்டிக் லிமிடெட்டில் ஆபீசராக இருந்தவர். குடும்பத்துடன் சுற்றுலாவாக வேளாங்கன்னி வந்த போது அங்கு நடந்த விபத்து ஒன்றில் கடுமையாய்ப் பாதிக்கப்பட்



இந்தியர். ஒரு வார்த்தை கூட அவர் பேசுவதில்லை. எப்போதும் வெகு சீரியஸாக முகத்தை வைத்துள்ளார். அந்த வேளை உணவைப் பரிமாறிவிட்டு நகர்ந்து விட வேண்டும். இல்லையேல் பரிமாறியவரையே கோபத்துடன் முறைக்கிறார்.

மத்திய தந்தி அலுவலகத்தின் வெளியே சாலையோரமாய் நின்று கொண்டேயிருப்பார் அவர். உச்சிவெயிலில் நிற்பதுதான் இஷ்டம். மரத்தடி நிழலில் வற்புறுத்தி உட்காரச் செய்துவிட்டுத் திரும்பி வந்தால் மறுபடி வெயிலில் பழனிமலை முருகன் போசில் நின்று கொண்டிருப்பார். வைத்துள்ள பெயர் முருகன்!

ஜங்ஷன் ரயில் நிலையத்தில் எட்டாவது எண் பிளாட்பாரவாசி ஒருவர். அவர் பெயர் 'ஜங்ஷன்.' எப்பொழுதும் கிழிந்த ஆடை. புதிய உடை பலமுறை கொண்டு தந்தாலும் மறுத்து விடுகிறாராம். ஒருவேளை உணவைக் கூட பலத்த யோசனைக்குப் பின்னரே சாப்பிடத் துவங்குவது போல் உள்ளது அவரது பாவனை.

ஜங்ஷன் ரயில் நிலையத்தின் உள்ளே பிளாட்பார முடிவின் கிழக்குமுகமாக விரிந்து செல்லும் நிலப்பரப்பு. அங்கே சிமெண்ட் கான்கிரீட் ஸ்லீப்பர் கட்டைகள். இதுவே அவரின் இருப்பிடம். இருபுறங்களில் ஒருபுறம் அகல ரயில்பாதை தடங்கள் வழியே சென்னை செல்லும் ரயில்கள். இன்னொருபுறம் குறுகிய ரயில் பாதை தடங்களில் தஞ்சை வழியே செல்லும் ரயில்கள். எந்நேரமும் இந்த இரைச்சலுக்கு இடையே இருந்து வரும் அவர் ஒரு மன நோயாளி. முப்பது வயது இருக்கலாம். முழு நிர்வாணக் கோலத்துடன் எப்பொழுதும் இருக்கிறார். இந்த இருப்பிடம் விட்டு அவர் அகன்று சென்றதே இல்லையாம். ஏகாந்தச் சிரிப்பு. இலை விரித்து இவருக்கென உணவு வைத்தால் போதும் ஸ்லீப்பர் கட்டைகளின் உள்ளிருந்து ஒரு மூஞ்சுறு படையே பாய்ந்து வருகின்றன. இவருடு, மூஞ்சுறுகளும் உணவைப் பகிர்ந்து உண்கின்றன. நான்கைந்து பாம்புகளும் ஸ்லீப்பர் கட்டைகளின் உள்ளே இருப்பதாகச் சொல்கிறார்கள்! பேச்சு எதுவுமின்றி மௌன விரதராய் நிர்வாணமாய்க் காட்சி தரும் இவருக்கு வைத்துள்ள பெயர் 'பால யோகி!'

சாலையோர சித்தர்களில் முப்பது வயதிருக்கும் சுரேஷ்குமார் எனப்படுபவர் சற்றே வித்தியாசமானவர். எப்போதும் சத்தமாய் எதையோ பேசிக் கொண்டேயிருக்கிறார். அதில் அரசியல் நெடி அதிகம் வீசினாலும் இறுதியில் தேசப்பற்றே விஞ்சி நிற்கின்றது. இரவு பகல் தூக்கம் துறந்து உலவுபவர். "நான் தூங்கிப் போனால்... என் இந்திய தேசம் உறங்கிப் போய்விடும். என் தேசத்தைத் தூங்க விட மாட்டேன். விழித்திருக்க வைத்திருப்பேன்!" என முழக்கமிடும் அவர், ஒவ்வொரு முறை உணவுத் தரப்படும் போதும் மறக்காமல் 'பாரத் மாதா கி ஜே!' என்று சல்யூட் வைக்கிறார்.

கட்டுரை, படங்கள் :
ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு



''உங்க மனைவி மெகாசீரியல் பார்க்கறதைக் குறைச்சுக்கிட்டாங்களா... ஏன்?''

''எங்க அம்மாவோட சண்டை போட நேரமில்லாமல் போகுதாம்!''

– வே. ஆறுமுகம்



"எதுக்கும் கமிஷனரிடம் ஒரு வார்த்தை கேட்டுக்கிட்டு அப்புறம் கொண்டாந்து தர்றேன் சார்!"

"சே! முதல்வருக்குப் பிடிக்காத மேயரா இருந்துக்கிட்டு உன்னிடம் போய் ஒரு தம்ளர் தண்ணீர் கேட்டேன் பார்...!"

– உ. ராஜாஜி




• நந்தினி

நான் முதன் முறையாக 'பொன்னியின் செல்வன்' படித்தபோது பதினைந்து வயதிருக்கும். இதுவரை மூன்று முறை படித்துள்ளேன். இப்போதும் திகட்டவில்லை. புதிய நாவல் படிப்பது போலவே வெகு சுவாரசியம். அதில் வரும் கதாபாத்திரங்களால் பெரிதும் கவரப்பட்டு, என் மகனுக்கு 'அருண்மொழிவர்மன்' என்றும் மகளுக்கு 'குந்தவை' என்றும் பெயரிட்டுள்ளேன். படிப்பிலும், விளையாட்டிலும் படு சுட்டியாக இருக்கிறார்கள் இந்தப் பாச மலர்கள்.

– டி. கார்த்திகேயன், பாண்டிச்சேரி.

எனக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்தே 'கல்கி' வாங்கி வருகிறோம். நாங்கள் அனைவருமே 'கல்கி' அபிமானிகள். 'பொன்னியின் செல்வன்' வெளியானபோது, நான் பிறந்ததால், எனக்கு 'பூங்குழலி' என்று பெயர் சூட்டி மகிழ்ந்தார்கள். என் பெரியப்பாவும், தன் மகள்களுக்கு 'வானதி', 'குந்தவை' என பெயர் வைத்துள்ளார். என் சிறு வயதில், என் பெயரை உச்சரிக்கத் தெரியாமல், பலரும் தடுமாறும்போது, சங்கடமாக இருக்கும். ஆனால், 1990–ல் இரண்டாவது முறையாக 'பொன்னியின்' செல்வன்' படித்தபோது தான், என் பெயரின் அருமை புரிந்தது. எனக்கும் பூங்குழலிக்கும் ஒரே குணாதிசயம். பிறருக்கு உதவுவதிலும், இயற்கையை ரசிப்பதிலும், தனிமையை விரும்புவதிலும், நினைத்ததை சாதிப்பதிலும் நானும் சரித்திரப் பூங்குழலியும் ஒரே போல இருப்பதாக அப்பா கூறுவார்கள்.

– எஸ். பூங்குழலி, கிருஷ்ணகிரி.



• அருண்மொழிவர்மன் - குந்தவை

வல்லத்து அரண்மனையில்...

நான் என் மனைவி உமாவை, அவர் படித்த தஞ்சை வல்லம், பெரியார் மணியம்மை மகளிர் கல்லூரியில் சந்தித்தேன். உமாவின்



• தாரிணி



• பூங்குழலி

தாயாரும் உடன் வர, பெண் பார்க்கும் படலம் நடந்தது. அங்குள்ள வல்லத்து அரண்மனையின், பூஞ்சோலைக்கு நடுவே இருந்த பாழடைந்த மண்டபத்தில், சந்தித்துப் பேசினோம்!

'இந்தப் பெண்ணே எனக்கு மனைவியானால் எங்களுக்குப் பிறக்கும் குழந்தைக்கு 'வந்தியத்தேவன்' எனப் பெயர் சூட்டுவேன்' என மனசுக்குள் நினைத்துக் கொண்டேன். அதேபோல என் மனைவியும் எட்டாம் வகுப்பு படிக்கும்போதே, 'பொன்னியின் செல்வன்' படித்துவிட்டு, 'ஆண் குழந்தை பிறந்தால் வந்தியத்தேவன்' என பெயர் வைக்க வேண்டும் என ஆசைப்பட்டிருக்கிறார். கர்ப்பத்திலிருந்தது மகனா, மகளா என தெரியாத நிலையிலேயே, 'ஆண் குழந்தை பிறந்தால் வந்தியத்தேவன் என வைக்கலாமா?' என்று நான் கேட்க, அவள் இன்ப அதிர்ச்சியில் அசந்து போனது இன்றும் இனிக்கிறது.

– கே.பி. நடராசன்,சென்னை – 33.

'அலை ஓசை'யின் அழகோவியமான 'தாரிணி' என்ற பெயரை என் பெண்களுக்குச் சூட்ட வேண்டும் என்று ஆசைப்பட்டவர் என்னுடைய மச்சினர். அது முடியாமல் போகவே, என் பேத்திக்கு அந்தப் பெயரைச் சூட்டி மகிழ்ந்தார். அந்த சின்னத் தாத்தா வேறு யாருமல்ல, இப்போது அட்வகேட் ஜெனரலாக இருக்கும் என்.ஆர். சந்திரன்தான். என் பேத்தி தாரிணி பரோடாவில் ஒன்பதாம் வகுப்பு படிக்கிறாள். படிப்பு, பாட்டு, நடனம், கை வேலைப்பாடு என எல்லாவற்றிலும் அவுட்-ஸ்டான்டிங்.

– ராஜலக்ஷ்மி பாஸ்கரன்,
சென்னை – 28.

• வந்தியத்தேவன்



பல தலைமுறையாக, நாங்கள் 'கல்கி'யின் வாசக குடும்பம். 'பொன்னியின் செல்வன்' பாதிப்பு பல வகையிலும் ஆட்கொள்வது தொடர்கதையே.


எங்கள் மூத்த மகன் எம்.எம். மணிமாறன் – ராஜலட்சுமிக்குக் குழந்தை பிறந்தபோது, வானதி, பூங்குழலி, நந்தினி என மூன்று பெயரையும் தேர்வு செய்து வைத்திருந்தோம். அழகும், ஆற்றலும், வீரமும் கொண்ட நந்தினியின் பெயருக்கே வோட்டு அதிகமாக விழுந்ததால், 'நந்தினி'யே நிலைத்தது.

அதுமட்டுமல்ல, தாய், தந்தை இருவரது பெயரின் முதல் எழுத்துக்களையும் சேர்த்து 'எம்.ஆர்' என்ற இனிஷியலுடன் பெயர் பதிவு செய்தோம்.

– காமாட்சி சத்தியநாராயணன், வேலூர்.

வட்டமேஜை

✉ 'அது மட்டும்!' சிறுகதையில் லலிதா வெங்கடேஷின் நூதன சிந்தனை பாராட்டுக்குரியது. கணிப்பொறி, ஈமெயில், சாட், இதெல்லாம் கிராமவாசிகளுக்குப் புரியுமா தெரியாது - ஆனால் சென்னைவாசிகளின் நிரந்தர கஷ்டம் மட்டும் புரியும்.
பெங்களூர், தாமல் கண்ணன்.



காசா, பணமா? ஓசிதானே!

✉ உடன்பிறவா வியாதியாக நம்மிடம் வியாபித்திருக்கும் 'ஓசி' வியாதியை வரலொட்டியார் அலசியிருந்த விதம் பாராட்டுக்குரியது. (காசா, பணமா? ஓசிதானே பாராட்ட!)
சென்னை - 26, சி. மகேஷ்.

✉ 'அன்புள்ள சிநேகிதியே' மெகா தொடரின் வசனங்களை சுஜாதா விஜயராகவனுடன் இ. ராமதாஸும் இணைந்து எழுதுவதைக் குறிப்பிடாதது ஏன்?
சென்னை - 93, எஸ். சையது முகமது.

✉ நெய்வேலி சந்தான கோபாலனின் இசை அனுபவங்கள் லயம் பிசகாத தாளமாய் ஸ்ருதியுடன் அழகாய்ப் பரிமளித்தது!
நெய்வேலி - 3, சாந்தி சுந்தர்.

✉ தன்னம்பிக்கை முனை' கவிதையில் 'நின்ற பின்னும் இருமுறை நேரங் காட்டுகிறது கடிகாரம்' என்ற கவிஞர் பால. மூர்த்தியின் வரிகளை மிகவும் ரசித்தேன்.
சென்னை - 14, அய்யாறு வாசுதேவன்.

✉ முழு முதற் கடவுளரின் பெயரைக் கொண்ட சில பிரமுகர்களின் பேட்டிக் கட்டுரையை விநாயகர் சதுர்த்தியில் வெளியிட்டிருப்பது வித்யாசமான பொருத்தம்!
அயன்புரம், த.சத்தியநாராயணன்.

✉ தமது தலைவிக்கு மூன்று ஆண்டு தீர்ப்பு வந்தவுடன் கல்லூரி மாணவிகளின் பேருந்துக்குத் தீ வைத்து பெருமைபட்ட அ.தி.மு.க.வினரைக் காட்டிலும் தமது தலைவர் போலீஸால், அடித்து இழுத்துச் செல்லப்பட்டதைக் கண்டித்து அமைதி வழியில் பேரணிக்கு அழைப்பு விடுத்தது தவறு இடையாது. ஆனால் அதையும் அரசியல் ஆக்க முற்பட்ட அ.தி.மு.க கண்டிக்கத்தக்கது.
மணப்பாறை, ஆனந்திராஜா.

✉ முருகமணியின் 'ரசவாதம்' அவரது அனுபவம் போல இருந்தாலும், அனேகமாக பலருக்கும் ஏற்படக் கூடியதுதான். நானும் 'கல்கி'க்கு, சளைக்காமல் எழுதிக் கொண்டிருக்கிறேனே!
ஆடுதுறை, கோ. ராமதாஸன்.

✉ நாகை முகுந்தன், குன்னக்குடி வைத்யநாதனைச் சந்தித்து, பேட்டிதான் கண்டிருக்கிறார். நீங்கள் குறிப்பிட்டது போல விவாதிக்கவில்லை.
சின்மயாநகர், என். ரஜினி.

✉ 'அதிர்ஷ்ட வீடு' அமைப்பதில் வாஸ்து சாஸ்திர முறைகளை மட்டும் கூறாமல் சீனாவின் பெங்சுயி விதிமுறைகளையும் அழகாக இணைத்திருக்கிறீர்கள்.
மொரட்டுப்பாளையம், விஜயஸ்ரீ இராஜேஸ்வரன்.

✉ மர்ம மகளிரணி முனைப்போடு செயல்படுவது குறிப்பிடத்தக்கது. இது போன்ற சமுதாயத்திற்குப் பயன்படும் மகளிரணி நாடு முழுதும் தோன்ற வேண்டும்.
மேலகிருஷ்ணன்புதூர், கே. பிரபாவதி.

ராசிக்கல் மோதிரம் வாங்க ராசியான கடை P.R. ஜுவல்லரி

P.R. JEWELLERY

GOLD, SILVER, DIAMOND & BIRTH STONES

102, USMAN ROAD, T. NAGAR, CHENNAI - 600 017. PH: 4344442, 4327764

TUESDAY HOLIDAY (10.00 AM to 1.30 — 3.30 PM to 8.00 PM)

P.R. ஜுவல்லரியில் ராசிக்கல் மோதிரம் வாங்கி அணிந்துபயன்பெறுங்கள். ஒவ்வொரு ராசிக்கும் மோதிரம் ரூ. 400/-

நட்சத்திரம்	ராசி	ராசிக்கேற்றகல்	கல்லின் எடை	வெள்ளி மோதிரம் விலை	இன்சூர் தபால் செலவு
அசுவினி, பரணி, கார்த்திகை முதல் பாதம் முடிய	மேஷம்	பவழம்	2 CARAT	400/-	50/-
கார்த்திகை 2-ம் பாதம், ரோகிணி, மிருகசீரிஷம் 2ம் பாதம் முடிய	ரிஷபம்	வைரம்	5 CENT	2250/-	200/-
மிருகசீரிசம் 3-ம் பாதம், திருவாதிரை, புனர்பூசம் 3-ம் பாதம் முடிய	மிதுனம்	மரகதபச்சை	20 CENT	400/-	50/-
புனர்பூசம் 4ம் பாதம், பூசம், ஆயில்யம் முடிய	கடகம்	முத்து	2 CARAT	400/-	50/-
மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய	சிம்மம்	மாணிக்கம்	20 CENT	400/-	50/-
உத்திரம் 2ம் பாதம் முதல், அஸ்தம், சித்திரை 2-ம் பாதம் முடிய	கன்னி	மரகத பச்சை	20 CENT	400/-	50/-
சித்திரை 3-ம் பாதம் முதல், சுவாதி, விசாகம் 3ம் பாதம் முடிய	துலாம்	வைரம்	5 CENT	2250/-	200/-
விசாகம் 4ம் பாதம் முதல், அனுஷம், கேட்டை முடிய	விருச்சிகம்	பவழம்	2 CARAT	400/-	50/-
மூலம், பூராடம், உத்திராடம் முதல் பாதம் முடிய	தனுசு	புஷ்பராகம்	1 CARAT	400/-	50/-
உத்திராடம் 2ம் பாதம், திருவோணம் அவிட்டம் 2-ம் பாதம் முடிய	மகரம்	நீலம்	20 CENT	400/-	50/-
அவிட்டம் 3-ம் பாதம் முதல், சதயம், பூரட்டாதி 3ம் பாதம் முடிய	கும்பம்	நீலம்	20 CENT	400/-	50/-
பூரட்டாதி 4ம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய	மீனம்	புஷ்பராகம்	1 CARAT	400/-	50/-
தனுசு, மீன ராசிக்காரர்கள் கனக புஷ்பராக மோதிரமும் அணியலாம்			50 CENT	1000/-	100/-
ராகு, கோமேதகம்			50 CENT	400/-	50/-
கேது, வைடூரியம்			20 CENT	400/-	50/-
அனைவரும் அணியக்கூடியது கார்னெட் வெள்ளி மோதிரம்			2 CARAT	400/-	50/-

*** நவரத்தினம் மோதிரம் அணிந்தால் மிகவும் நல்லது. *** WE ACCEPT MASTER CARD/VISA CARDS

அனைவரும் அணியக்கூடியது கார்னெட் மோதிரம் ரூ. 400/- கார்னெட் மோதிரம் அணிந்தால் செல்வ வளம் பெருகும். வியாபாரம், படிப்பு, ஞாபக சக்தி அதிகரிக்கும்.

குறிப்பு : புஷ்பராகம், வைரம், நவரத்தினம், ஆகிய மோதிரங்கள் வெள்ளியிலும், தங்கத்திலும் அணியலாம்.

மீதி அனைத்து ராசிக்கல் மோதிரங்கள் வெள்ளியில் அணிய வேண்டும். வெள்ளியில் அணிந்தால் பலன் அதிகம். மேற்படி ராசிக்கல் மோதிரம் நம்பிக்கையுடன் அணிந்து முயற்சி செய்தால், கல்வி, தொழில், வேலை வாய்ப்பு, வியாபாரம், அனைத்திலும் 100 சதவீத வெற்றி கிடைக்கும்.

* எங்களிடம் நியூமராலஜி படியும் கல் மோதிரங்கள் கிடைக்கும் * திருக்கணித பஞ்சாங்கப்படி கம்ப்யூட்டர் ஜாதகம் ரூ. 50/-

குறிப்பு: எங்கு ஜோதிடம் பார்த்தாலும் எங்களிடம் வந்து ரூ. 400/-க்கு ராசிக்கல் மோதிரம் வாங்கி பயன்பெறுங்கள். ஒரிஜினல் கல் என முழு உத்திரவாதம் தருகிறோம்.

முகவரி தெளிவாக எழுதவும். (எமது சிறப்புப் பேட்டியை விஜய் டிவியில் சனிக்கிழமைதோறும் காலை 8.00 மணிக்கு, ஜெயா டீவியில்வியாழக்கிழமை 5.30 மணிக்கு காணத் தவறாதீர்கள்.

ADVT



பூவாசம்

6

பாஸ்கர் சக்தி

சரவணனுக்குப் பாட்டியின் முகத்தில் தெரிந்த கடுமையும், கறார்த் தன்மையும் மிகவும் புதிதாக இருந்தது. பொதுவாகவே கிழவிகள், கிழவர்கள் இனிமையானவர்கள். தாய், தந்தையர் எனப்படுகிற நடுத்தர வயது. ஜீவன்களுக்கே உரிய வாழ்வு சார்ந்த பயமும் பதற்றமும் அற்றவர்களாய், ஒதுங்கியிருந்து வாழ்வை வேடிக்கை பார்க்கிற பக்குவப்பட்டவர்களாய் அவர்களிருந்தார்கள். சரவணனுக்குப் பெருமாயிப் பாட்டி ஒரு பொழுதுபோக்கு அம்சம். பெரும்பாலான நேரம் அவள் உல்லாசமாய் இருப்பாள். எப்போதாவதுதான் கோபப்படுவாள். அவளது கோபம் பெரும்பாலும் மருமகளின் அலட்சியத்தையோ, மகனின் பொறுப்பற்ற தனத்தையோ விமர்சிப்பதாகத்தான் அமையும். சரவணன் தனது அம்மா, அப்பா இருவரின் கோளாறுகள் பற்றியும் கிழவி குற்றஞ் சாட்டுகையில் அதை ஏக உற்சாகத்துடன் வரவேற்கிறவனாக இருந்தான். மற்ற விஷயங்களில் பாட்டியுடன் அவனுக்கு கருத்து மோதல்கள் அடிக்கடி நிகழும். குறிப்பாக தலைக்கு எண்ணெய் சேர்த்துக் குளிப்பது, இரவில் வெகு நேரம் விழித்திருந்து வெட்டிப் பேச்சுப் பேசுவது, 'ஏதோ படிச்சுப்புட்டோம்னு' சொல்லி சம்சாரி வேலை பற்றிய ஞானம் அறவே இல்லாதிருப்பது இதெல்லாம் பாட்டிக்கும் சரவணனுக்கும் உரசல் விளைவிக்கிற பிரதேசங்கள்.

''ஒரு செம்பு பால் பீச்சக்கூடப் பழகலையே, இந்தப் பய புள்ள'' என்று அங்கலாய்ப்பாள் கிழவி. ''காசைக் குடுத்தா கடையில காப்பி'' என்பான் சரவணன். உடனே கிழவி என்.எஸ். கிருஷ்ணன் பாட்டையெல்லாம் உதாரணம் காட்டி புலம்புவாள்.

இப்போது கிழவி காட்டிய கடுமையான பாவம் சரவணனுக்கு மிக உறுத்தலாய் இருந்தது. அதிலும் அம்மாவும், கிழவியும் இணைந்து விட்டனர். இது மற்றொரு ஆச்சர்யம். அரசியல் கட்சிகளுக்கும் இவர்களுக்கும் பெரிய வித்தியாசமில்லை என எண்ணிக் கொண்டான் சர

வணன். சில குறிப்பிட்ட பிரச்னைகளில் மருமகளுடன் இணைந்து செயல்படுவது, கருத்து வேற்றுமைகளைப்பேணுவது, தனித்தன்மையை இழக்காதிருப்பது, அம்மாவை எதிர்க்க வேண்டுகிற சமயத்தில் 'சட்'டென்று சரவணனைக் கூட்டுச் சேர்த்துக் கொள்வது என்று கிழவியின் அணுகு முறைகள் ஆச்சர்யம் தருபவை. ஆனால் அவள் ஒருபோதும் இவ்வளவு கடுமையாக சரவணனிடம் பேசியதில்லை. ஒரே பேரன், வம்சத்தின் ஆண் பிள்ளை என்று சலுகை களைக் கூட மறந்து அவனை முறைக்கிறாள்.

"எதுக்கு கெழவி... இவ்வளவு எரிச்சல் உனக்கு?"

"எல்லாம் காரணமாத்தான்டா... பேசாம நீயுண்டு உன் சோலியுண்டுன்னு இரு... அவ கேட்டா, இவ கேட்டான்னு அந்த ரூமைத் தொறக்குற சோலி வச்சுக்கிராத..." சரவணன் கடுப்பாக வெளியேறினான்.

சுந்தரும், மணியும் ஒருவித தியான நிலையில் இருந்தனர். மைதானத்தின் இடப்புறமிருந்த மரத்தடிதான் அவர்களது தியான மேடையாயிருந்தது. கண்கள் பூவரச வீட்டின் பின்புறத்தையும் ஜன்னலையும் குறித்து மையங்கொண்டிருந்தன. எப்போ தாவது இமைத்தார்கள். ஒருவரையொருவர் பார்த்துக் கொள்ளாது, தலையைத் திருப்பாது அவர்கள் அவ்வப்போது பேசிக் கொண்டனர்.

''ரொம்ப நேரமாச்சு.... ஒண்ணும் காணமேடா!"

"தூங்கிட்டாளுகளோ?"

''ம், இருக்கும்... வேலையத்தவளுக... இன்னேரம் என்ன தூக்கம் வேண்டிக் கிடக்கு."

"ம்... வெளியில வந்து துணி, கினி காயப்போட்டா என்ன கொறைஞ்சா போயிடும்."

இருவரது பார்வையும் மீன்பிடிக்கிறவர் கள் போல் ஒரே புள்ளியில் நிலை பெற்றிருந்தது. இலேசாகக் கண் எரிந்து



''மாமூல் கொடுக்க லேட்டாகுது என்பதற்காக நான் திருடும் வீட்டுக்கே, பாதி திருடும்போதே வருவது நன்றாக இல்லை.''

- வா.றா. செல்லப்பா

அவ்வப்போது பூச்சிகள் மிதந்தன.

'ச்சேய்'' என்று தலையை உதறினான் சுந்தர்.

"வேலையத்த வேலை" என்று சலித்துக் கொண்டான்.

மணி, "யேய், பொறுடா... அவங்களுக்கு ஒரு வேளை வீட்டுக்குள்ள முக்கியமான ஜோலி இருக்கலாம்... வெளிய வராமயா போயிருவாங்க. பொறுமை இல்லாம கௌம்பிப் போயிட்டா நமக்குத்தான்ரா நஷ்டம்."

அவர்களுக்குப் பழக்கமான சைக்கிள் மணி அப்போது ஒலித்தது. வீரையனுடைய சைக்கிள் மணி அது. வழக்கமான 'கிணி கிணி' என்று ஒலிக்கும் சைக்கிள் மணி அல்ல அது. 'க்ரிஸ் க்ரிஸ்' என ஒலிக்கும் ஸ்பிரிங் வைத்த சைக்கிள் மணியை வீரையன் தனது சைக்கிளில் மாட்டியிருந்தான். அதைப் பற்றியும் கூட இவர்களிடத்தில் ஒரு கதை சொன்னான்.

பம்பாயில் வீரையனுக்கு பலப்பல பெண் சிநேகிதங்களுண்டாம். இவன் குடியிருந்த வீட்டு ஓனரின் மனைவி கேரளத்துப் பெண். அவளுக்கும் அவளது கணவனுக்கும் நிறைய வயசு வித்தியாசம். தனது தாய்மாமனையே கட்டியிருந்தாள் அந்தக் கேரளாக்காரி. அவள் அழகுன்னா அழகு அப்படியொரு அழகு. தலைக்கு ஊற்றிக்கொண்டு, நுனி



முடிச்சுப் போட்டு, நெத்தியில சந்தனக் கீத்து வச்சு நடந்து போனா அப்படியே நடிகை ஷீலா மாதிரி இருப்பாளாம். அவ புருஷன் பன்னிரண்டு கிலோமீட்டர் தாண்டி கடை வச்சிருந்தான். தினமும் சைக்கிள்ல தான் போய் வருவான்.

குடிபோன கொஞ்ச நாள்லயே வீரையன் கிட்ட அவ கவுந்திட்டா. பழக்கமுன்னா பழக்கம். ஒருநா வீரையனைப் பாக்கலேன்னா கஞ்சி வெள்ளங்கூட குடிக்க மாட்டாளாம். சாயா குடிக்க மாட்டாளாம்.

வீரையனும் சைக்கிள்லதான் வேலைக்குப் போய் வந்தான். அப்பதான் அவ சொன்னா, அவ புருசன் சைக்கிள்ல இருக்கறது சாதா மணி. வீரயன் சைக்கிள்ல 'ட்ரிங் ட்ரிங்'னு அடிக்கிற ஸ்பிரிங் மணியை மாட்டச் சொன்னா. பல விதத்துல அது உபயோகப்பட்டுச்சாம். புருசன் வந்தா மணிச் சத்தம் காட்டிக் குடுத்துடுமாம். தவிர வீரையன் பல சிக்னல்களை அவனோட 'ட்ரிங் ட்ரிங்' மணியில வச்சிருந்தானாம். ரெண்டு பேரோட உறவும் இந்த மணியோசை உதவியோடதான் வளந்ததாம். ''அவ நினைவாத்தான் இந்த ஸ்பிரிங் பெல்லை நான் மாட்டினேன்'' என்றான் வீரையன்.

இந்தக் கதையை ஒரு கிளர்ச்சியூட்டும் கூதல் ராத்திரியில் வீரையன் சொன்னான். பையன்கள் இரத்தம் சூடேறக் கேட்டு ஏக்கப் பெருமூச்சு விட்டனர்.

''அந்தப் பொம்பளை பேரு என்னண்ணே."

"ஓமனா" என்று ஏக்கப் பெருமூச்சுடன் சொன்னான் வீரையன்... "இப்ப எப்படி இருக்காளோ... அவ புருசன் ஒரு வேஸ்ட் பார்ட்டி... கையில கொஞ்சம் காசு சேந்ததும் ஒரு எட்டு பாம்பே போய்ட்டு வரணும். ஓமனாவுக்காக... அப்பப்ப கனவுல வர்றா" என்றான். அந்த இரவு பயல்களுக்குத் தூக்கம் மற்றுக் கழிந்தது. இதுபோல பல கதைகள். பல இரவுகள். வீரையன் புண்ணியத்தில்...

ஒரு மூன்று மாதத்துக்குப் பின் டவுனில் ஒரு சூப்பர் போஸ்டரைப் பார்த்துவிட்டு சூடாகி, திருட்டுத் தனமாக பயல்கள் செகண்ட் ஷோ போனால் வீரையன் சொன்ன ஓமனாவின் கதை அங்கே சினிமாவாக ஓடியது. வீரையன் கேரக்டரில் கட்டுமஸ்தான ஒரு வாலிபன் நடித்திருந்தான். படத்தில் அவன் ரயிலில் அடிபட்டு செத்துப்போகிறான். அதையறிந்த ஓமனா தூக்கில் தொங்கி விடுகிறாள்.

நால்வரும் தமக்குள் பொருமிக் கொண்டார்கள். "இந்தாளு நம்மளைக் கேனப் பயலாவே நினைக்கிறாண்டா" என்று திட்டினாலும் வீரையனிடம் தாங்கள் பார்த்த சினிமா பற்றி மூச்சு விடவில்லை. இவர்களது கடுப்பைக் கூட்டுவது மாதிரி டவுனில் டீக்கடை வைத்திருக்கும் ஒரு ஆள் கேரளாவில் தாய்மாமனைக் கட்டுகிற பழக்கம் இல்லை என்று சத்தியம் பண்ணிச் சொன்னார்.

வீரையனிடம் இதுபற்றி ஏதாவது சொன்னால் அதற்குத் தோதாக வேறொரு கதை விடுவான். எதற்கு இன்னொரு முறை முட்டாளாக வேண்டும் என்று இவர்களாகவே பேசிக் கொண்டு கமுக்கமாக இருந்து விட்டனர்.

சுந்தர்தான் நொந்து போய் கமெண்ட் அடித்தான். "ம் படத்துல அவன் ரயில்ல அடிபட்டு செத்துட்டான். இவன் வந்து நம்மளை கதை கதையாச் சொல்லி சாகடிக்கிறான்."

"க்ரிங் க்ரிங் க்ரிங் க்ரிங்."

ஒரு பெரிய சங்கீத ஆலாபனை மாதிரி மணியடித்துக் கொண்ட வந்து 'க்ச்சக்' என்று பிரேக் அடித்து நிறுத்தினான் வீரையன்.

"என்னாடா சுந்தரு? சீன் பாக்கவா... ஏதாச்சும் பாத்தீங்களா?"

சுந்தர் அலுப்புடன், "எங்கண்ணே! பொர்த்திப் படுத்துத் தூங்கறாளுக போல்ருக்கு... அரவத்தையே காணாம்."

வீரையன் கண் சிமிட்டினான், "இப்ப என்னா அதுகளை சைட் அடிக்கணும் அம்புட்டுத்தான். எங்கூட வர்றீங்களா?"

"எங்க?"

பூவரச வீட்டை நோக்கி வீரையனின் விரல் நீண்டது.... 'அங்கதாண்டா... அங்கதான். அதுக்கு நான் என்ன பேரு வச்சிருக்கேன் தெரியுமா? கன்னிமாடம்... வர்றீங்களா? கிட்டக்க பார்த்துட்டு வரலாம். முடிஞ்சா ரெண்டொரு வார்த்தை பேசி பழக்க வழக்கத்தை ஆரம்பிச்சுக்கங்க சாமர்த்தியமிருந்தா."

சுந்தருக்கும் மணிக்கும் ரத்த நாளங்கள் விரிவடைந்து உஷ்ணம் உடலெங்கும் குதூகலமாகப் பரவியது. ஆனாலும் அடிமனத்தின் ஓரத்தில் சின்னதாக 'சொல்வது வீரையன்' எனும் எச்சரிக்கை மணி 'க்ரிங் க்ரிங்' என ஒலித்தது.

கதவை அடைந்த மணி, "வீட்டுக்குப் போனா யாரு? எங்க வந்தீங்கன்னு அவங்க



கேப்பாங்கல்ல?" என்றான்.

"ஆமா! அந்த வீட்டை மராமத்துப் பண்ணது நாந்தானடா... எங்கூட வாங்க சொல்றேன்."

வீரையன் சைக்கிளை உருட்டியவாறு விடுவிடுவென்று அந்த வீட்டை நோக்கி நடக்கத் துவங்கினான்.

வீடு பூட்டியிருந்தது. இப்படியே திரும்பிப் போய் விடலாம் என்று மணியும், சுந்தரும் நினைத்தார்கள். அவர்களது எண்ண ஓட்டத்தை சட்டை செய்யாத வீரையன் மணியிடம், 'கதவைத் தட்டுறா தம்பி" என்றான்.

மணி கதவினை அடைத்தவன் மா பெரும் தயக்கத்துடன் தலையை அசைத்து விட்டுத் திரும்பி வந்து விட்டான்.

"என்னடா?"

"சங்கடமாயிருக்குண்ணே... போயிடலாம்."

"போடா பொசை கெட்டவனே."

சைக்கிளை ஸ்டாண்டு போட்டு நிறுத்தி விட்டு வீரையன் சாதாரணமாகப் போய் 'பட் பட்' என்று கதவைத் தட்டினான். 'பட், பட்' என்று மணிக்கும், சுந்தருக்கும் இதயம் அடித்தது.

'பட், பட், தட், தட்' என்று கதவும், இதயமும் அதிர, இதயக் கதவுதான் தட்டப்படுகிறது என்று சுந்தர் எச்சில் விழுங்

"யோவ். நீ பிஸினஸ் ஆரம்பிக்கறதுக்கு எதுக்குய்யா எங்கிட்ட வந்து கடன் கேட்கறே?"

"நீங்க 'முதலுதவி' செய்வீங்கன்னு சொன்னாங்களே.."

- டி.என். சத்யா முருகவேல்

கியபடியே நிற்க அந்தக் கதவு மெல்லத் திறந்தது.

அவள் காதல் தேவதையின் கையாள் மாதிரி தெரிந்தாள். கண்களிலொரு கிறக்கும் பார்வை. கிருஷ்ணவேணி.

“என்ன வேணும்?”

வீரையன் பல தேவதைகளைப் பார்த்தவன் போல் வெகு இயல்பாகப் பேசினான்.

“அட... நாந்தான் இந்த வீடு மராமத்துப் பண்ணேன்... அம்மா எங்க?”

“உள்ள இருக்காங்க.”

“எல்லாம் வசதியா இருக்கா?” என்று அவன் கிருஷ்ணவேணியை சைடு வாங்கிக் கொண்டு உள்ளே நுழைய.... ஏதேனும் சிறிய அளவிலாலான உராய்வு ஏற்படுகிறதா? என்று மணியும் சுந்தரும் பதற்றத்துடன் கவனித்தனர். நல்ல வேளையாக ஏதும் நிகழவில்லை.

வீரையன் வீட்டுக்குள் போய்விட, தானும் உள்ளே போக எத்தனித்தாள் கிருஷ்ணவேணி. ஆனால் வாசலில் இரண்டு பையன்கள். அவள் நிலையில் நின்றபடியே இருவரையும் பார்த்தாள்.

மணி சுந்தரின் கைகளைப் பற்றிக் கொண்டான். சுந்தரின் பார்வையோ குழப்பமாக வேணியைச் சுற்றிலும் அலைந்தது. உள்ளிருந்து அவளுடைய அம்மாவின் குரல் கேட்டது.

“இங்க வா கிருஷ்ணவேணி.”

அவள் ஒருமுறை இந்த இருவரையும் பார்வையால் ஒரு தடவல் தடவிவிட்டு உள்ளே திரும்பினாள். அவளது தாவணித் தலைப்பு அவள் திரும்பியபோது ஒரு அலை மாதிரி எழும்பி இவர்களிருவரையும் ஒரு ஆட்டு ஆட்டிவிட்டு இயல்பு நிலைக்குத் திரும்ப வேணி உள்ளே போய் விட்டாள்.

உள்ளிருந்து குரல் கேட்டது. வீரையன்.


“ஏலேய், மணி, சுந்தரு... உள்ள வாங்கடா நம்ம வீடுதான்.”

“கற்பனைசக்தி அதிகமா இருக்குறதால இந்த பத்திரிக்கையில என் கதை...

“பிரசுரமாகியிருக்கா?”

“ஊஹூம்! பிரசுரமாகியிருக்குறதா கற்பனை பண்ணிக்கச் சொல்லி ஆசிரியர்ட்ட இருந்து லெட்டர் வந்திருக்கு!”

- ஜி.வி. பிரியா



இவர்களிருவரும் உள்ளே நுழைந்தனர்.

உள்ளே மிக இயல்பாக வீரையன் நாற்காலியில் அமர்ந்திருந்தான். வேணிகளின் அம்மா அவனுடன் பேசிக் கொண்டு இருந்தாள்.

“நாலு, அஞ்சு நாளு நிமிர்ந்து போச்சுங்க வேலை. வீடு எப்படி இருந்துச்சுன்னு நினைக்கிறீங்க! எல்லாத்தையும் துப்புரவு பண்ணி, ஒடைஞ்சு கெடந்த தளத்தையெல்லாம் செப்பனிட்டு, பூசி... ரொம்ப இழுவையான வேலைங்க... ஏண்டா, இந்த வேலையை ஒத்துக்கிட்டோம்னு தோணிப் போச்சு... இப்ப எல்லாம் சௌகரியமா இருக்குங்களா?”

“இருக்கு தம்பி... பரவாயில்லை... இதைவிட வசதி கம்மியான இடத்தில எல்லாம் இருந்திருக்கோம். எல்லாம் பழகிப்போச்சு...” சிரித்தாள் அந்த அம்மா.

“காப்பி குடிக்கிறீங்களா? வேணி காப்பி போடும்மா...”

“அய்ய வேணாங்க...”

“பரவால்லை இருக்கட்டும்... இந்த தம்பிங்க எல்லாம் யாரு?”

வீரையன் யோசிக்காமல் ‘பட்’டென்று பதில் சொன்னான்.

“நம்ம அசிஸ்டெண்டுகதான். நமக்கு ஒத்தாசையா கூடவே இருப்பாங்க.”

உள்ளிருந்து வந்த வேணி இதைக் கேட்டு தனது பார்வையை மணி, சுந்தர் மீது படர விட்டாள்.

இருவருக்கும் ரத்தம் கொதித்தது.... ‘அடப் பாவி... இவனை... இவனை... என்ன செய்யலாம்.’

மேலும் கோபமூட்டுவது போல் வீரையன் சொன்னான். “சுந்தரு, வெளில சைக்கிள் நிக்கிதுல்ல, அதை மர நிழல்ல நிப்பாட்டிட்டு வந்திடுறியா?”


சுந்தர் கோபமாகத் திகைத்து மணியைப் பார்த்தான்.

வாசலில் அப்போது நிழலாடியது.

“யாரு? உள்ளே வாங்க” என்றாள் லீலா.

சரவணன் தயங்கியபடியே உள்ளே நுழைந்தான். இவர்கள் மூவரையும் இங்கே எதிர்பார்த்திராத அவனது முகத்தில் ஒரு எரிச்சல் பரவியது. சரவணன், மணி, சுந்தர் இவர்கள் மூவரது மனக் கொந்தளிப்பையும் கவனியாது கிருஷ்ணவேணியையே அரைக் கண்ணால் பார்த்தபடி அமர்ந்திருந்தான் வீரையன்.

(தொடரும்)



சிக்கலே' சமாளி!

அந்தப் பெரிய கூட்டத்தில் கராத்தே, குங்ஃபு போன்ற போர்க்கலைகளைப் பயின்றவர்கள் தங்கள் வித்தகத்தைக் காட்டிக் கொண்டிருந்தார்கள். அப்போது ஒரு துறவி அங்கு வந்தார். அவர் கையில் மிகக் கூர்மையான வாள் ஒன்று இருந்தது. வாட் சண்டையில் தன் திறமையைக் காட்டப் போகிறார் என்று மக்கள் ஆவலுடன் எதிர் பார்த்தார்கள். அந்த வாளைக் கீழே வைத்தவர், பிறகு அங்கு கூடியிருந்தவர்களிடம் சவால் விட்டார்.

"இந்த வாளினால் என்னை வெட்டுங்கள் பார்க்கலாம்." பார்த்தவர்கள் அதிர்ந்தார்கள். "சரி, வெட்ட வேண்டாம். என்னை, இந்த வாளினால் தொடுங்கள் போதும். அப்படிச் செய்தால், வைரங்கள் பதித்த விலை மதிப்புள்ள இந்த வாளை எடுத்துக் கொள்ளலாம்."

ஒரு வீரன் எழுந்து வந்து வாளை எடுத்தான். எசகுபிசகாக வாள் அந்தத் துறவியின் மீது பட்டால் காயம் பட்டுவிடுமோ என்று பயந்தபடியே மெதுவாக அவரை வாளினால் தொடப் போனான். அவனை அமைதியாகப் பார்த்துக் கொண்டிருந்த துறவி லாகவமாக விலகிக் கொண்டார். சற்றே எரிச்சலடைந்த வீரன் துறவியை நோக்கி வேகமாக வாளை வீசினான். இப்போதும் துறவி சாமர்த்தியமாக விலகித் தப்பித்துக் கொண்டார். வீரன் வாளை வீசுவதும், துறவி விலகித் தப்பிப்பதுமாக சில நிமிடங்கள் கழிந்தன.

அந்த வீரனுக்கு ஆத்திரம் அதிகமானது. துறவிக்குக் காயம் படட்டுமே என்ற எண்ணத்தில் வாளைச் சுழற்றினான். ஆனால் துறவி நின்ற இடத்தில் இருந்தபடியே தன் உடம்பை லாகவமாகச் சுழற்றித் தப்பினார். 'கண் முன்னால் வாளுக்கு எட்டும் தூரத்தில் இருப்பவரை ஒன்றும் செய்ய முடியவில்லையே' என்ற எண்ணம் வீரனுக்கு மேலும் கோபத்தையும் ஆத்திரத்தையும் கொடுத்தது.

'இந்தத் துறவி செத்தால்தான் என்ன?' என்ற எண்ணத்துடன் கோபாவேசமாக வாளைச் சுழற்றினான். முடியவில்லை. கடைசியில் உடல் களைத்து, மனம் சலித்து துவண்டு போய் உட்கார்ந்துவிட்டான்.

துறவி பேசினார் : "நான் 'கெண்டோ' முறையில் வாட்பயிற்சி பெற்றவன். எங்கள் பயிற்சி, மற்ற பயிற்சிகளிலிருந்து வேறுபட்டது. எதிராளி எப்படி எல்லாம் தாக்குவான் என்று எதிர்பார்த்து நாங்கள் தாக்குவது கிடையாது. அல்லது நாம் இப்படியெல்லாம் எதிரியைத் தாக்க வேண்டும் என்று திட்டமிடுவதும் கிடையாது. மனத்தைச் சமச்சீராக வைத்துக் கொண்டு எதிரியின் எந்தத் தாக்குதலுக்கும் தயாராக இருப்போம். எதிரி தன் தாக்குதலைத் தொடங்கிய பிறகுதான் அதனைத் தடுக்கும் வழியைச் சிந்தித்துச் செயல்படுவோம். இதில் மிக முக்கியமானது மனம் எப்போதும் சலனப்படாமல் ஒரு நிலையில் - ஏறக்குறைய மோன நிலையில் - மிக அமைதியாக இருக்க வேண்டும். அது மட்டுமில்லை, நாங்கள் குறிப்பிட்ட தாக்குதலைத்தான் எதிர்க்கிறோம்; எதிரியை அல்ல. இன்னொரு முக்கியமான செய்தி. எதிரி தாக்கத் தொடங்கிய முதல் சில நிமிடங்களில்தான் ஆபத்து அதிகம். அதன் பின் தன் தாக்குதல் பலிக்கவில்லையே என்ற ஆத்திரம் எதிரிக்கு வந்துவிடும். ஆத்திரமும் ஆவேசமும் அதிகமாகிவிட்டால் எதிரி பலமிழந்து விடுவான். அதன் பின் நம்மைத் தற்காத்துக் கொள்வது மிகவும் சுலபம்." என்றார் அந்தத் துறவி.

சிக்கல் - 65

வரலொட்டி ரெங்கசாமி

மும்பை மசாலா

கணபதி விழாவில், இம்முறை, பிள்ளையாரை நடுவராக வைத்துக்கொண்டு, வாஜ்பேயியும் முஷாரஃபும் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். ஆக்ரா ஸம்மிட்டில் நடந்தது போல், ஒத்துவரவில்லை என்றால் 'புசுக்' கென்று எழுந்து போய் விட முடியாமல், கஜபதியார் பத்து நாட்களுக்கும் பொறுமையாக வீற்றிருந்தார். அத்துடன் காட்டுக் கத்த லான பாட்டுகள், ஆட்ட பாட்டம், தன் பெயரில் அந்தப் பூஜை, இந்தப் பூஜை என்று ஓராயிரத்திலிருந்து ஒரு லட்சம் வரை வசூல் செய்வது, எல்லாவற்றையும் சகித்துக் கொண்டிருந்தாரா? அந்தப் பொறுமைக்கு திருஷ்டி கழிக்க வேண்டுமென் றால் சாதாரணர்கள் போதாது என்று, மாதுரி தீட்சித், ரூபி பாட்டியா போன்ற பெரிய, சின்னத்திரை நட்சத்திரங்களை எல்லாம் விட்டு ஆரத்தி எடுத்தார்கள் ஆங்காங்கே!

கணபதி விழாக்களில் பெருங்கூட்டமென்றால், சிவனார் விழாக்களிலும் கூட்டமாகத்தானிருந்தது. ஆம்! கணபதி விழா சமயத்தில், மும்பைக்கு வருகை தந்திருந்த சுகி சிவனாரைத் தான் சொல்கிறோம்; செம்பூர், முலுண்டு, ஷண்முகானந்தா ஃபைன் ஆர்ட்ஸுகளும், வாஷி, பம்பாய் தமிழ்ச் சங்கங்களும் அவரது சொற்பொழிவையும், முலுண்டு ஃபைன் ஆர்ட்ஸ் கூடுதலாக அவர் தலைமையில் 'தொலைக்காட்சித் தொடர்கள் தொல்லையா? இல்லையா?' என்ற விவாத மேடையையும் ஏற்பாடு செய்து வெகு நாட் களுக்குப் பிறகு, தங்கள் அரங்கை நிரப் பிக் கொண்டன. 'சொல்லின் செல் வர்', 'சொல்லின் வேந்தர்' இத்யாதி டைட்டில்களுடன், 'ஹவுஸ் ஃபுல் நாயகர்' என்ற பட் டத்தையும் சேர்த் துக் கொடுத்தா லென்ன, என்று நினைக்குமளவுக்கு கூட்டம். அழகான, தெளிவான, நயமான சொற்களால், மனிதர் எல்லோரையும் கட்டிப் போட்டு, இங்கே தனி யாக ஒரு 'ஃபான் கிளப்'பையே உருவாக்கி விட்டார் போங்கள்!



• ஆரத்தி எடுக்கிறார் மாதுரி

விசிறிகள் எக்கச் சக்கமாக இருந்தாலும், சில சமயம் தொல்லையாகத் தான் போய் விடுகிறது; பாருங்களேன்– அமிதாப்புக் கென்று பெரிய 'ஃபான் அஸோஸியேஷன்' கோல் கத்தாவில் இருந்து கொண்டு, அவருக்குக் கோயிலெல்லாம் கட்டுவதாக அமர்க்களப்பட்டதா? அந்த விசிறிகள் சங்கத்து காரியதரிசி 'காமத்'தை போலீசார் கைது செய்திருக்கிறார்கள். இரத்ததானம், கண் தானம், அன்னதானம் என்று அமிதாப் பெயரால், இலவசமாக எதை எதையோ செய்து கொண்டி ருந்தவர், முத்தாய்ப்பாக, 'சைலேன் தாஸ்' என்ற டம்டம் முனிசிபல் சேர்மனை கொலை

செய்து வைத்திருக்கிறார். ஃப்ரீயாக இல்லை! ஒரு லட்சத்தை வாங்கிக் கொண்டு! (சீச்சீ அமிதாப்பிடமிருந்தில்லீங்க... முன்னாள் முனிசிபல் சேர்மனிடமிருந்து தான்...) இருந்தாலும் அமிதாப்புக்கு வருத்தமாகத்தானே இருக்கும்?

இந்த ஹீரோக்களை இப்படி ஹீரோ வர்ஷிப் செய்கிறேன் பேர்வழி என்று தனி மனிதர்கள் அடிக்கும் கூத்தே தாளவில்லை! ஒரு சேனையே திரண்டு விட்டால்? தானா வட்டாரத்தில், சிவசேனைத் தலைவர் ஆனந்த் திகேவை அரசு பஸ் மோத, ஆக்ஸிடெண்ட்டாகி, தாணாவிலுள்ள சிங்காளியா மருத்துவமனையில் சேர்த்திருந்தார்களா? முதலில் அவர் பிழைத்துவிட்டார் என்ற தகவல் வந்தது. அப்புறம் திடீரென்று 'ஹார்ட் அட்டாக்'கில் மனிதர் போய்விட்டார் என்ற செய்தி வந்ததும், ஆஸ்பத்திரியில் உள்ளவர்கள் மட்டுமல்லாது சுற்றுச் சூழலிலிருக்கும் அத்தனை பேருக்கும் 'ஹார்ட் அட்டாக்' வந்தே தீர வேண்டும் என முடிவு கட்டி விட்டனர் அவரது தொண்டர்கள். ஆஸ்பத்திரியில் உள்ளதை எல்லாம் அடித்து, உதைத்து, கொளுத்த யத்தனித்து, ரோட்டிலிருந்த பஸ்கள் கார்களை நொறுக்கி, கடையடைத்து, கேபிளை துண்டித்து, இருட்டடிப்பு செய்து, மறுநாள் காலை பால் கூடக் கிடைக்காமல் எல்லோரையும் திண்டாட விட்டனர். தாணா முழுவதும் பகுதி ரகளைகளின் எதிரொலி, மும்பை சி.எஸ்.டி வரை கேட்க வைத்தன. ஓடியும் ஓடாமலும் கான்சலான ரயில்கள். இத்தனையும் நடக்க விட்டு வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த தாணா போலீசை பழிக்காதவர் இல்லை. ஒரு ஆனந்த் திகேவுக்கென ஊரே ஸ்தம்பிக்க வேண்டுமா என்று முணுமுணுக்காதவரில்லை! இத்தனைக்கும்... சிவசேனை சாம்ராஜ்யத்தில் இவர் ஒரு குட்டி தேவதைதான்! இதற்கே இப்படி என்றால்... வேண்டாம்.... எல்லா சிவசேனைத் தலைவர்களும் நீடூழி வாழட்டும்! மும்பை பிழைக்க வேண்டாமா?


அமிதாப்

அமிதாப் அபசகுனமா?

பிழைப்பு நன்றாக நடக்க வேண்டுமென்று, ஜோசியர்கள் ஆட்டி வைக்கும்படி யெல்லாம் ஆடும் ஹீரோக்களுக்கு, மும்பையில் பஞ்சமில்லைதான்.

அசோக்குமாரின் அதிர்ஷ்டம் அவரது பழைய மாடல் ரோல்ஸ் ராய்ஸ் காரில்தான் என்று சொல்லி விட்டார் ஒரு ஜோசியர்; போயிற்று... அதை விற்கவும், முடியாமல், ஓட்டவும் முடியாமல் சும்மா பெயிண்ட்டடித்து வைத்திருக்கிறார் தாதாமுனி. இவர் தம்பி கிஷோர்குமார் ஏற்கனவே கிறுக்குத்தனமிக்கவர். அதில் வேறு, இவரது வீட்டுத் தோட்டத்திலுள்ள மூன்று மரங்களை, இவரது மூதாதையர் என்று ஜோசியர் அடையாளம் காட்டிவிட்டார். அவ்வளவுதான்... தினமும் அவற்றை வலம் வந்து, தொழுது, புலம்பி அரற்றுவாராம்! இசையமைப்பாளர் பப்பி லஹிரி தலையிலிருந்து கால்வரை நகைகள் போட்டுக்கொண்டிருப்பார். காரணம்? மனைவி அணிய வேண்டியதை எல்லாம் இவர் அணிந்தால்தான் அதிர்ஷ்டம் என்று சொல்லி விட்டாராம் ஜோசியர்! ஒரு படத்துக்குப் பூஜை போடும் போது, அமிதாப், அனில்கபூர், திலீப் குமார், சுனில்தத் ஆகியோர் இருப்பது அபசகுனமாம். தர்மேந்திரா, பால்தாக்கரே, சுனில் ஷெட்டி இருப்பது சுப சகுனமாம்! இது பாலிவுட் ஜோசியம்!

— ஜெயஸ்ரீ ராஜ்

"இங்கே பாரு சரண்யா. நீ இவ்வளவு வற்புறுத்தினதாலதான் நான் இந்த கல்யாணத்துக்கு வரேன். தாலி கட்டி முடிச்சதும் சாப்பிட்டோமா கிளம்பினோமான்னு வந்துடணும். சரியா?" என்று கேட்டான் அரிகிருஷ்ணன்.

"சரிங்க. அதுதான் வீட்டிலேயே பல தடவை சொல்லிட்டீங்களே. இப்படி ரயிலிலும் சொல்லணுமா?" என்று அடிக்குரலில் கேட்டாள் சரண்யா.

"உனக்கு ஞாபகப்படுத்ததான் சொல்றேன். அப்புறம் அங்கே போனதும் மறந்துட்டு அவங்களோட சேர்ந்து கதை பேசிட்டு இருந்தியா, நான் வந்துட்டே இருப்பேன். அப்புறம் நீ தனியா தான் ஊருக்கு வரணும்" என்றான்.

"அடடா, இந்தப் பேச்சை விட்டுட்டு வேற எதாவது பேசுங்களேன்" என்றாள் சரண்யா.

அரிகிருஷ்ணன் மௌனமாகி ஜன்னல் வழியே வெளியே பார்க்க ஆரம்பித்தான். அவர்களின் ஆறு வயது மகனும் ஆவலோடு வெளியே பார்த்துக் கொண்டிருந்தான்.

அரிகிருஷ்ணனின் பார்வை வெளியே இருந்தாலும் மனம் அந்தக் காட்சிகளில் லயிக்கவில்லை. பழைய சம்பவத்தை நினைத்து உள்ளுக்குள் குமுறிக் கொண்டிருந்தான்.



அவனுக்குத் திருமணமாகி எட்டு வருடங்கள் ஆகின்றன. சொந்தமாக ரெடிமேட் துணிக்கடை வைத்திருக்கிறான். வியாபாரத்தில் ஆரம்பித்த சின்ன பிரச்சனைதான் பெரிய சண்டையாகிவிட்டது.

சரண்யாவின் தாய் மாமன் பிரகாசம், இவன் துணிக்கடையில் நூறு இருநூறு ஆடைகளை மொத்தமாக வாங்கிச் செல்வார். அதை அக்கம்பக்கம் தவணை முறையில் விற்பார். பக்க வருமானமாக இதைப் செய்து கொண்டிருந்தார். சில சமயம் கடன் சொல்லி வாங்கிச் சென்றுவிட்டு பிறகு பணம் கொடுப்பார்.

இப்படித்தான் ஒருமுறை ஐந்தாயிரம் ரூபாய்க்குத் துணிகளை கடனாக வாங்கிச் சென்றார். ஒரு மாதம் கழித்து வந்து

ஆரணி யுவராஜ்

பணம் கொடுத்தார். அப்போது அரிகிருஷ்ணன் ஊருக்குச் சென்றிருந்தான். பிரகாசம் அவனது அப்பாவிடம் பணம் கொடுத்தார். வாங்கிக் கொண்டவர் பேச்சு சுவாரஸ்யத்தில் அதை கணக்கில் எழுதவில்லை. சில நாட்களில் உடல் நலக் குறைவால் இறந்துவிட்டார்.

சில மாதங்கள் கழிந்தன. பிரகாசம் வழக்கம்போல் துணிகளை வாங்கிச் சென்று கொண்டிருந்தார். அவரது கணக்கு பார்த்த அரிகிருஷ்ணன் ஐந்தாயிரம் பாக்கியை கவனித்தான்.

“மாமா, ஒரு அஞ்சாயிரம் பாக்கி அப்படியே நிற்கிறதே” எனறான்.

''அஞ்சாயிரமா, எப்போதைய பில்?'' என்று கேட்டார் பிரகாசம்.

“போன வருஷம் ஜுலை மாசம் ஆறாம் தேதி பில்.”

“அதைதான் ரெண்டு மாசம் கழிச்சு, உன் அப்பாகிட்டே கொடுத்துட்டேனே” என்றார்.

“கணக்குலே எழுதலையே.”

“மறந்திருப்பார்.”

“அப்பா, உடனுக்குடன் எழுதிடுவார். அப்படியே அப்போ எழுதலைன்னாலும் அடுத்த நாளாவது எழுதிடுவார்.'' என்றான் அரிகிருஷ்ணன்.

“அப்போ நான் பொய் சொல்றேன்னு சொல்றியா?” என்று கேட்டார் பிரகாசம்.

''அப்படியில்லை. நீங்க கொடுக்க மறந்திருக்கலாமில்லையா?”

“நான் வர வேண்டியதை வேணும்னா மறப்பேனே தவிர தர வேண்டியதை மறக்க மாட்டேன்.”

''நாங்களும் அப்படித்தான் மாமா. கொடுக்கறதை மறப்போமே தவிர வாங்கறதை மறக்கவே மாட்டோம்.'' என்றான் அரிகிருஷ்ணன்.

இப்படித்தான் ஆரம்பித்தது. பிரகாசம், கொடுத்துவிட்டேன் என்று சாதித்தான். அரிகிருஷ்ணன், இருக்க முடியாது என்றான். நாணயமில்லாதவர் செத்தவரைப் பயன்படுத்தி ஏமாற்றுகிறார் என்று அரிகிருஷ்ணன்

பயணங்களில்...



பிரகாசத்தைச் சாடினான்.

அவருக்குக் கோபம் வந்துவிட்டது.

“அப்படியொரு பிழைப்பு நடத்தறவன் நானில்லே. வேணும்னா இன்னொரு முறை தந்துடறேன்.” என்று கூறி கொடுத்தார்.

“தேவையில்லை. சாமி உண்டியலில் போட்டதா நினைச்சுக்கறேன்.'' என்று அரிகிருஷ்ணன் வாங்க மறுத்துவிட்டான்.

பிறகு அவர்களுக்கிடையே பேச்சுவார்த்தையே நின்றுவிட்டது. இப்போது பிரகாசத்தின் மகளின் திருமணம். “ஏதோ கெட்ட நேரம். நடக்கக் கூடாதது நடந்துட்டது. பழசை எல்லாம் மறந்துட்டு கல்யாணத்துக்கு அவசியம் வரணும்.” என்று கூறி அழைப்பிதழ் வைத்துவிட்டுச் சென்றார்.

“நீயும் சரண்யாவும் போயிட்டு வாங்கம்மா. நான் வரலை.” என்றான் அரிகிருஷ்ணன்.

“தப்பு அரி. அவர் இவ்வளவு தூரம் இறங்கி வந்து கூப்பிட்டு இருக்கார். பழசை மறந்துடு. ரெண்டு பேரும் போங்க. அதுதான் மரியாதை” என்றாள் தாய்.

அரிகிருஷ்ணன் தாயின் சொல்லுக்குக் கட்டுப்பட்டாலும் விருப்பமின்றிதான் கிளம்பினான்.

ரயில் கிளம்புவதற்கான அறிவிப்பு வந்தது. அந்த நேரம் பெட்டியில் ஏறிய ஒரு குடும்பம் எதிர் இருக்கையில் வந்து அமர்ந்தது. கணவன் -

மனைவி, இரண்டு பிள்ளைகள். ரயில் கிளம்பியதிலிருந்து அந்த இரண்டு வாண்டுகளின் அட்டகாசம் பெட்டியையே கிடுகிடுக்க வைத்தது. பெற்றவர்கள் அடிக்கடி கண்டித்துக் கொண்டுதான் இருந்தார்கள். அந்த நேரத்தில் கம்மா இருப்பதும் பிறகு அமர்க்களம் செய்வதுமாக இருந்தார்கள்.

பிள்ளைகளின் தந்தை தேநீர் வாங்கினார். "எனக்குதான் ஃபஸ்ட்" என்றவாறு ஒரு பையன் சட்டென பிடுங்க, அது எகிறி விழுந்து அரிகிருஷ்ணனின் மார்பில் சிந்தியது.

சூடான தேநீர் பட்டு அவன் துடித்ததும், எதிரே இருந்தவன் பதறி எழுந்தான். 'ராஸ்கல்' என்று தனது மகனை முதுகில் அறைந்து விட்டு அரிகிருஷ்ணனை நெருங்கினான்.

"ஸாரி சார்" என்றான்.

அரிகிருஷ்ணன் மனத்தில் இவ்வளவு நேரமாகச் சுழன்றுக் கொண்டிருந்த கோபம் 'குப்'பென குமைந்தது.

"என்ன சார் ஸாரி? கொஞ்சமாவது அறிவிருக்கா?" என்று கத்தினான்.

"சின்ன பையன் தெரியாம செய்துட்டான்."

"என்ன சின்ன பையன்? ரயில்ல ஏறினதுல இருந்து கவனிச்சுட்டுதான் இருக்கேன். வண்டியை ரெண்டாக்குற மாதிரி கலாட்டா செய்யறாங்க. பிள்ளைகளை அடக்க ஒடுக்கமா கண்டிச்சு வளர்க்கணும். குரங்குங்க மாதிரி கும்மாளம் போடவிடக் கூடாது." என்றான் கோபத்துடன்.

பிள்ளைகளின் தாய்க்கு சட்டெனக் கோபம் வந்துவிட்டது.

"சார், கொஞ்சம் அளவா பேசுங்க. என் பிள்ளைகளைக் குரங்குங்கன்னு சொல்ல நீங்க யாரு?" என்றாள்.

"இந்த ரோசத்தை உங்களோட பிள்ளைகளை வளர்க்கறதுல காட்டுங்க" என்றான் அரிகிருஷ்ணன்.

"அது எங்களு..." என்றபோது கணவன் குறுக்கிட்டான்.

"ஆட்டோக்காரனைத் துணிக்கடையிலே வேலை செய்யவிட்டது தப்பாப் போச்சு."

"ஏன்?"

"துணி வாங்க வந்தா, 'மீட்டருக்கு மேல எவ்வளவு போட்டுத் தருவீங்க'ன்னு கேட்டு வியாபாரத்தையே கெடுத்துடறான்."

- ஆ. கதிரேஷ்



"கௌரி, நீ கம்மா இரு. தப்பு நம்மோடது. சார், தெரியாம நடந்து போச்சு. ஸாரி." என்று அவன் பணிவுடன் கூறினான்.

அரிகிருஷ்ணன் எதுவும் பேசாமல் கடுப்புடன் எழுந்து சென்று வாஷ்பேசினில் தண்ணீர் பிடித்து சட்டையைத் துடைக்க ஆரம்பித்தான். சரண்யாவும் வந்துவிட்டாள்.

"ரொம்ப சூடா இருந்ததா? ஒண்ணு ஆகலையே?" என்று கேட்டவாறு சட்டையை விலக்கிப் பார்த்தாள்.

"இலேசாதான் பட்டது; விடு" என்றான் அரிகிருஷ்ணன்.

அந்த எதிர் இருக்கை தாய், பிள்ளையைப் போட்டு அடித்துக் கொண்டிருந்தாள். அவன் பெரிதாக அழுது கொண்டிருந்தான். இருவரும் சென்று அமர்ந்தார்கள். அந்தப் பெட்டியில் தர்மசங்கடமான அமைதி நிலவியது.

ஒரு மணி நேரம் கழிந்திருக்கும். அவர்கள் மூட்டை முடிச்சுகளை இறக்குவதற்குத் தயாராக எடுத்து வைத்தார்கள். இப்போது அவன் பேச்சு கொடுத்தான்.

"சார், தெரியாம நடந்து போச்சு, மன்னிச்சுடுங்க. கொஞ்சம் முன்னாடியே பேசி இருந்தா, நீங்க இருந்த கோபத்துல கேட்டிருக்க மாட்டீங்க. அதனாலதான் எதுவும் பேசாமல் ஆறவிட்டேன். நாங்க இறங்க வேண்டிய இடம் வந்ததும் பேசாம இறங்கிப் போயிடலாம். ஆனா இந்தச் சம்பவம் அடிக்கடி ஞாபகம் வந்துட்டே இருக்கும். ஒரு மூன்று மணி நேரப் பயணத்துல முன்பின் தெரியாத ஒருத்தரை விரோதியாக்கிட்டு ஏன் மனசைப் போட்டு அவஸ்தை படுத்திக்கணும்? நீங்க மன்னிச்சுட்டேன்னு சொல்லி சிரிச்ச முகத்தோடு எங்களுக்கு ஒரு குட்பை சொல்லுங்க. ரெண்டு பேர் மனசுமே அமைதியாகும்" என்றான்.

அரிகிருஷ்ணன் வியப்புடன் அவனை ஏறிட்டான். அவன் பேசிய வார்த்தைகள் சரி என்றே பட்டது. 'எந்நேரமும் பரபரப்புடனே சுழன்று மனத்தை அலைச்சல் செய்து கொள்வது போதாதென்று காண்போரை எல்லாம் எதிரியாக்கி மனத்தில் தூக்கிப் போட்டுக் கொண்டு ஏன் டென்ஷனாக வேண்டும்?' என்று நினைத்தான்.

"பரவாயில்லை சார். சின்ன பையன் தானே? விடுங்க" என்றான் புன்னகையுடன்.

ரயில் நின்றதும் அவர்கள் சின்ன சிரிப்புடன் இறங்கிப் போய்விட்டார்கள். அரிகிருஷ்ணன் மனம் இப்போது அந்தப் பயணத்தை மகிழ்ச்சியுடன் ஏற்றது. ●



''எண்ணங்கள்தான் எனக்கு ஏற்றம் தந்தன. முதல் தோல்வியால் நான் துவண்டு விழுந்தபிறகு, எண்ணங்களை எனக்குள் ஆழமாய் விதைத்தேன். அதுதான் இன்று 'வானதி'யாக வளர்ந்திருக்கிறது. சாதனைக்கு முன்பு நான் சந்தித்த சோதனைகள், எனக்குக் கிடைத்த ஏணிப் படிகள்'' என்கிறார் வானதி திருநாவுக்கரசு.

''எனக்கு அப்போது ஏழு வயது. சொந்த ஊரான தேவக்கோட்டையில் மூன்றாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தேன். தாயாருடன் வசித்து வந்த என்னை 'இங்கே வசதி பத்தாது' என்று பர்மா நாட்டுக்கு அழைத்துப் போனார் எனது பெரியப்பா சாமிநாதன் செட்டியார்.

நகரத்தார் குல வழக்கப்படி, குடும்பத் தலைவர்கள் பொருளீட்ட மேலை நாடுகளுக்குச் சென்றுவிடுவது வழக்கம். அப்படித்தான் எனது தந்தையாரும் பெரியப்பாவும் பர்மாவில் குடியேறினார்கள். அங்கே எனக்கு பர்மிய மொழிப் பள்ளியில் படிக்கப் பிடிக்காமல் போய்விட்டது. அக்கம்பக்கத்துச் செட்டியார் வீட்டுப் பிள்ளைகள், ஆங்கிலத்தில் பேசுவதைக் கண்டு நானும் ஆங்கிலம் படிக்க வேண்டும் என்று அடம் பிடித்தேன். ரங்கூன் அருகிலிருந்த செட்டியார்ஸ் 'ரெஸிடென்ஷியல் ஸ்கூலில்' மாதம் பதினெட்டு ரூபாய் கட்டி சேர்த்து விட்டனர். அங்கே முதல் வகுப்பிலிருந்து படிப்பைத் தொடங்க வேண்டும் என்றதும், சகித்துக் கொண்டு சம்மதித்தேன்.


அங்கே கிடைத்த தரமான ஆங்கிலக் கல்வியும், விடுதி வாழ்க்கையும் எனக்குப் பிரகாசமான எதிர்காலம் கிடைக்கப் போகிறது என்று எண்ண வைத்தது. ஆனால் ஓராண்டு முடிவதற்குள்ளாகவே அந்த எண்ணத்தில் இடி விழுந்தது. காரணம் இரண்டாவது உலகப் போர்!

முப்பது பேர் கொண்ட குழுவில் நானும், ஒருவனாக, பதினாறு வயது நிரம்பிய இளம் அகதியாக இந்தியாவை நோக்கி பயணப்பட்டேன். பர்மாவின் ஐராவதி நதியைப் படகில் கடந்து கொண்டிருந்தபோது, ஜப்பானின் போர் விமானம் வீசிய குண்டு எங்கள் படகுக்குப் பக்கத்தில் விழுந்து, ஒரு கணம் உயிரையே உலுக்கியது. படகுப் பயணத்தின் முடிவில், 'புரோம் லைன்' என்ற மலைப்பாதை வழியே இந்தியா நோக்கி நடை பயணம்.

கொடிய விலங்குகள் நிறைந்த காட்டுப் பயணம். வழி நெடுகிலும் தூயகுடிநீர் இல்லாமல், மலேரியா காய்ச்சலுக்கு இரையான அழுகிய பிணங்கள் இரைந்து கிடந்தன. எங்கள் குழுவிலும் ஒருவர் பலியானதை இப்போது நினைத்தாலும் இதயம் நடுங்குகிறது. முப்பது நாள் நடை பயணத்திற்குப்பிறகு கல்கத்தா வந்து சேர்ந்ததும்தான் உயிரே வந்தது. அங்கிருந்து ரயில் மார்க்கமாக பல நாள் பயணித்து தேவக்கோட்டை வந்து சேர்ந்தபோது, வாழ்க்கையில் ஒரு பெரும் துயரத்தை எதிர்கொண்ட நெஞ்சுரம் வந்துவிட்டிருந்தது.

துயரம் தந்த நெஞ்சுரம்!

தேவகோட்டையில் என்னை எட்டாம் வகுப்பில் நேரடியாகச் சேர்த்துக் கொண்டாலும், பத்தாம் வகுப்புத் தேர்வில், கணக்குப் பாடம் என் காலை வாரிவிட்டது. ''செட்டிப் பிள்ளையாய் பிறந்துவிட்டு கணக்கிலே தவறி விட்டாயே! நீ மறுபடியும் பர்மாவில் உள்ள உன் அப்பச்சியிடமே போய்விடு'' என்று அம்மா கோபித்துக் கொண்டார்கள். ஆனால் நான் பர்மா போகாமல், 'கெட்டும் பட்டணம் சேர்' என்று சென்னை வந்து சேர்ந்தேன். 'தமிழ்நாட்டிலேயே கைநிறைய சம்பாதித்து, பெரிய ஆளாக வந்துதான் உன்னை வந்து பார்ப்பேன்' என்று அம்மாவிடம் சொல்லிவிட்டுத்தான் அங்கிருந்து வெளியேறினேன்.



அன்று (1946) சென்னையில் இருந்த நான்கு பதிப்பக நிறுவனங்களில் 'தமிழ்ப்

பண்ணை' பெரிய நிறுவனம். அங்கே எனக்கு அறுபது ரூபாய் சம்பளத்தில் வேலை கிடைத்தது. சுதந்தரப் போராட்ட வீரர் சின்ன அண்ணாமலை நடத்தி வந்த அந்த பதிப்பகத்தில் ராஜாஜி, கல்கி, மா.பொ.சி போன்ற அறிஞர்கள் கூடுவார்கள்.

அப்போது அங்கே இலக்கிய விவாதம் சூடும் சுவையுமாக அனல் பறக்கும். அதை அமைதியாக எட்டி நின்று ரசித்துக் கொண்டிருப்பேன். இலக்கியப் பற்றும், தேசியப் பற்றும் எனக்குள் ஆழமாய் வேர்விட்டது அப்போதுதான்.

தமிழ்ப் பண்ணையிலிருந்து வெளியேறிய பிறகு 'தியாகி' மாத இதழில் எழுத்தர் வேலையில் சேர்ந்துவிட்டு, சிறுவர் கதை எழுதினேன். அதன்பின்னர் என் பள்ளிப் பருவ நண்பன் தமிழ்வாணனை சென்னையில் கண்டுபிடித்தேன். அப்போது அவர் 'அணில்' என்ற சிறுவர் இதழுக்கு ஆசிரியராய் இருந்ததைக் கண்டு எனக்குத் தலைகால் புரியாத மகிழ்ச்சி. இருவரும் இணைந்து, சிறு முதலீட்டில் ஏன் ஒரு பதிப்பகம் தொடங்கக் கூடாது என்று விவாதித்தோம். அறுநூறு ரூபாய் முதலீட்டில் 'ஜில்ஜில் பதிப்பகம்' பிறந்தது. எங்களின் முதல் முயற்சி முப்பத்து இரண்டு பக்கத்தில் வெளியான 'சிரிக்காதே' புத்தகம். அடுத்தடுத்த எங்கள் வெளியீடுகளுக்கு நல்ல பெயர் கிடைத்தாலும் குமுதம் இதழ் 'கல்கண்டு' பத்திரிகை தொடங்கியபோது அதில் பணியாற்ற தமிழ்வாணனுக்கும், எனக்கும், அழைப்பு வந்தது. நான் மறுத்தேன். தமிழ்வாணன் ஏற்றுக் கொண்டார். ஒரு பதிப்பகத்தைத் தனியே நடத்த முடியும் என்கிற தன்னம்பிக்கை எனக்கு இருந்தது.



'ஜில்ஜில்' பத்திரிகை நாலணா விலையில் பிறந்தது. அப்போது 'ஜில்ஜில்' மாத இதழுக்குச் சிறுவர்கள் நிறைய கதைகளை எழுதி அனுப்புவார்கள். அதில் ஒரு கதை கண்ணில்பட்டது. 'பாலுவின் பயணம்' என்ற அந்தக் கதையை கி.ராஜேந்திரன் எழுதி அனுப்பியிருந்தார். ஆரம்பமே அசத்தலாக இருந்த அந்தக் கதையை 'மீன் குஞ்சுக்கு நீந்தக் கற்றுத் தர வேண்டுமா' என்று அறிமுக உரை எழுதி பிரசுரித்தேன். அமோக வரவேற்பு. உடனே கல்கி அவர்களை அவர் அலுவலகத்திற்கே சென்று சந்தித்து ஆசி கேட்டேன். தமது மகனின் கதை வெளிவந்திருப்பதைப் பார்த்து, ''இனி கதை போடாதீர்கள், அவனை

நான் மருந்தாளர் ஆக்கப் போகிறேன்'' என்றார்.

''இது தொடர்கதை. நிறுத்த முடியாதே என்றதும்'', ''இதுவே கடைசியாக இருக்கட்டும்'' என்றவர், ''இதழ் அருமையாக இருக்கிறதே. பத்திரிகை நடத்துவது என்றால் அச்சுக் கூடம் அவசியம். உறவினர்களிடம் கடன் பெற்றாவது அச்சுக் கூடம் வைத்துக் கொள்ளுங்கள்.'' என்று அறிவுரை கூறினார். 'ஜில்ஜில்' இதழைப் பற்றி கல்கி இதழில் அவர் எழுதிய விமர்சனம் கண்டு, ஒரு மாத காலத்தில் மூவாயிரம் ரூபாய் சந்தா தொகை குவிந்தது. எனக்கோ உற்சாகம் கரை புரண்டது. அந்தக் காலத்தில் ஒருபுகழ் பெற்ற பத்திரிகை ஜாம்பவான் ஒருவர், வளர்ந்து வரும் இளம் பதிப்பாளனை ஊக்குவிப்பது குறிஞ்சி மலருக்கு



''வீட்டுக்குக் கூட்டிப் போய், உன் அப்பாவிடம் என்னை அறிமுகப்படுத்தி வைன்னு நீதானே கேட்டுக்கிட்டே?''

''அதுக்காக, ஐஸ்க்ரீம், சினிமானு அடிக்கடி என் செலவில் ஓசியில் அனுபவிக்கிறான்னு நான் சொல்லியிருந்தேனே, அந்த பாபு இவன் தாம்பானு அறிமுகப்படுத்தி தொலைக்கணுமா என்ன?''

– உ. ராஜாஜி

ஒப்பானது. ஆனால் கல்கி என் கண்களுக்கு ஆயுள் கால குறிஞ்சி மலராகத் தெரிந்தார். அவர் வாக்குப்படியே அச்சகம் வைக்கும் கனவு நனவானது.

'ஜில்ஜில்' மாத இதழுடன், கூடவே 'கோமாளி' வார இதழ், 'மிட்டாய்' மாதம் இருமுறை, 'வெண்ணிலா' இலக்கிய மாத இதழ் என்று ஆர்வ மிகுதியில் அகலக்கால் வைத்தேன். பத்திரிகையின் எண்ணிக்கை அதிகரித்ததால், இரவு நேரங்களில் 'டிரெடில்' அச்சு எந்திரத்தை, காலாலேயே மிதித்து ஓட்டுவேன். அச்சான காகிதங்களை ஒழுங்கு படுத்தி பைண்ட் செய்யும் வேலையில் என் மனைவி ஈடுபடுவாள்.

ஆனால் உழைப்புக்குப் பலன் கிடைப்பதற்குப் பதிலாக அடியே கிடைத்தது. பத்திரிகை விற்பனை முகவர்களிடமிருந்து, எதிர்பார்க்கிற நேரத்தில் பணம் வரவில்லை. பேப்பர்காரரிடம் கடன், அச்சுமைக்காரரிடம் கடன், என்று சமாளித்தாலும் பார்சலுக்கும், சந்தா புத்தகங்களை அஞ்சலில் அனுப்பும் செலவுக்கும்கூட நெருக்கடியாகித் தவித்தேன். வழியின்றி அச்சகத்தை விற்க வேண்டியதாகிவிட்டது. பதிப்பக வாழ்வில் முதல் தோல்வி என்றாலும் மிகப் பெரிய தோல்வி என்றுதான் சொல்ல வேண்டும். இந்தத் தோல்விதான் எனக்குக் கற்றுக் கொடுத்தது. 'துவண்டுப் போய்விடாதே' என்று எனக்குள் நான் விதைத்திருந்த எண்ணங்கள் என்னைத் தட்டிக் கொடுத்தன. ஆற அமர சிந்திக்கத் தொடங்கினேன்.

பத்திரிகைகள் என்றால் குறிப்பிட்ட வாரம், அல்லது மாதத்தோடு மதிப்பு போய்விடுகிறது. அதன் பிறகு அது பழைய காகிதம். அதுவே புத்தகங்கள் என்றால் இன்று இல்லை என்றாலும் நாளை விற்றுக் கொள்ளலாம். பதிப்பகமே பாதுகாப்பானது என்று உணர்ந்தேன். அப்போது எனக்கு கைகொடுத்தவை, மனைவியின் நகைகள்தான். அமரர் 'கல்கி' மீதிருந்த பற்றாலும், 'பொன்னியின் செல்வன்' தொடர் கதையில் அன்று பிரபலமாகிவிட்ட வானதி பாத்திரத்தின்மீது இருந்த பாதிப்பாலும் துணிந்து 'வானதி' பதிப்பகத்தைத் தொடங்கினேன். நண்பர்களும் உறவினர்களும், 'இவனுக்கு என்ன, கிறுக்குப் பிடித்திருக்கிறதா? இத்தனை நஷ்டத்திற்குப் பிறகும், புத்தகம் அச்சடிக்கப் புறப்பட்டு விட்டான்' என்று கடிந்து கொண்டனர்.

ஆனால் என்மீது அன்பும், நட்பும் கொண்டிருந்த எழுத்தாளர்கள் அவர்களின் படைப்புகளை எனக்குக் கொடுத்தார்கள். 'வெண்புறா' என்ற வானதியின் முதல் நூல் பிறந்தது. நகரத்தாரின் குலத் தொழிலான கொடுக்கல் வாங்கலை விட்டுவிட்டு புத்தகம் அச்சடிக்கிறேன் என்று நகைகளைக் கேட்கிறாரே மாப்பிள்ளை என்று என் மாமியாருக்கு ஒரே வருத்தம். தேசியமும், தெய்வீகமும் எனக்குள் ஏற்படுத்திய 'சத்திய வட்டமே' என்னைப் பதிப்பக வட்டத்தைவிட்டு விலகாமல் காத்தது. இந்த தொழில். ஆத்ம திருப்தியை அள்ளிக்

கொடுத்தது.

மக்களின் மாறும் ரசனைக்கேற்ப மர்ம நாவல், தன்னம்பிக்கைப் புத்தகங்கள், ஆன்மிகப் பொக்கிஷங்கள் என்று வெளியிட்டு வந்தேன். 'வானதி ஒரு தரமான பதிப்பகம். அங்கே வாங்கிப் படிக்கிற எந்த நூலும் வாசகனுக்குத் தாழ்வைத் தராது' என்று தமிழ்க் கூறும் நல்லுலகம் பாராட்டியது. மறுமலர்ச்சி இலக்கியங்கள் தோன்றியபோது அவற்றைத் தொடர்ந்து வெளியிட்ட என்னை எதற்கு ரிஸ்க் எடுக்கிறாய் என்று எச்சரிக்கை செய்த நண்பர்களே அதிகம். இது பொறுமையைச் சோதிக்கக் கூடிய தொழில் மட்டுமல்ல. வாசகர்மீது நம்பிக்கை வைக்க வேண்டிய தொழில், அடிப்படையில் நானும் ஓர் எழுத்தாளன் என்பதால், என்னிடம் வரும் எழுத்துகளை ஓர் அன்னப் பறவை போல எடுத்துக் கொள்கிறேன்.

இன்றுவரையும் தொழிலாக அங்கீகரிக்கப்படாத இந்தத் தொழிலில், நேர்மை, பொறுமை இரண்டையும் என்னிரு கண்கள் எனக் காத்ததால் - புகழும் பொருளும் எனக்குக் கிடைத்தன. மூளை உழைப்புக்கும், உடல் உழைப்புக்கும் அதிக சுமை தரும் தொழில் என்பதால், வயிற்று நோய் தொடங்கி இதயமாற்று அறுவை சிகிச்சை வரை செய்து கொண்டு மறுபிறவி எடுத்தாலும் இந்த எழுபத்து இரண்டு வயதிலும் இளைஞனாய் உழைத்துக் கொண்டிருக்கிறேன். எனது வாழ்க்கை, புதியவர்களுக்கு வழிகாட்டியாக இருக்குமானால் நான் சாதித்துவிட்டதாக நிறைவு கொள்வேன்.

சந்திப்பு : **ஜெயந்தன்**
படம் : **ஸ்ரீஹரி**

உயர்ந்ததான வைகுண்ட க்ஷேத்திரத்துக்குப் 'பதம்' என்று பெயர். 'தத்விஷ்ணோது பரமம் பதம்'- பரம் என்பதற்கு எத்தனையோ அர்த்தங்கள். பரம் என்றால் இடம். பரமம் பதம்- அதற்குத் துல்யமான வேறு இடம் இல்லை என்று அர்த்தம். இந்த 'பரம' சப்தத்தை உபயோகித்தால், துல்லியமில்லாத விஷயத்தை உணர்த்தத்தான் உபயோகிக்க முடியும்.

"திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயிலுக்குப் போயிருந்தேன். சர்க்கரைப் பொங்கல் கையிலே கொடுத்தார்கள்..."

"எப்படியிருந்தது...?"

"பரம போக்கியம்!"

அப்படியென்றால் அந்த சர்க்கரைப் பொங்கலுக்கு ஈடு இணை இல்லை என்று அர்த்தம்!

நமக்கெல்லாம் ஆத்மா என்று பெயர். எம்பெருமானுக்கு என்ன பெயர்...? பரமாத்மா!

அப்படியானால் அவனுக்கு ஈடு இணை இல்லை என்று அர்த்தம். 'ஒத்தார் மிக்கார் இலையாய மாமாயன்' அவன்! ஆகையினாலேயே அவனுக்கு 'தரித்திரன்' என்றொரு பெயர் உண்டு.

ஒரு ரசிகர்-பரம பக்தர். பெரிய பெருமாள் படம், தட்டு நிறைய புஷ்பத்தைக் கொண்டு வந்தார்... கையில் வைத்துக் கொண்டு ஓம் விஸ்வஸ்மை நம: என்று ஆரம்பித்தவர், நன்றாக அர்ச்சனை பண்ண

குறைவ



லாம் அல்லவா...? திடீரென்று 'தரித்ராய நம:' என்றார்!

பகவானுக்கு ஒன்றுமே தோன்றவில்லை! பட ரூபத்திலே இருந்தாலும், அர்ச்சனை பண்ணியவரின் கையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டுவிட்டான்.

"என்ன அக்கிரமம்! நீரே இப்படிப் பண்ணிவிட்டுப் போய்விட்டால் பின்னால் வருபவர்கள் எல்லோரும் அதையேதானே திருப்பித் திருப்பிச் சொல்லுவார்கள்! இது என்ன விபரீத அர்ச்சனை?" என்று கேட்டான்.

"உனக்குத் தாரித்ரியம் இருக்கிறது! அதனால்தான் சொல்கிறேன்!"

"எனக்கு ஏழைமையே கிடையாது!" என்றான் பகவான்.

"இருக்கிறது. நிரூபிப்பேன்!"

"நிரூபித்தால் ஒப்புக் கொள்கிறேன்."

அப்போது அவர் கேட்கிறார், "நீ இத்தனை பேசுகிறாயே... உனக்குச் சமமானவன் இருந்தால் காட்டு!"

...ன்றுமில்லை 28

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

பகவான் விழிக்கிறான்! பிடித்துக் கொண்டிருந்த அவன் கையை விட்டுவிட்டான்!

"இந்த ஒரு விஷயத்திலே உனக்கு தாரித்ரியம் இருக்கிறதா இல்லையா...?"

"இருக்கிறது! இருக்கிறது! நான் யாரைக் காட்டுவேன் எனக்குச் சமம் என்று..?"

"உனக்குச் சமம் என்றே ஒருத்தரைக் காட்ட முடியவில்லையே; மேலானவனைக் காட்ட முடியுமா...?"

"அதிலேயும் கூட எனக்குத் தாரித்ரியம்!"

"அப்படியானால், நான் அர்ச்சனை பண்ணுகிறேன்; நீ வாய் மூடிக் கேட்டுக் கொண்டிரு!"

பகவானால் தனக்குச் சமமான ஒருவரைக் காட்ட முடியவில்லை. அதிலே ஏழைமை! அவனைக் காட்டிலும் அதிகமில்லை என்பதால் அதிலே ஏழைமை! இந்த இரண்டு விஷயத்திலே அவனுக்கு தாரித்ரியம் இருக்கிறதனாலே அதை ஒப்புக் கொண்டுதான் ஆகவேண்டும்.

பரம: பரோமா! –ஆதிசங்கர பகவத் பாதாள் ரொம்ப அழகாக அர்த்தம் சொல்கிறார், சஹஸ்ர நாம பாஷ்யத்திலே:

அஸ்யோதி பரம்: – அவனுக்குப் பரமன் என்று பெயர்.

பரமம் பதம் – உத்தமமான பதம். அப்படிப்பட்ட வைகுண்டத்திலே எழுந்தருளியிருக்கிறான் பரமாத்மா. அவனுக்குத் துல்யம் இல்லை; அந்த தேசத்துக்கும் துல்யமில்லை.

துக்கமே கலப்பில்லாத உயர்ந்த இடம் அது!

பகவான் ஆனந்த மயன் என்றது உபநிஷத். மயத் என்பதற்கு, ப்ராஜுர்யம் என்று அர்த்தம். பிராஜுர்யம் என்றால் மிகுதி. நிறைய்ய்ய்ய! அது எவ்வளவு என்று சொல்ல முடியாது.

அன்னமயோ யக்ஞ: – ஒரு யக்ஞத்தைப் பார்த்து, இது அன்னமயமான யக்ஞம் என்றார். வந்தவர்களுக்கெல்லாம் வாரி வாரி அன்னதானம் நடந்து கொண்டேயிருந்தது. ஆதலால், அன்னமயமான யக்ஞம் அது! ஆனந்த மயோ ப்ரும்மா!

பரப்ரும்மம் இருக்கிறதே... அதன் ஆனந்தத்துக்கு முடிவு என்பதே கிடையாது. முடிவில்லதோர் எழில் பகவானுடையது! அது போலவே அவன் ஆனந்தத்துக்கு முடிவு உண்டோ? 'தொல்லை இன்பத்தின் இறுதி உண்டோ?' என்றார் குலசேகர ஆழ்வார். அந்த யசோதை, கிருஷ்ணனை அனுபவிக்கிறபோது அந்த ஆனந்தத்தின் எல்லை நிலத்தையே கண்டாள். அப்படியானால், அந்த எம்பெருமான் அந்த யசோதைக்குப் பரிபூரண அனுபவத்தைக் கொடுத்தான். ஆகையினால் அந்த இன்பத்தின் பூர்ணத்துவத்தை அவள் கண்டாள். இங்கே அந்த ஆனந்தத்தினுடைய மிகுதி, அனுபவிக்க, அனுபவிக்க, அனுபவிக்க, மற்றைய விஷயங்களெல்லாம் வேண்டாமென்று தூர ஒதுக்க

வேண்டி வரும்.

பகவத் விஷயம் ஒன்றே அனுபவிக்க அனுபவிக்க அனுபவிக்க மேலும் நம்மை ஈர்க்கும். அப்படிப்பட்ட இடத்திலே, ஆனந் தமே நிறைந்த இடத்திலே—வைகுண்டத்திலே இன்றைக்கும் பகவான் இருக்கிறான்.

வேதம் இந்த ஆனந்தத்தை அப்யாஸம் பண்ணிக் கொண்டே இருக்கிறது.

ஆசிஷ்டோ அசன ஷில: - ஆசிஷ்டா என்றால்...? நன்றாகச் சாப்பிட வேண்டும் என்கிறது உபநிஷத்!

சாப்பிட்டால் மட்டும் போதுமா?... அது செரிக்க வேண்டும்! - இதுதான் மனிதனு டைய ஐச்வர்யம் என்று சொல்லிவிட்டது உபநிஷத்.

நல்ல பலம், புஷ்டி, தேஜஸ்- எல்லாம் ஒரு மனிதனுக்கு இருக்க வேண்டும். அப்படிப்பட்ட மனிதன்- இந்த உலகம் முழு வதையும் ஐச்வர்யத்தினால் நிரப்பினால் அது மொத்தத்தையும் அனுபவிக்கக் கொடுத்து வைத்த மனிதன் ஒருவன் இருந் தால்... அவனை வைத்துக் கொண்டு, அவனு டைய அந்த அனுபவத்தை நூறு நூறாகப் பெருக்கிக் கொண்டே போனால் மகேந்தி ரன், பிருஹஸ்பதி, ப்ரும்மா என்று தேவலோ கத்தார் அனுபவிக்கும் ஆனந்தத்தைச் சொல் லலாம். அந்த ப்ரும்மத்தினுடைய நூறு மடங்கு ஆனந்தம் பரப்ரும்மத்தினுடையது என்று சொல்லி, அந்த பரப்ரும்மத்தினு டைய ஆனந்தத்தைக் கொண்டு வந்து மறு படியும் மனிதனுடைய ஆனந்தத்திலே கீழே வைத்து, மறுபடியும் நூறு நூறு மடங்காகப் பெருக்கிக் கொண்ட போய் ப்ரும்மத்தினு டைய ஆனந்தத்தைச் சொல்லி, அதைக் கொண்டு வந்து மறுபடியும் மனிதனுடைய ஆனந்தத்திலே வைத்து, இன்றைக்கு வரைக் கும் பண்ணிக் கொண்டேயிருக்கிறது உபநிஷத்!

இத்தனை முயற்சி பண்ணியும் அந்த ப்ரும்மானந்தம் என்னவென்பதை முழுசா கச் சொல்ல முடியவில்லை! கடைசியில் என்ன சொல்கிறது பாருங்கள்:

வாக்குக்கும் மனத்துக்கும் எட்ட முடி யாதவனை எம்பெருமானை- ஆனந்த மயன் என்று எவன் உணர்கிறானோ, அவன் எதற்கும் பயப்பட வேண்டியதில்லை! யாருக் கும் பயப்படவேண்டியதில்லை! என்கிறது.

அவ்வளவு ஆனந்தமயமானவன் பக வான். அவ்வாறு ஆனந்தமயனாக, நித்ய சூரிகள் சூழ இருப்பவனை இமைகொட் டாமல் சேவித்துக் கொண்டிருக்கிறார்கள் வைகுண்டத்திலே.

அனிமேஷ தரிசனீயம்!

நைமிசாரண்ய க்ஷேத்திரத்துக்கு அநிமிஷ க்ஷேத்ரம் என்று பெயர். தேவதைகள் நித்ய வாஸம் பண்ணும்படியான க்ஷேத்ரம். ஸ்ரீதேவி, பூதேவி, நீளாதேவி- 'திருமகள், மண்மகள், ஆயர்மடமகள்' என்று ஆழ்வார் கள் பேசினார்களே, அந்த மூவர் சமேதராக எம்பெருமான் வைகுண்டத்தில் இருக் கிறான்.

இந்த திவ்ய மஹிஷிகள் இருக்கிறார்களே, இவர்கள் அவனை இமைகொட்டாமல் பார்த்துக் கொண்டேயிருக்கிறார்கள். இவர் களே இப்படிப் பார்த்துக் கொண்டிருக் கிறார்கள் என்றால், மற்றவர்களை என்ன சொல்வது! எப்போதும் பார்த்துக் கொண்டி ருக்கிறவர்களே ஒரு நிமிஷம் கண்ணைக் கொட்டினால், என்ன போய்விடுமோ என்று அப்படியே பார்த்துக் கொண்டிருக்கிறார் களாம்! இமை கொட்டுதல் இல்லாமல் பார்க்கும்படியான திவ்ய திருமேனி அழகு!

அருள்வாக்கு

கனவிற் காணப்படுவதெல்லாம் பொய். பார்க்கிற அறிவொன்றுதான் மெய். இந்த ஆத்மாவே பார்க்கப்படும் அவ்வளவு வஸ்துக்களாகவும் கனவில் இருந்தது. கனவு நீங்கினால் ஒன்றே மிச்சம் இருப்பது தெரியும். கனவிலே வருபவன், கனவு காண்கிறவனை மனஸால் ஆலோசித்து, அறிய முடியுமா? ஆதலால் வேறாக இல்லாவிட்டால் ஒன்றை அறியவும், அதைப் பற்றிச் சொல்லவும் முடியாது. எனவே தான் அத்வைத ஸத்யமானது வாக்காலும் மனத்தாலும் பிடிபடாதது என்பது.

இப்பொழுது முடிவாக நாம் அறிந்து கொண்டது- 'நிஜம் ஒன்றுதான் இருக்கிறது, எல்லாம் ஈச்வரஸ்வரூபம்' என்பதே. மாயையால் வேறு வேறாகத் தோன்றுகிறது. எல்லாவற்றையும் ஒன்றாக்க வேண்டும்; 'நாம்' என்பதையும் அந்த ஒன்றிலே கரைக்க வேண்டும். அதற்கு வேண்டிய



சாஸ்திரங்களைப் படிக்க வேண்டும். இதற்கு ஸாதனம் ச்ருதி (வேதம்), ஸ்மிருதி (தர்ம சாஸ்திரம்), புராணம், கோயில் தரிசனம், பூஜை, பரோபகார கர்மா, ஸ்வதர்மம் முதலியவைகள். உலகத்தில் உள்ள வஸ்துக்களுக்காக எவ்வளவோ தியாகம் பண்ணுகிறோம். நமக்கு ஸ்திரமான ஆனந்தத்தைத் தரும் அத்வைத நிலை அடைவதற்கு எந்தத் தியாகமும் பண்ணலாம். ஞானோபதேசம் செய்த யாக்ஞவல்கியரிடம் ஜனகர், "விதேஹ ராஜ்யம் முழுவதும் கொடுத்தேன்; என்னையும் கொடுத்தேன்" என்றாராம். "விதேஹான் ததாமிமாம் சாபி ஸஹ தாஸ்யாய" (பிருஹதாரண்யகம்).

கூரையில் எத்தனை தரம் உடைத்தாலும் பக்கத்து நாளுக்கு ஒரு தரம் கரையான் புற்று தோன்றிக் கொண்டேதான் இருக்கும். கூரை மூங்கிலுக்குள் இருக்கிற தாய்ப் பூச்சியை எடுத்துப் போட்டால்தான் அப்புறம் புற்று முளைக்காது. இந்த மாதிரி மற்ற ஸாதனை, மார்க்கம் எதில் போனாலும் சரீரம், துக்கம் மறுபடி மறுபடி முளைத்துக் கொண்டுதான் இருக்கும். இதற்கெல்லாம் ஆதிகாரணமான தாய்ப்பூச்சியான த்வைதப் பூச்சியை எடுத்துப் போட்டால்தான், நமக்கு வேறான இன்னொருவன்றால் ஏற்படும் காமமும் க்ரோதமும், இதுகளை அனுபவிப்பதற்காக மறுபடி மறுபடி உடம்பு எடுப்பதும் தீர்ந்து போகும்.

இந்த நிலைக்கு வருவதற்கு ஸுலபமான ஸாதனம் பக்தி உபாஸனை என்று அப்பைய தீக்ஷிதர் சொல்லியிருக்கிறார். அதை எல்லோரும் அனுஸரித்து அத்வைத ஸித்தியை அடைய வேண்டும்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய ஸ்வாமிகள்

– அப்படிப்பட்ட ஏற்றம் உடையவன் வைகுண்டத்திலே எழுந்தருளியிருக்கிறான். பரவாசுதேவன் என்று அவனுக்குப் பெயர். பரம் என்று பெயர்! அவனேதான் பாற்கடலிலே பள்ளி கொண்டிருக்கிறான். திவ்ய மாயிருக்கும்படியான பாற்கடலிலே அவனுக்கு வியூக மூர்த்தி என்று பெயர். பத்மநாபன் என்று அவனுக்குப் பெயர்.

பாஞ்சராத்ர ஆகம சாஸ்திரத்திலே இந்த உயர்ந்த வியூக மூர்த்தியின் பெருமை விவரிக்கப்பட்டிருக்கிறது.

பைய்யத் துயின்ற பரமன் அடிபாடி– ஆண்டாளும் விசேஷமாக விவரிக்கிறாள்.

திருப்பாற்கடலிலே பள்ளி கொண்டிருக்கிறான் எம்பெருமான். அவனே இந்த பூவுலகத்திலே வந்து அவதரிக்கிறான். நூதனனாக வந்து அவதரிக்கிறான்.

வேதத்திலே இரண்டாவது அஷ்டகத்திலே வரும் ஓர் அழகான மந்திரம். விஷ்ணுவினுடைய பிரபாவத்தைச் சொல்லும்படியான மந்திரம் இது. இது என்ன சொல்கிறது...? விஷ்ணுவினுடைய யக்ஞத்தைப் பண்ணும்படியான நேரத்திலே 'இஷ்டகோபகதானம்' என்று பெயருடைய மந்திரம் சொல்வார்கள்– இஷ்டை என்றால் செங்கல்– அதை எடுத்து அடுக்குகிறபோது இந்த மந்திரத்தைச் சொல்வார்கள். என்ன சொல்கிறது இந்த மந்திரம்...?

பூர்வே பவாய பூர்வ்யாய பூர்வே பவ:

நாராயணன் என்கிற எம்பெருமான் ஒருவனே ஆதியில் இருந்தான் என்று சொல்கிறது. அவன் பூர்வீகனானவன்.

எப்படி பூர்வ கால மனிதன், நவீன கால மனிதன் என்று நாம் சொல்கிறோம்...? 'அவர் பிராசீனம், அவர் அப்படித்தான் இருப்பார்; இவர் நவீனம், இவரையும் மாற்ற முடியாது' என்றெல்லாம் சொல்கிறோம்.

பூர்வீகம் நவீனம் இரண்டும் உலகில் இருந்து கொண்டேயிருக்கிறது. இதற்கு முழுமுதல் சாட்சியானவன் எம்பெருமான் தான்! அவனே பூர்விகனாயிருக்கிறான்; அவனே நவீனனாகவும் இருக்கிறான்.

(வளரும்)





23 காரட் தேவா!

ரொம்பவே ஆச்சரியமாக இருந்தது அந்தக் காட்சியைப் பார்த்தபோது. ஒரு நடுத்தர வயது பெண்மணி தம் டீன் ஏஜ் பெண்ணுடன் கிடுகிடுவென்று ஒரு பார்வை விட்டார். "எது பிடித்திருக்கிறதோ அதை எடுத்துக்கொள்" என்றார் அம்மா. குதூகலத்துடன் பெண் தேர்ந்தெடுத்த நகைகளுக்கு பில் போடச் சொன்னார். சுமார் இரண்டு லட்சம் வந்தது. பணத்தை எண்ணிக் கொடுத்துவிட்டு, நகைகளுடன் சந்தோஷமாய்ப் புறப்பட்டுச் சென்றார்.

சென்னை, பார்க் ஷெராட்டன் ஓட்டலில் நடந்த கண்காட்சிக்கு வந்திருந்த பார்வையாளர் முகத்தில் பணக்காரக் களை சொட்டியது. அலட்டல் சிரிப்பு, அபரிமித செழிப்பு. அம்மா ஆட்சியில் (அட்லீஸ்ட் இங்கேயாவது) ஏராள பணப்புழக்கத்தைக் காண முடிந்தது.

மும்பை, கொல்கத்தா, ஜெய்ப்பூர், ஹைதராபாத், பெங்களூர் என்று பல்வேறு முக்கிய நகரங்களைச் சேர்ந்த முப்பத்தாறு பிரபல நகைக் கடைகள், நகை உற்பத்தியாளர்கள் பங்கேற்க, கண்காட்சி ஜகஜ்ஜோதியாகப் பளபளத்தது.

அல்ட்ரா மாடர்ன் டிசைன்ஸ், பாரம்பரிய நகைகள் என்று கதம்பமாய் ஸ்டால்கள்.

'ரூபா வோரா' என்ற பெண்மணி 'தேவா' என்ற பெயரில் வண்ணக் கண்ணாடியில் தங்கம் பதித்த புதுமையான மொகலாயர் காலத்து நகைகளை வடிவமைத்து, அதற்கென விருது பெற்றவர். 'தேவா' நகைகளை அதிகபட்ச உஷ்ணம் கொண்ட தனியறையில், 23 கேரட் தங்கத்தை உருக்கி வண்ணக் கண்ணாடிகளில் கலை நேர்த்தியுடன் இழைத்து உருவாக்குகிறார்களாம். இவர் ஸ்டாலில் கூட்டம் மொய்த்தது.


மொத்தம் இருபத்தைந்து கோடி ரூபாய் மதிப்புள்ள நகைகள் கண்காட்சிக்காக கொண்டு வரப்பட்டிருந்தன.

"காலம் கெட்டுப் போயிருக்கும் இன்றைய சூழ்நிலையில், இதுபோன்று ஒரு நகைக் கண்காட்சி நடத்துவது ரொம்ப ரிஸ்க் இல்லையா?" என்று அமைப்பாளர் நடத்திய சையது ஜாகிர் அகமதிடம் கேட்டபோது, "இதுவரை எழுபதுக்கும் மேற்பட்ட நகைக் கண்காட்சிகளை, இந்திய நகரங்களில் மட்டுமல்ல, சிங்கப்பூர் அமெரிக்காவிலும்கூட நடத்தியிருக்கிறேன். எந்த விதமான அசம்பாவிதமும் இதுவரை நிகழவில்லை. நிறைய ரகசிய கேமராக்கள் வைத்து இடைவிடாமல் கண்காணித்துக் கொண்டிருக்கிறோம். ஆயுதம் ஏந்திய பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கண்காட்சியை நட்சத்திர ஓட்டலில் நடத்துகிறோம். கண்காட்சி நேரம் முடிவடைந்தவுடன், ஒவ்வொரு ஸ்டால்காரரும் தத்தம் நகைகளை, சூட்கேஸ்களில் வைத்து பத்திரப்படுத்தி விடுவார்கள். சூட்கேஸ்கள் அனைத்தும், பாதுகாப்பான அறைக்குள் வைக்கப்பட்டு, அறை சீல் வைக்கப்படும். அறைக்கு உள்ளேயும், வெளியேயும் கேமரா கண்காணிப்பு பலத்த பாதுகாப்பு இரவு முழுக்க உண்டு." என்றார் ஜாகிர்.

— மௌலி

வேண்டுகோள்!

குரோம்பேட்டை லக்ஷ்மிபுரத்தில் அமைந்துள்ள ஸ்ரீ காயத்திரி ஞானவாபியில் (இறந்தவர்களுக்கு கர்மாக்கள் செய்யும் இடம்) இந்துக்கள் கர்மா செய்யும் பொருட்டு எல்லா வசதிகளுடனும் கட்டிடம் கட்டப்பட்டு சுமார் 10 ஆண்டுகளாக செயல்பட்டு வருகிறது. இப்பொழுது ஸ்நானம் செய்துவிட்டு வைதீக முறைப்படி



செய்யும் பொருட்டு ஒரு குளம் (TANK) சுமார் ஏழு லட்சம் மதிப்பீட்டில் குளம் வெட்டும் பணி நடந்து கொண்டிருக்கிறது. இப்பணிக்கு நன்கொடை கொடுக்க விரும்புவோர், "Shree Gayethri Trust" என்ற பெயருக்கு Cheque / DD / எடுத்து Shree Gayethri Trust, 45 Lakshmi Nagar, Chrompet, Chennai - 600 044 என்ற முகவரிக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

நன்கொடைகளுக்கு Income Tax Act 80-G வரி விலக்கு உண்டு.

G. Raghavan
Managing Trustee
Phone : 2364777

Advt


அக்னிசர்மா பக்கம் செப்டெம்பர் 5 முதல் 11 வரை



மேஷம் : ஆதரவு கேட்டு வந்த யாசர் அராபத்தை வாஜ்பாய் அரவணைச்ச மாதிரி உங்களையும் பெரியவங்க, நல்லவங்க எல்லாம் அரவணைக்கப் போறாங்க. 'ஆழம் தெரியாம காலை விடக் கூடாது'ங்கறதை போல மத்தவங்களை நம்பி எந்த காரியத்திலயும் இப்ப இறங்க வேண்டாம். கொடுக்கல் வாங்கல்ல ரொம்பவே உஷாரா இருங்க. பார்ட்டி, ஃபங்ஷன்னு சுத்தறதுக்கு வாய்ப்பிருக்கு. சுத்தற இடத்துல வம்பு தும்பு நடந்தா ஓடிப் போயிடுங்க. அனாவசியமா வாயைக் கொடுத்து வாங்கிக் கட்டிக்க வேண்டாம். சிலருக்குச் சொந்தமாகத் தொழில் தொடங்க வாய்ப்பு வரப் போகுது. பயன்படுத்திக்குங்க.



ரிஷபம் : வீட்டுல மங்களகரமான நிகழ்ச்சிகள் நடக்க வாய்ப்பிருக்கு. இதனால மகிழ்ச்சி மழை பொழியும். எதிர்பார்த்திருந்த 'குட் நியூஸ்' இப்ப வந்து வயித்துல மில்க் வார்க்கும். பண விஷயத்துக்குப் பிரச்னையில்லை. பணப்பை எப்பவுமே கனமாவே இருக்கும். கலைதுறையைச் சேர்ந்தவங்க வெற்றி நடை போடுவாங்க. கணவன் மனைவிக்குள்ள வழக்கம் போல சின்ன சின்ன முறைப்புகள் வந்து விட்டுப் போகும். நினைச்சு நினைச்சு சந்தோஷப்படற மாதிரியான சம்பவம் ஒண்ணு, இந்த வாரம் சிலருக்கு நடக்கப்போகுது. ஜமாயுங்க!



மிதுனம் : உங்க திறமை , சாமர்த்தியமெல்லாம் வெளிப்படப் போகுது. நடக்குமா, நடக்காதானு ஏங்கிக்கிட்டிருந்த காரியங்கள் இப்ப நடக்க வாய்ப்பிருக்கு. புதிய பதவி பட்டம் தேடி வரப் போகுது. அரசியல்வாதிகள் மதிப்பு மரியாதை எவரெஸ்ட் லெவலுக்கு உயரப் போகுது. எதிலயும் நிதானம் அவசியம். தம்மாத்துண்டு சங்கடங்கள் வந்து இம்சை பண்ணினாலும் குருபார்வை ரொம்ப க்ளியரா இருக்கறதால பிரச்னைகள் ஓடிடும். புதிய முயற்சிகள்ல இப்ப இறங்க வேண்டாம். எதிலயும் அவசரம் கூடாது. பொறுமை ரொம்ப ரொம்ப அவசியம்.



கடகம் : நீங்க எதிர்பார்த்திருந்த பொருள் வரவு இந்த வாரம் வந்து சேரப் போகுது. உற்சாகமா இருங்க. முக அழகு, ஃபேர் அன் லவ்லி போடாமலேயே பாலிஷ் கொடுக்கும். அடிக்கடி கண்ணாடிப் பார்த்து, பாடப் போறீங்க. தொழிலாளி, விவசாயிகளுக்கெல்லாம் உற்சாகமான சூழ்நிலை ஏற்படப் போகுது. பார்ட்னர்ஷிப்ல தொழில்பண்றவங்களுக்கு லாபம் கொட்டும். துணிச்சலான செயல்பாடுகள்ல ஈடுபாடு அதிகரிக்கும். சிலருக்கு வீர, தீர சாதனைக்கான விருது பாராட்டு வந்து சேரும். கொடுக்கல்,வாங்கல் விவகாரத்துல கொஞ்சம் கவனமாகவே இருங்க.



சிம்மம் : மனசுக்குள்ளேயே ஆற, ஊறப் போட்டு வச்சிருந்த திட்டங்கள், எண்ணங்கள் இப்ப நிறைவேறப் போகுது. அரசியல்வாதிகளுக்கு வரவேற்பும் பாராட்டும் தள்ளாட வைக்கப் போகுது. சிலருக்குத் திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புகள் வரும். வெளியூர் மற்றும் வெளிநாட்டுல இருந்து நல்ல செய்தி வரப் போகுது. பேசி சம்பாதிப்பவர்களுக்குப் புகழும் பணம் தேடி வரப் போகுது.



கன்னி : 'தில்' படத்துக்குப் பிறகு மார்க்கெட்டும் மரியாதையும் ஏறிப் போன வித்யாசாகர் மாதிரி உங்களோட மதிப்பும் மரியாதையும் உயரப் போகுது. மத்தவங்களாலப் போற்றப்பட போறீங்க. வெளிநாட்டுல இருந்து நல்ல செய்தி வந்து சேரும். பெண்கள் புது ட்ரெஸ், நகைகள் வாங்க வாய்ப்பிருக்கு. நான்கில் செவ்வாய், கேது வாக் போவதால் அவசரம் வேண்டாம். ஒருமுறைக்குப் பலமுறை யோசிச்சு நிதானமா செயல்படுங்க. பயணம் தவிர்ப்பது நல்லது. கொடுக்கல், வாங்கல்ல எச்சரிக்கை அவசியம்ங்க.



விருச்சிக ராசிக்காரரான ஷாலினி அஜித்துக்கு இது சாதனை வாரமாமே! வாழ்த்துக்கள்!

நடக்குமென்பார்; நடக்கும்!

துலாம் : 'வெற்றி மீது வெற்றி வந்து என்னைச் சேரும்'னு நீங்க உற்சாகமா பாட்டுப் பாடலாம். அந்தளவுக்கு உங்களுக்கு கிரகங்கள் சாதகமா இருக்கு. துணிச்சல், தன்னம்பிக்கை அதிகரிக்கப் போகுது. இதுவரை இழுத்தடிச் சிட்டிருந்த அரசாங்க விவகாரங்கள் 'டப்பு'னு இப்ப முடியும். துணிச்சலான கார்யங்கள்ல ஈடுபட்டு அதுல வெற்றி காணப் போறீங்க. வெளிநாடு குடும்பத்துல இதுவரை இருந்து வந்த சண்டை சச்சரவுகள் நீங்கும். கோர்ட், வழக்கு விவகாரங்கள் போட்டி பந்தயங்கள்ல எல்லாம் வெற்றி வந்து குவியும்.

விருச்சிகம் : இந்த வாரம் நீங்க ஏதாவது சாதனைப் படைக்கப் போறீங்க. ஊரெல்லாம் உங்க புகழ் பாடப் போறாங்க. கலைத் துறையைச் சேர்ந்தவங் களுக்கு வரவேற்பு 'ஓஹோ'னு இருக்கும். அரசாங்கத்துல எதிர்பார்த்துட்டிருந்த காரியம் இப்ப தடபுடலா நடக்கும். நிர்வாகத் துறையில உள்ளவங்க சில முன்னேற்றம் பெறுவார்கள். சின்னச் சின்ன பிரச்னைகள் வந்து இம்சை பண்ணும். கலக்கம் அடைய வேண்டாம். வீண் வம்பு வழக்குகள்ல தலையிட வேண்டாம்.

தனுசு : பண நடமாட்டம் பல வழிகள்ல இருந்து வரப் போகுது. சிலருக்கு திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புகள் வரலாம். அதுக்காக லாட்டரிக் கடை வாசல்ல தவம் கிடக்காதீங்க. சிலருக்கு உயர்பதவி கிடைக்கலாம். குடும்பத்துல நல்ல காரியத்துக்கான முன்னேற்பாடுகள் நடக்கும். இரும்பு, எஃகு, தாதுபொருட்கள் வியாபாரம் பண்றவங்களுக்கு ஆதாயம் கொட்டும். புதிய முயற்சிகள்ல தாராளமா இறங்கலாம். எழுத்துத் துறைகளைச் சேர்ந்தவங்களுக்கு இது சூப்பர் வாரம். எதிலேயும் பதற்றம் அவசரம் கூடாது. வாக்குவாதத்துக்குத் தடா போட்டீங்கன்னா பிரச்னைகள்ல இருந்து தப்பிக்கலாம்.

மகரம் : இந்த வாரம் வெங்கடாஜலபதியை வேண்டிக்குங்க. சோதனை மேல் சோதனை வந்து உங்களைத் தொந்தரவு பண்ணும். ஆசிரியர்கள், அலுவலகப் பணியாளர்கள் எல்லாம் கடமையை ஒழுங்கா செஞ்சா மேலதிகாரிகளின் வசவுகளிலிருந்து தப்பிக்கலாம். கணவன் மனைவிக்குள்ள சின்னச் சின்ன சல சலப்புக்கு வாய்ப்பிருக்கு. அடக்கி வாசிச்சா நல்லது. வீண் செலவுகள் ஏற்பட்டு எரிச்சல் ஏற்படுத்தும். பர்ஸைப் பத்திரப்படுத்துங்க.

கும்பம் : இலங்கையில் நடந்த இரண்டாவது டெஸ்ட்ல சாமர்த்தியமா ஆடின கங்குலி மாதிரி, எதிலயும் சாமர்த்தியமா செயல்படப் போறீங்க. பண நடமாட்டத்துக்குப் பஞ்சமில்லை. சிலருக்குத் திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புகள் வரப் போகுது. வெளிநாட்டுல இருந்து நல்ல செய்தி வரப் போகுது. பொறியியல், சட்டம், இராணுவம் போன்ற துறைகளைச் சேர்ந்தவங்களுக்குப் புகழ் பாராட்டு கிடைக்கப் போகுது. கணவன் மனைவிக்குள்ள கருத்து வேறுபாடு வரலாம், விட்டுக் கொடுத்துப் போறது நல்லது. புது சொத்துகள் வாங்க வாய்ப்பிருக்கு.

மீனம் : உங்க அறிவாற்றல், நிர்வாகத் திறமையெல்லாம் வெளிப்படப் போகுது. அடுத்தவங்களை அட்ராக்ட் பண்றமாதிரி உங்க பேச்சாற்றல் வரப் போகுது. இதனால சில நல்ல காரியங்கள் நடக்கலாம். அரசியல்வாதிகளுக்குப் புகழ், பாராட்டுக் கூடும். பெண்களுக்கு இது ஜாலி வாரம். கணவர்கள் பர்ஸைக் காலி பண்ற மாதிரி செவ்வாய் புத்தி குருபார்வை இருக்கறதால எடுத்த காரியங்கள்ல வெற்றி மேல் வெற்றிதான். இரும்பு, எஃகு வகைகள்ல பிசினஸ் பண்றவங்களுக்கு ஆதாயம் அமோகம்.

போட்டிக் கதை – 1

வீடு அசாதாரண மௌனம் காத்தது. சமையலறையில் குக்கர் விசில், மிக்ஸியின் அலறல் என எதுவுமில்லை. செய்தித்தாளின் அத்தனை வரிகளையும் மனத்தில் ஜெராக்ஸ் செய்து கொண்டாலும் டி.வியில் செய்தி கேட்காவிடில் ஏகக் கடுப்பாகிவிடும் விஷ்ணு, இரண்டையுமே திரும்பி பார்க்கவில்லை. ஊர்க்கதை அல்லது சுயபுலம்பல் என எதையாவது முணுமுணுத்துக் கொண்டிருந்தால்தான் ரமாமணிக்குக் கை ஓடும். அப்படிப்பட்டவள் வாயே திறக்காது பாத்திரம் தேய்த்துக் கொண்டிருந்தாள். வழக்கம்போல் காலை வேலைக்கு வந்த போது 'இது என்ன அநியாயம், நேற்றுக்கூட நல்லாப் பேசிட்டிருந்தாரே, என்ற ரீதியிலான சில பகிர்வுகளுக்குப் பிறகு மூடாத அவள் வாய் கூட யாரோ இழுத்துத் தைத்தாற்போல் இறுகியிருந்தது.


"ஆபீஸ் போகப் போறீங்களா?"

"அதான் யோசிச்சிட்டிருக்கேன். வேலை நிறைய பெண்டிங் இருக்கு. போகவும் மனசு வரல. பிடிக்கல. நேற்று ஸ்கூட்டரிலிருந்து கையாட்டியபடி அழகா சிரிச்சிட்டுப்போனாரே பாவி மனுஷன்..." விஷ்ணுவின் விழிகளில் கசிவு தெரிந்தது.

"போக வேண்டாம். நாளைக்கு கூடக் கொஞ்ச நேரம் இருந்து

சாந்தா தத்





வேலையை முடிச்சுடுங்க. மறுபடியும் அவரைப் பார்க்கவா முடியும்?''- பாரமான இதயத்துடன் வாசற்பக்கம் வந்தாள் மகாலட்சுமி.

கனத்த நிசப்தத்திலாழ்ந்திருந்தது காலனி. அங்கங்கே இருவர் மூவர் எனப் பேசிக் கொண்டிருந்தாலும் சத்தம் வெளிக்கிளம்பாத உரையாடல்கள்... அனுதாபமும் அங்கலாய்ப்புமாய். முடிச்சு முடிச்சாய் சிறுவர்களும் கூடியிருந்தார்கள்- 'அஞ்சலி' சினிமாபோல் ஒவென்ற கூச்சலும் கும்மாளமுமாய் காலனியையே பூகம்ப அதிர்வுக்காளாக்குவதுபோல ஆட்டம் போடுபவர்கள் மிகவும் அமைதியாக இருந்தார்கள். பள்ளிக்கூட நாட்களில் புரட்டிப் போட்டாலும் எழுந்திருக்காது முரண்டு பிடிப்பவர்களுக்கு விடுமுறை நாட்களில் மட்டும் எப்படித்தான் தானாகவே விழிப்பு வந்து விடுகிறதோ? சுறுசுறுப்புடன் எல்லாம் முடித்துக் கொண்டு எட்டு எட்டரைக்கெல்லாம் வீதியில் அல்லது மைதானத்தில் கூடிவிட்டால்... அவ்வளவுதான்... அவர்கள் உலகமே வேறாகி விடும். இப்போது அவர்கள் முகங்களில் அந்த 'ஹாலிடே மூடு...' அதுவும் கோடை விடுமுறை... அடியோடு இல்லை. மரணம் குறித்து ரொம்பத்தான் தெரிந்தவர்கள் போல பெரிய மனுஷத்தனத்துடன் துக்கம் அனுஷ்டித்துக் கொண்டிருந்தார்கள். தங்களுடன் பள்ளிக்குச் சென்று.... இணைந்து விளையாடிய ராஜுவின் அப்பா திடீரென இறந்துவிட்டதால் நேர்ந்த அதிர்ச்சி அவர்களிடம் வெளிப்படையாகத் தெரிந்தது.

"ஃப்ரிஜ்ஜில் மாவு இருக்கில்ல... கோபிக்கு நாலு இட்லி வார்த்துடு... சின்னப் பையன்.. பசி தாங்கமாட்டான்..."

"இட்லியெல்லாம் வேணாம். ஒரு நாள் அவன் பிரெட் சாப்பிட்டா ஒண்ணும் முழுகிடாது. நீங்க போய் பிரெட் வாங்கிட்டு வாங்க. சீக்கிரம் வந்துடுங்க. நாம் போகணும்.... இப்பவே லேட்..."

உள்ளேவந்த மகாலட்சுமிக்கு இருப்பு கொள்ளவில்லை.

அடிமைகள்

மஞ்சள் குங்குமம் காதணி மூக்குத்தியுடன் இதழ்க்கோடி சிறுமுறுவலும் நிரந்தர ஆபரணமாய் எந்நேரமும் மலர்ச்சியுடன் காணப்படும் அகிலாவின் முகம் மனத்தில் வந்தது. அவள் சுமங்கலி என்பதற்கான அந்த வெளி அடையாளங்களின் ஆயுளும் கார்த்திகேயனுடன் முடிந்துவிட்டது.

"டிரம்ல டியூப் போட்டிருக்கேன். பார்த்துக் குழாயை மூடிடு. வேலைக்கு வரவே மனசில்ல... நீ திண்டாடுவியேன்னுதான். சரி... நான் போறேன்..."

"ஏய் ரமாமணி... உனக்கு எத்தனை தடவை சொல்றது... போய்ட்டு வரேன்னு சொல்லு..."

"ஆமா.... என் ஆயுசு கல்லில் எழுதிவச்சிருக்கு பாரு. ஆனானப்பட்ட மனுசனே பொட்டுனு போய்ட்டார்..."

இங்கு யாரும் சிரஞ்சீவி இல்லை. எவர் ஆயுளும் கல்லில் எழுதிவைக்கவில்லை என்றாலும் இப்படியா...? கார்த்திகேயனும் கல் போலதான் இருந்தார். எந்த நோய்நொடியுமற்ற நாற்பத்தைந்து வயது. எப்போதும் போல் அலுவலகம் சென்று, நன்றாகவே வீடு திரும்பி, காப்பிகுடித்து, டீ.வி. பார்த்து, சாப்பிட்டு, புத்தகம் படித்து அந்நாளை நல்லபடியே முடித்தவர்தான். நள்ளிரவில் ஆட்கொல்லி ஹார்ட் அட்டாக் சூறாவளியாய் வந்து, நொடிகளில் முழுசாய் அடித்துச் சென்று விட்டதே... பத்தே நிமிஷம்தானாம். நிகழ்வின் விபரீதத்தைக் கிரகித்து ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் செல்ல ஆயத்தமான போது உடல் மட்டுமே மிச்சமிருந்தது. மரணத்துடன் போராடிக் கொண்டிருந்த கணவனைக் கையாலாகத்தனத்துடன் பார்த்துக் கொண்டிருந்த அகிலாவும் அவள் குழந்தைகளும் எப்படித் துடித்துப் போயிருப்பார்கள்... எப்படி கதறியிருப்பார்கள்.... எந்த உறவாலும் பாசத்தாலும் நேசத்தாலும் தடுத்து நிறுத்த முடியாத கண்முன் நிகழ்ந்து கொண்டிருக்கும் நிரந்தரப் பிரிவு. ஒரு இரவுக்கும் விடியலுக்கும் மத்தியில் குடும்பமே சிதைந்து சின்னாபின்னமாகி விட்ட கொடுமை! இதனால்தான் வாழ்வுக்கும் மரணத்திற்குமிடை நூலிழைத்தூரம்தான் என்கிறார்களா...?


“**வா**ங்க போகலாம்...”

வீட்டைப் பூட்டிக் கொண்டு கிளம்பினார்கள். கோபியும் பின்னாலேயே...

“உங்களோட இருபத்தைந்து வருஷ ஆபீஸ் பணி அனுபவங்களை வைச்சு கதைகள் எழுதப் போறீங்களா! என்ன கதைகள்?”

“லஞ்ச தந்திர கதைகள்!”

– கு. அருணாசலம்



“அங்க நீ எதுக்குடா.... இங்கேயே விளையாடிட்டிரு..”

“இல்ல... நானும் வரேன்...”

“சரி விடு. இருக்கப் பிடிக்கலேன்னா வந்துடறான். உள்ளயா வரப்போறான்...”

கார்த்திகேயனின் ஃபிளாட் நெருங்க நெருங்க மகாலட்சுமியின் வயிற்றில் குமிழ்கள் போல் ஏதோ கிளம்பி இம்சைப்படுத்தியது. வீட்டின் முன் கூட்டம். மெலிதான பேச்சு.... பெருமூச்சு... ஏறக்குறைய நண்பர் குழு மொத்தமும் கூடிவிட்டது. அவள் அந்தக் காலனிக்குக் குடி வந்தபிறகு இது போன்ற சூழ்நிலை இதுதான் முதல்முறை. சுதந்திர தினம், விநாயகசதுர்த்தி, புது வருடக் கொண்டாட்டம்.... அப்புறம் பிறந்த நாள், திருமண நாள், பெயர்சூட்டு விழா, சீமந்தம் போன்ற சின்ன சின்ன வைபவங்களில் அனைவரும் ஒன்றாய்க் கூடும்போது குதூகலமும் உற்சாகமும் கேளிக்கையும் ஆரவாரமுமாய் காலனி மகிழ்ச்சியுடன் சிரிக்கும். அதற்கு நேர்மாறாய் இப்போது...

அத்தனை இறுக்கத்திற்கும் அவ்வளவு சோகத்திற்கும் அர்த்தமிருந்தது. பொதுவாகவே மரணம் என்பது எந்த வாழும் மனிதனையும் இளகச் செய்துவிடும். உருகிக் கரையச் செய்து விடும். அப்படியிருக்க இத்தனை நாள் அவர்களுள் ஒருவராய் வாழ்ந்தவர். மிக நல்ல மனிதர். மென்மையானவர். எதிர்ப்படும் எல்லோரையும் நலம் விசாரித்தபடி சிரித்த முகத்துடன் வளைய வந்த காலனி நண்பர். காலனி அஸோஸியேஷன் செகரட்டரி என்ற பதவியில் இல்லாமலே யாருக்குப் பிரச்சனை ஏற்பட்டாலும் வலிய வந்து தம்மால் இயன்ற உதவிகளைச் செய்பவர். அவர் இதோ... கட்டையாய் நீள நெடுகக் கிடத்தப்பட்டிருக்கிறார்... கதறித் துடித்துக் கொண்டிருக்கும் மனைவி பிள்ளைகள், மற்ற உறவுகள் நண்பர்கள் மத்தியில்.

அகிலாவைப் பார்த்ததும் பாதாதிகேசம் நடுங்கியது மகாலட்சுமிக்கு. சில மணி நேரத்தில் இப்படி ஒரு வயோதிகம் சாத்தியம்தானா எனும்படி அவள் தோற்றம்... கண்கள் இடுங்கி, கன்னங்கள் பருத்து, தலை கலைந்து, உடை கசங்கி...

மூன்று நாட்கள் முன்பு காயத்ரி வீட்டில் மீட்டிங் நடந்தபோது பார்த்த அகிலாவா இவள்?... கோடை விடுமுறைக் கொண்டாட்டமாய் காலனி பெண்கள் சிறுவர்களுடன் கோல்டன் பீச் பிக்னிக் செல்லலாம் என்று தீர்மானித்தபோது எவ்வளவு

உற்சாகத்துடன் அது தொடர்பான தன் கருத்துக்களையும் சொன்னாள்? மகாலட்சுமி தயங்கித் தயங்கி அவள் அருகே சென்று எதுவும் பேசாது தோளைத் தொட... அப்படியே அவள் மடியில் சரிந்து குலுங்கிக் குலுங்கி அழலானாள் அகிலா. தன் கண்களைத் துடைத்தபடி ஆதரவாய் அவள் முதுகை நீவிவிட்டாள் மகாலட்சுமி. எதிர்பிளாட் கருணா காப்பி கொண்டு வந்தாள். எல்லோருமாய்ச் சேர்ந்து அவளை அடுத்த அறைக்கு அழைத்துச் சென்று பல வந்தமாய் காப்பி அருந்தச் செய்தார்கள்.

அடுத்து ஆக வேண்டிய காரியங்கள் நடந்து முடிந்து, காலையிலிருந்து காப்பி தவிர வேறெதுவும் சாப்பிடாத காலனி ஆண்களும் பெண்களும் இருள் முகங்களுடன் தத்தம் வீடு நோக்கிச் சென்றனர். வழியில் யாரும் எதுவும் பேசிக் கொள்ளவில்லை.

"ராஜீ பாவம் இல்லப்பா... இனிமே அவளுக்கு அப்பாவே இல்ல..."

கோபியின் தலையைத் துவட்டிவிட்டுக் கொண்டிருந்த விஷ்ணு தலைநிமிராமல் சொன்னான். "ஆமாண்டா... இந்த வயசிலேயே அந்தக் குழந்தைகளுக்கு இப்படியொரு துக்கம்.."

"ரசமும் தயிரும் போதுமில்ல... புதினாத் துவையல் இருக்கு..."

"ஏதோ செய்.." மகாலட்சுமிக்குப் பதில் சொல்லிவிட்டு குளிக்கச் சென்றான்.

மூவரும் சாப்பிட உட்கார்ந்தனர். மகாலட்சுமிக்குச் சாப்பாடு இறங்கவில்லை. ஏதோ யோசனையுடன் கலக்கமாய்... கலவரமாய்.... அகிலாவின் கதறல் செவிகளில் விடாது ஒலித்துக் கொண்டிருக்கும் பாதிப்பில் அதீத துயரத்துடன்...

"அம்மா..."

"ம்..."


"நானன்னிக்கி பிக்னிக் கான்சலாம்மா?"

"என்னடா இப்படிக்கேக்கற... இப்ப பிக்னிக் பத்தியெல்லாம் நினைக்கலாமா கோபி...?"

"போனா என்னம்மா... ராஜீ வீட்ல வராட்டாலும் மத்தவங்கல்லாம் போலாம் இல்ல? கோல்டன் பீச் போகணும்னு ரொம்ப ஆசையா இருக்கும்மா... ப்ளீஸ்... போலாம்மா...ம்... போய்த்தான் ஆகணும்.."

பளீரென அவன் முதுகில் ஓர் அறை விட்டாள் மகாலட்சுமி.

"கொஞ்சமாவது அறிவிருக்கா...? நிலைமை புரியாம பிக்னிக்காம் பிக்னிக்..."



" 'டைட்டன்'னு ஒரு படம் வெளிவரப் போகுதாமே?"

"ஆமாம்... 'சிட்டிசன்' படத்துக்குப் போட்டியாக வருதாம்."

– எஸ். வீமராஜன்

"என்ன மகா இது... எதுக்கு அவனை அடிக்கணும்... ரெண்டாம்கெட்டான் வயசு... அவனுக்கென்ன தெரியும் பாவம்..." அவளைக் கடிந்து கொண்ட விஷ்ணு அழுது கொண்டிருந்த பையனை உள்ளறைக்கு அழைத்துச் சென்றான். அவனைச் சமாதானப்படுத்தி தூங்க வைத்துவிட்டு ஹாலுக்கு வந்தவன் அதிர்ந்து போனான்.

டீ.வியில் ஒன்பது மணி சீரியல்.. சுவாரசியமாய்ப் பார்த்துக் கொண்டிருந்த மகாலட்சுமி சட்டென எழுந்துவிட்டாள். முகத்தில் பளிச்சென‌த் தெரிந்த குற்ற உணர்வு. திருதிருவென விழித்தாள்.

காலையிலிருந்து உருகி உருகி வழிந்தாயே... இவ்வளவுதானா நீ என்பது போல் அவளை வெறித்தான் விஷ்ணு.

"அது வந்து... ஒரு வருஷத்துக்கும் மேலா விடாம பார்த்துட்டிருக்கற சீரியல்... அதான்.."

"அறிவிருக்கான்னு நாலாவது படிக்கற பையனைப் பழிச்சயே..?"

அவன் பேசிக் கொண்டிருந்தபோதே டீ.வியில் பிம்பங்கள் வருவது நின்று புள்ளிகள் சிதற...

"நம்ம வீட்லமட்டும்தான் கனெக்ஷன் போயிருக்கான்னு தெரியலேயே?" முணுமுணுத்தவாறு அவனைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டு வாசலுக்கு விரைந்தாள் மகாலட்சுமி. அவனும் ஆத்திரத்துடன் பின்னாலேயே வர... இன்னுமொரு அதிர்ச்சி...

அத்தனை வாசல்களிலும் பெண்கள்...!

கல்கி - ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ் நடத்திய இளைஞர் திருவிழா



"நாமெல்லாம் எல்கேஜிதான்!"

"பேசுபவர்களில் இரண்டு வகை உண்டு. தெரிந்த விஷயங்களை, தெரியாத மாதிரி, புரியாத மாதிரி பேசுபவர்கள் முதல் வகை. அவர்கள் சித்தர்கள். தெரியாத, புரியாத விஷயங்களைக் கூட தனக்கு ரொம்பத் தெரிந்தாற்போல பேசுகிறவர்கள் இரண்டாம் வகை. அவர்கள் அரசியல்வாதிகள். இன்றைக்குக் 'கடவுளை' பற்றி அரசியல்வாதி போலத்தான் நான் பேசப் போகிறேன்." மைலாப்பூர் ஃபைன் ஆர்ட்ஸ் அரங்கத்தில் நிரம்பி வழிந்த ஏராளமான வாசகர்கள் மத்தியில், இப்படி தமது **சிரிப்புரையை** ஆரம்பித்தார் தென்கச்சி சுவாமிநாதன். கல்கி - ஸ்ரீகிருஷ்ணா ஸ்வீட்ஸ் இணைந்து நடத்தும் இளைஞர் திருவிழாவில் 'கடவுள்' என்ற தலைப்பில் நடந்த எட்டாவது கருத்தரங்கம். சிறுமி சுவாதி இறைவணக்கம் பாடி துவக்கி வைக்க, தென்கச்சியும், சுதா சேஷையனும் ஆற்றிய உரைகள் அனைவரையும் அப்படியே கட்டிப் போட்டன.

நிகழ்ச்சிக்கு வந்திருந்த ரேடியோ புகழ் கூத்தபிரான், தாம் ரசித்தவற்றில் சில முக்கியமான விஷயங்களை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கிறார் :

"கடவுள் என்பது ஒரு பெயர்ச் சொல் (noun) இல்லை; ஒரு

• கூத்தபிரான்





• அரங்கு நிறைந்த ...

• விழா மேடையில...



வினைச்சொல் (verb) தான் என்று தென் கச்சி குறிப்பிட்டது புதிய சிந்தனை. கடவுளைத் துணைக்கு அழைப்பவர் யார்? பரீட்சைக்குப் போகும் மாணவர், நோயாளி, என்று ஆரம்பித்து போர்க்களத்துக்குப் போகிற வீரர் வரை அனைவருமே, இறைவன் அருளை வேண்டுகிறார்கள். பிரச்னை தீர்ந்தவுடன் அவர்களுக்கெல்லாம் கடவுள் அவசியமில்லை. இதுவே இன்றைய மனப்போக்கு. ஆக, கடவுள் என்பதே மனிதன் உருவாக்கிய தப்பித்தல் முயற்சி என்று சில விஞ்ஞானிகள் சொல்வது கூட உண்மையாய் இருக்குமோ என்று யோசிக்க வைத்தது. அடுத்து, கடவுள் என்பவர் செயலின் வடிவம் என்று பார்க்காமல், உருவமாகப் பார்ப்பதால் வரும் பிரச்னையையும் அவர் கோடிட்டுக்





• சுவாமி நாதன்

நில்! கவனி!

வெற்றிகொள்!

காட்டினார். சைவ சித்தாந்தத்தில் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்று நான்கு நிலைகள் உண்டாம். எதிரில் கடவுள் உருவத்தை வைத்துக் கொண்டு, 'அதோ கடவுள்' என்று காட்டுவதுதான் முதல் கட்டமான சரியை. 'அந்தக் கல்லில் மட்டும் கடவுள் இல்லை; உனக்கு உள்ளேயும் கடவுள் இருக்கிறார் என்று எடுத்துச் சொல்லுவது கிரியை என்ற இரண்டாவது கட்டம். கடவுள் உருவத்தை விலக்கி வைத்து விட்டு, 'கடவுள் உனக்குள்ளேயே இருக்கிறார்' என்று சொல்வது யோகம் என்கிற மூன்றாவது கட்டம். 'கடவுள் வேறு, நீ வேறு இல்லை; இரண்டுமே ஒன்றுதான்' என்று தெளிய வைப்பதுதான் ஞானம் என்கிற கடைசி கட்டம். இதன்படி பார்த்தால், நாம் எல்லோரும் எல்.கே.ஜியில்தான் இருக்கிறோம் என்று குட்டு வைத்த கையோடு, 'அன்பே கடவுள்' என்ற திருமூலர் தத்துவத்தைச் சொன்னது மிகவும் பொருத்தமாக இருந்தது.

தென்கச்சியைப் போல, நானும் மயிலை கபாலீஸ்வரர் கோவிலுக்குப் போகிறவன்தான் என்றாலும், இனிமேல் போகிறபோது, அதுவும் அர்ச்சனை தட்டு வாங்குகிறபோது, நிச்சயம் தென்கச்சி என் நினைவுக்கு வருவார்! அவருடைய நண்பர் ஒருவர் அர்ச்சனைக்குத் தேங்காய் வாங்குகிற போதே, நன்கு முற்றிய தேங்காயாகப் பார்த்துத் தேர்ந்தெடுப்பாராம்: தட்டை, அர்ச்சகரிடம் கொடுத்த பிறகு, தாம் வாங்கிக் கொடுத்த (முற்றிய) தேங்காயே தமக்கு பிரசாதமாகத் திரும்ப வருகிறதா என்பதையே மூலஸ்தானத்தில் உள்ள கடவுளையும் மறந்து அதிக ஆர்வத்துடன் கண்காணித்துக் கொண்டே இருப்பாராம். காரணம், அவர்



"எதுக்கு இப்ப ஹிட்சாக்கை கண்டபடி திட்டிக்கிட்டிருக்கீங்க?"

"அவர் படம் ஒண்ணை உல்டாப் பண்ணி தமிழில் நான் எடுத்த படம் பயங்... ஊத்திக்கிச்சு!"

— உ. ராஜாஜி

அர்ச்சனைக்காக மட்டும் தேங்காய் வாங்கவில்லை. வீட்டில் சட்னிக்கும் சேர்த்துதான்! டூ இன் ஒன் நோக்கம்! கடவுள் பக்தி என்பதில் எத்தனை சுயநலம் கலந்து விட்டது பாருங்கள்!

ஆனால், சுதா சேஷையன் தம் உரையை ஆரம்பித்தபோது, 'உலகில் அனைவரும் நலமுடன் வாழ, நாம் அனைவரும் ஒரு நிமிடம் சேர்ந்து பிரார்த்தனை செய்யலாம்' என்றவுடன் மொத்த அரங்கும் கூட்டாகப் பிரார்த்தனை செய்தது நெஞ்சை நெகிழ வைத்தது. சுயநலம் இல்லாத இந்தப் பிரார்த்தனையில்தான் கடவுள் இருக்கிறார் என்று அவர் குறிப்பிட்ட போது, என் மனம் நெகிழ்ந்து போனது.

உருவ வழிபாட்டை, தென்கச்சி, எல்.கே.ஜி. லெவலில் வைத்தாலும், சுதா சேஷையன், உருவ வழிபாட்டுக்கு என்ன பின்னணி என்பதை விளக்கிய விதம் எளிமையாகவும், அனைவருக்கும் புரியும்விதமாகவும் இருந்தது. 'தாகத்தில் ஒரு வாய் தண்ணீருக்காக, சுட்டெரிக்கும் வெயிலில் நிற்கிற ஒருவனின் தாகத்தை, மேலே உள்ள மேகத்தில் இருக்கிற தண்ணீரோ, அருகில் உள்ள கடலில் இருக்கிற தண்ணீரோ தீர்த்து வைப்பதில்லை. அவனுக்கு ஒரு தம்ளரில் உடனே தண்ணீரை எடுத்துக் கொடுத்தால் அதுதான் அவனது தாகத்தைத் தீர்க்கும். அது போலவே, பரம் பொருள் வைகுண்டம், கைலாசம் என்று கண்ணுக்குத் தெரியாதவற்றைப் பற்றி சொல்லுவதை விட, 'இதோ கடவுள்!' என்று ஏதோ வழிபாட்டுக்குரிய ஒன்றைக் காட்டி விட்டுப் போகலாமே!' என்ற அவரது லாஜிக், ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒன்றுதான்!

அதுபோலவே, 'நம்பிக்கைதான் கடவுள்' என்று தென்கச்சி சொன்னதற்கு, சுதா சேஷையன் அற்புதமாக பொன்னியின் செல்வனில், பாதாளச் சிறையில் தனிமையில் அடைக்கப்பட்ட போதும் சேந்தன் அமுதன், இறைவன், தன்னுடன் இருக்கிறார் என்ற நம்பிக்கையில் 'பொன்னார் மேனியனே' என்று ஆனந்தமாகப் பாடியதை உதாரணம் காட்டினாரே!

"ஆத்திக, நாத்திக வாதம் பற்றி தென்கச்சி ஒரு குட்டிக் கதை சொன்னது நல்ல பஞ்ச்! ஒரு நாத்திகனுக்கும், ஆத்திகனுக்கும் விவாதம். நாத்திகன் சொன்னானாம், 'என் கையில் உள்ள நாயையும், உங்க பிள்ளையாரையும், இந்த ஆற்றுக்குள்ளே போடுவோம். யார் தானே கரையேறுகிறார் என்று பார்க்கலாமா? என்று சவால் விட்டானாம். அதற்கு, ஆத்திகன், 'சவாலை சற்று மாற்றி வைத்துக்

கொள்ளலாமா? முதலில் உன் நாயை என் பிள்ளையார் மேலே போடு; அப்புறம் என் பிள்ளையாரை நான் உன்னுடைய நாயின் மீது போடுகிறேன். என்ன ஆகிறது என்று பார்க்கலாம்' என்றானாம். உடனே, "நமக்குள் எதற்கு வீண் விவாதம்? நான் என் நாயோடு என் வழியில் போகிறேன், உன் பிள்ளையார் உன்னோடு இருக்கட்டும்' என்று சொன்னானாம். இந்தக் குட்டிக் கதையைச் சொல்லிவிட்டு, இந்த விவாதம் இன்று நேற்று இல்லை; பல நூறு வருஷங்களாக இருந்து கொண்டேதான் இருக்கிறது; இன்னும் நூறு ஆண்டுகள் ஆனாலும் இரண்டு பேர், 'கடவுள் இருக்கிறாரா? இல்லையா?' என்று விவாதம் பண்ணிக் கொண்டுதான் இருப்பார்கள்; அதற்கு முடிவே கிடையாது என்று சொன்னார். கல்கி ராஜேந்திரனும், 'கடவுள் இறந்து விட்டாரா?' என்று பிரபல டைம் பத்திரிகையில் வெளியாகி, பெரும் பரபரப்பூட்டிய கவர் ஸ்டோரியை தமது வரவேற்புரையில் நினைவுகூர்ந்தது பொருத்தமாக இருந்தது.

அறிவு கலக்காத பக்தி ஆபத்தானது என்று காஞ்சி பரமாச்சாரியார் சொல்லுவாராம். யாரோ ஒருவர், ஒரு சமயம், பெரியவரிடம், 'பெரியவர் அனுக்கிரஹத்தால் இன்று மழை பெய்தது' என்று சொன்ன போது, 'நேற்று வரை மழை பெய்யவில்லையே! அதற்கும் பெரியவர் அனுகிரஹம்தான் காரணமா?' என்று கேட்டாராம்!' பக்தி என்பது கண்மூடித்தனமான விஷயமாக இருக்கக் கூடாது; அறிவுபூர்வமானதாக இருக்க வேண்டும்' என்ற ஆழமான கருத்தை அழுத்தமாகச் சொன்ன போது, அரங்கமே அதை ரசித்தது!

"அதைத் தொடர்ந்து, திருநெல்வேலி பகுதியில் பெரியவர் சுற்றுப் பயணம் மேற்கொண்ட போது, நடந்ததாகச் சொன்ன சம்பவம், கடவுள் பற்றி ஒரு புதுப்பரிமாணத்தை எடுத்துக்காட்டியது என்னை மிகவும் ஆச்சரியப்படுத்தியது. ஒரு இடத்தில், இருபது, முப்பது ஏழை சிறுவர்கள் நல்ல உடை இல்லாமல் இருப்பதைப் பார்த்தவுடன், மடத்தின் காரியஸ்தர்கள் மூலமாக, உடனடியாக பக்கத்து டவுனிலிருந்து, டிராயர், சட்டைகளை வாங்கி வரச் செய்தாராம். அவற்றை குழந்தைகளுக்குக் கொடுத்து, அணிந்து கொள்ளச் செய்து கொண்டிருந்த சமயம், ஒருவர் பெரியவரை நெருங்கி, "அடுத்த ஊரில் பூஜை இருக்கிறது; நேரமாகிக் கொண்டே இருக்கிறது; புறப்பட வேண்டுமே!" என்று நினைவூட்டினாராம். அதற்கு 'பளிச்' சென்று பெரியவர் சொன்ன பதில் : "இங்கேயே பூஜை நடந்து கொண்டுதானே இருக்கிறது!'' தென்கச்சி சொன்ன இந்தச்



"தலைவர் விவரம் தெரியாம பொய் கணக்கு எழுதி மாட்டிக்கிட்டாரா, எப்படி?"

"கம்ப்யூட்டர் மௌஸுக்கு 'வடை' வாங்கிய செலவுன்னு எழுதியிருக்காரு!"

– நா. ஹரிகிருஷ்ணன்

சம்பவத்தைக் கேட்டபோது நான் மெய் சிலிர்த்துப் போனேன்!'

"எனக்குக் கூட ஒரு வருத்தம் உண்டு. கடவுள் பக்தி ஒருபுறம் அதிகரித்துக் கொண்டே வந்தாலும், இன்னொரு பக்கத்தில், கடவுள் பெயரைச் சொல்லி நடக்கும் ஏமாற்று வேலைகளும் அதிகரித்து வருகிறது! இதை ஒரு ரஷ்ய நாடகம் ஒன்றைச் சொல்லி 'நச்'சென்று நன்றாகக் குட்டிக் காட்டினார் தென்கச்சி. ஒருவர் ஒரு சமாதிக்கு அருகில் உட்கார்ந்து கொண்டு, 'இது ஒரு மகானின் சமாதி. இங்கே வணங்கினால், நினைத்தது நடக்கும்' என்று சொல்ல, நிறைய பேர் வரத் தொடங்கினார்கள். ஏராளமாக காணிக்கைப் போட்டனர். பெரும் பணக்காரர் ஆனார் அவர். அப்போது, பண விஷயத்தில் அவருக்கும், அவரது மகனுக்கும் தகராறு வர, அப்பா, சொத்தில் ஒரு பகுதியையும், தன்னிடமிருந்த ஒரு கழுதைக் குட்டியையும் மகனிடம் கொடுத்து, 'இனி நமக்குள் பிரச்னை வேண்டாம். நீ தனியாய்ப் போய்ப் பிழைத்துக் கொள்' என்று அனுப்பி விட்டாராம்.

தனியாய்ப் போன சில நாட்களில், மகனிடமிருந்த கழுதைக் குட்டி இறந்து விட்டது. அதைப் புதைத்து, ஒரு சமாதி கட்டி, பெரிய மகானின் சமாதி என்று சொல்லி கதை விட்டான் மகன். மக்கள் கூட்டம் கூட்டமாக வந்தனர். ஏராளமாய்ப் பணம் சேர்ந்தது. அப்பாவை விட மகன் பெரும் வசதி படைத்தவன் ஆனான், மிகக் குறுகிய காலத்திலேயே!

"ஒருநாள் மகனைச் சந்தித்த அப்பா, அவனுடைய ரகசியத்தைக் கேட்டார். கழுதைக் குட்டியைப் புதைத்து விட்டு, மகான் சமாதி என்று ஊரை ஏமாற்றிக் கொண்டிருப்பதை அப்பாவிடம் மகன் சொன்னவுடன் அப்பா, "நீதான் என் உண்மையான

வாரிக! நான் கட்டிய சமாதிக்குள்ளே இருப்பது என்ன தெரியுமா? நீ புதைத்திருக்கும் கழுதைக் குட்டியின் அம்மா கழுதையைத் தான்!''

''இந்தக் குட்டிக் கதைக்கு ஏகப்பட்ட கிளாப்ஸ்! பக்தி என்ற பெயரில் நடக்கும் மோசடிகள் விஷயத்தில் மக்கள் தான் விழிப்புணர்வுடன் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். இது இந்தக் காலத்துக்கு மிக அவசியமான ஒரு விஷயம்.

''அப்புறம், ஒவ்வொரு மனிதனுக்குள்ளேயும் மூன்றுவிதமான மனிதர்கள் இருக்கிறார்கள். முதல் மனிதன், தன்னைப் பற்றி தான் என்ன நினைக்கிறான் என்பது. இரண்டாவது மனிதன், அவனைப் பற்றி மற்றவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பது. மூன்றாவது மனிதன், இவை இரண்டுமில்லாதது. மூன்றாவதாக, தானாகவே சில சமயங்களில் வெளிப்படுகிறான் என்று சொல்லி, உதாரணமாக, நடு இரவில், திடீரென்று உடல்நலம் குன்றிய ஒரு பெண்மணியை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்ல வேண்டிய சமயம் சந்தித்த ஆட்டோ டிரைவரைப் பற்றிச் சொன்னாரே! விஷுவல் எபெக்ட்டுடன் கூடியது அது!

''நடு இரவில், எழுப்பி, விஷயத்தைச் சொன்னவுடன், கோபப்பட்டு வர மறுக்கிறான், கட்டாயப்படுத்தியதும் இருநூற்றைம்பது ரூபாய் கேட்கிறான். இது முதல் மனிதன்; கொஞ்சம் கூட மனிதாபிமானம் இல்லாமல் இப்படி நடந்து கொள்கிறானே என்று அவனைப் பற்றி மற்றவர்கள் நினைக்கிறார்களே! அவன் இரண்டாவது மனிதன். அதே ஆட்டோ டிரைவர், அந்தப் பெண்மணி துடிக்கிற துடிப்பை, கஷ்டத்தைப் பார்த்து, ஆஸ்பத்திரியில் போய் இறங்கியவுடன், தானும் ஒரு கைகொடுத்து உள்ளே தூக்கிச் சென்றது மட்டுமின்றி, பேசியபடி இருநூற்றைம்பது ரூபாயைக் கொடுத்தபோது, ''வேண்டாம்! இந்த உதவிக்குப் பணம் வாங்கக்கூடாது'' என்று மறுத்தபோது, அந்த விநாடியில் மூன்றாவது மனிதன் வெளிப்படுகிறான் என்று சொன்ன போது, எனக்குள்ளே இருக்கும் மூன்றாவது மனிதனை இனி அடிக்கடி வெளிப்படுத்த வேண்டும் என்று முடிவு செய்தேன்.

''தன் பேச்சுக்கு முத்தாய்ப்பாக, கண்ணதாசனின் கவிதை ஒன்றைச் சொன்னாரே சுதா சேஷையன். அது அப்பப்பா! அற்புதம்!

கடவுள், ஒரு மனிதன் முன் தோன்றுகிறார். மனிதன், கடவுளைப் பார்த்து அடுக்கடுக்காகப் பல கேள்விகளைக் கேட்கிறான். கடவுள் 'பட்பட்'டென்று பதில் சொல்லுகிறார்.

மனிதன் : பிறப்பு என்பது என்ன?
கடவுள் : பிறந்து பார்
மனிதன் : படிப்பு என்பது என்ன?
கடவுள் : படித்துப் பார்
மனிதன் : அன்பென்பது என்ன?
கடவுள் : அளித்துப் பார்.
மனிதன் : அறிவு என்பது என்ன?
கடவுள் : அறிந்து பார்

ஸ்டார் பேச்சாளர்களின் சொற்பொழிவுகளை அடுத்து நேயர்களின் கேள்வி பதில் நிகழ்ச்சி.

திருமலை [illegible] நேயர், ''ஆழ்ந்த கடவுள் பற்று கொண்ட உங்கள் முன் கடவுள் வந்தாரா?'' என்று கேட்க, ''இதோ வந்துவிட்டார்!'' என்று சுதா சேஷையன் அவரையே சுட்டிக் காட்ட ஒரே கைதட்டல்.



• திருமலை

டாக்டர் ஸ்ரீதர், ''கடவுள் நமக்குள்ளேயே இருக்கிறார் என்றால் கோவிலுக்குச் செல்ல வேண்டாம் என்கிறீர்கள். அப்படி ஒரு நிலை என்றால், நம் புராதன கோவில்கள் என்ன வாகும்?'' என்று கேட்க, தென்கச்சியின் பதில்:

''நீங்கள் எம்.ஏ படிக்கிறீர்கள் என்பதால் ஒன்றாம் வகுப்பை மூடிவிடுவதில்லையே! அதில் படிக்கவும் குழந்தைகள் இருக்கிறார்களில்லையா? எனவே கோவிலுக்குச் செல்லாமலேயே ஞானம் பெறும் நிலையில் பலர் இருந்தாலும், கோவிலுக்குச் செல்லும் நிலையிலும் பலர் இருக்கவே செய்வார்கள். எனவே கோவில்களுக்கு ஒன்றும் ஆகாது.''


ஆழ்வார்பேட்டை ராகவன், 'என்று

பரிசுப் போட்டி — 3

'வைரம் தேடுங்கள்' போட்டி

முடிவு விடை: **8 வைரங்கள்**

பி.எம். சில்க்ஸ் வழங்கும் ரூ. 2500/- மதிப்புள்ள பட்டுப் புடைவையைக் குலுக்கல் முறையில் பரிசு பெறுகிறார்.



டி. பத்மா
67, விவேகானந்தா சாலை,
இராம்நகர்,
கோவை — 641 009

மனிதன், இறப்பைத் தடுத்து நிறுத்துகிறானோ, அன்று இறைவனைவிட உயர்ந்து விடுகிறான்' என்று கருதுபவர். இது குறித்து தென்கச்சியின் கருத்தைக் கேட்டார். தென்கச்சி சொன்ன பதில்: "அப்படி ஒரு நிலை வந்தால், உலகில் எல்லாருமே உங்கள் கட்சியில் சேர்ந்து விடுவார்கள். ஆனாலும் மரணம் என்பது முடிவு அல்ல; வாழ்க்கையின் நிறைவு; அல்லது இன்னொரு வாழ்க்கையின் துவக்கம். ஆனாலும், சரியான பதிலை, நா இறந்த பின் உங்களுக்குச் சொல்லுகிறேன்."

சுப்பையா: நமக்கு மட்டும் ஏன் இத்தனை கடவுள்கள்? மற்ற மதங்களில் இப்படி இல்லையே!

சுதா சேஷையன்: விவேகானந்தரே இதற்கு பதில் சொல்லி இருக்கிறார். மக்கள் அனைவரும் ஒரே மாதிரியான அறிவு நிலையோ, பக்குவமோ பெற்றிருக்க மாட்டார்கள். எனவே, யார் யாருக்கு எந்த அளவுக்குப் புரியுமோ, தெரியுமோ, தேவையோ, அதற்கேற்ப, தங்களுக்கு இஷ்டமான தெய்வங்களை வணங்கிக் கொள்கிறார்கள். ஒவ்வொருவருக்கு ஒவ்வொருவிதமான டேஸ்ட். எனவே, அவரவர் விருப்பத்துக்கேற்ப, தேர்ந்தெடுத்து வழிபட ஏராளமான கடவுள்கள், நம் சனாதன தர்மத்தில் இருக்கிறார்கள். நம் தர்மத்தைப் போல் மற்ற மதங்கள் அத்தனை பழைமையானவை இல்லை என்பதையும் நாம் கவனிக்க வேண்டும்.

கே. கிருஷ்ணன்: (திருவல்லிக்கேணி) கடவுள் அருள் தன் மீது வந்துவிட்டது என்று சொல்லி, ஆருடங்கள் சொல்பவர்களைப் பற்றி உங்கள் கருத்து என்ன?

சுதாசேஷையன்: சில மகான்கள், எதிர்காலம் குறித்துச் சொல்வதை நம்மால் புரிந்து கொள்ள முடிவதில்லை என்பதற்காக அவர்களது ஞான உயர்வை உதாசீனப் படுத்துவது தவறு. அதேநேரம் பக்திக்கு நல்ல மார்க்கெட் இருப்பதால், போலிகள் புகுந்து விட்டன. சரியானவைகளை, சரியானபடி அடையாளம் கண்டுபிடிக்க நாம் கற்றுக் கொண்டு விட்டால், போலிகளை முடிவுக்குக் கொண்டு வரலாம்.

கடைசி கேள்வி கேட்டவர் பரத்ராம். "கடவுளைப் புரிந்து கொள்ளுவதால் என்ன பயன்?"

சுதா சேஷையனின் பதில்: நாம் படிப்பதால் என்ன பயன்? பணம் சம்பாதிப்பதால் என்ன பயன்? என்பது போல் இந்தக் கேள்விக்கு பதில் சொல்ல முடியாது. மனிதன் மனிதனாக இருப்பதால் என்ன பயன்? மனிதன் நல்லவனாக இருப்பதால் என்ன பயன்? கடவுளை நாம் புரிந்து கொள்ளுவதாலும் அதே பயன்தான்!

மனிதன் : மனையாள் சுகம் என்பதென்ன?
கடவுள் : மணந்து பார்
மனிதன் : பிள்ளைகள் என்பவர் யார்?
கடவுள் : பெற்றுப் பார்
மனிதன் : முதுமை என்பதென்ன?
கடவுள் : முதிர்ந்து பார்.
மனிதன் : வறுமை என்பது என்ன?
கடவுள் : வாடிப் பார்
மனிதன் : மரணத்துக்குப் பின் என்ன?
கடவுள் : முடிந்து பார்

கடவுளின் இந்தப் பதில்களைக் கேட்ட பின் மனிதன், மறுபடியும், 'ஆண்டவனே! அனுபவித்து அறிவதுதான் வாழ்க்கை என்றால், அப்புறம் நீ எதற்காக?' என்று கேட்டபோது, கடவுள் சொன்னாராம் : "அனுபவம் என்பதே நான்தான்."

"இந்தக் கதையைச் சொல்லிவிட்டு, நாம் வாழ்க்கையில் சந்திக்கிற அனுபவங்களும், மனிதர்களும்தான் கடவுள் என்று புரிந்து கொண்டு விட்டால், கடவுள் தன்மையை உணர்ந்து கொண்டு விட்டால், கடவுளை வேறு எங்கும் போய்த் தேட வேண்டிய அவசியமே இல்லை என்று சொன்னது நிகழ்ச்சியின் கிளைமாக்ஸ் நெம்பர் டூ.

அப்போது, கிளைமாக்ஸ் நெம்பர் ஒன் என்ன என்கிறீர்களா? முதலில் பேசிய தென்கச்சி சுவாமிநாதன் தம் பேச்சின் முத்தாய்ப்பாய்ச் சொன்னதுதான். இரண்டு பேர் சட்டை கிழிய சண்டை போட்டுக் கொண்டிருந்தார்களாம். அதை ஊரே கூடி வேடிக்கை பார்த்ததாம். அங்கிருந்த ஒரு சிறுவனிடம், சண்டை போட்டுக் கொண்டிருந்த ஒருவரைச் சுட்டிக்காட்டி, 'அவர் யார்?' என்று கேட்டபோது 'என் அப்பா' என்றானாம். இன்னொருவர் யார் என்ற போது, அப்போதும், 'என் அப்பா' என்றானாம். எதற்காகச் சண்டை என்று கேட்டபோது, 'தன் அப்பா யார்?' என்றுதான் சண்டை போடுவதாகச் சிறுவன் சொன்னானாம். இன்று கடவுள் பெயரால் நடைபெறுகிற சண்டை சச்சரவுகளும் இது போன்றதுதான்! கடவுளால்தான் மனிதர்களுக்குள்ளே சண்டை என்றால், அந்தக் கடவுளையே கொஞ்ச நாள், ஒதுக்கி வைத்து விடுவது உசிதம் என்பதுதான் தென்கச்சியின் கிளைமாக்ஸ்!

தொகுப்பு : **எஸ். சந்திரமௌலி**
படங்கள் : யோகா

❒ ரூ. 100/- பரிசு பெறுபவர்:
த. குமரேசன்,
12/22, அம்மன் கோவில் தெரு,
காவல்கிணறு, புதூர் (அஞ்சல்)
திருநெல்வேலி மாவட்டம் – 627 105

● கல்லன் கிருஷ்ணராஜ், குன்னூர் – 5.

? ஹையா! 'ஜெ' அரசின் சாதனைகளைப் பட்டியலிட்ட மாதிரியும் ஆயிற்று, சோ 'ஜெ'வின் ஜால்ரா அல்ல என்று பிரகடனப்படுத்திய மாதிரியும் ஆயிற்று – துக்ளக்கில் பிரசுரமான 'ஜெ'வின் கடிதத்தை இப்படித்தானே அர்த்தம் செய்து கொள்ள வேண்டும்?

! அடுத்த வார இரு பக்க நிஜ விளம்பரத்துக்கு முன்னோடியாகவும் கொள்ளலாம்.

● ரு. கணேசன், பனங்கோட்டூர்.

? டெஹல்கா விவகாரத்தில் விபசாரிகளைப் பயன்படுத்தியது தவறில்லை என்றும் தங்களைக் குறை கூறுவதற்குப் பதில் பாராட்ட வேண்டும் என்றும் தருண் தேஜ்பால் சொல்வது...?

! மிகத் தவறு! லஞ்சம் வாங்கியதை நிருபிக்க, அதனினும் கீழ்த்தரமான வழிகளைக் கையாள்வது மட்டமான ஜர்னலிஸம். குறிக்கோள்கள் உயர்ந்தவை என்றாலும் அவற்றை அடைய மேற்கொள்ளப்படும் முயற்சிகளும் உயர்ந்தவையாக இருக்க வேண்டும் என்ற காந்திஜியின் அறிவுரையை யார் மறந்தாலும் ஜனநாயகக் காவலர்களான பத்திரிகைகள் மறக்கக் கூடாது.



• ஓயாத ஜொலிப்பு!

● லட்சுமி செங்குட்டுவன், நாமக்கல்.

? 'என்னை வந்து ஸ்டாலின் பார்க்கவில்லையே? இதுதான் மரபா? இதுதான் தி.மு.க. மரபை மதிக்கும் லட்சணமா?' என்று 'ஜெ' கேட்கிறாரே?

! 'முதல்வர் பதவியேற்புக்கு எனக்கு அழைப்பே இல்லையே!' என்று ஸ்டாலின் பதில் சொல்லியிருக்கிறாரே... ஆளும் கட்சி-எதிர்க்கட்சி என்றிராமல் ஆளும்கட்சி-விரோதிக்கட்சி என்று இரு தரப்பிலும் செயல்படுவதுதான் இன்று இந்திய ஜனநாயகத்தின் முக்கிய பிரச்னை.

● ஆர். கர்ணன், தனக்கர்குளம் (அஞ்சல்)

? 'பாருக்குள்ளே நல்ல நாடு எங்கள் பாரத நாடு' என்று அன்று பாடிய பாரதி இன்று இருந்திருந்தால் என்ன பாடியிருப்பார்?

! அதையேதான் பாடியிருப்பார். பாரதி = நம்பிக்கை!

● எஸ். பவதாரிணி சீனிவாசன், திருத்துறைப்பூண்டி.

? ராமதாஸின் நிலைமையை திரிசங்கு சொர்க்கத்துக்கு ஒப்பிடலாமா?

! திரிசங்கு இப்போது சேரிடம் சேர்ந்துவிட்டாரே! சோறு கண்ட இடம் சொர்க்கம்!

● பா. பூரிஜெகன்னாதன், வேலூர்.

? 'என் வாழ்க்கையை அர்ப்பணித்ததற்காக எதற்கு விருது?' என்று கூறி, காஞ்சி பெரியவர் வழங்கிய சரஸ்வதி தேசிய விருதைப் பெற மறுத்துவிட்டாரே ஜோதி பாசு?



• ...நடிப்பு!



• நுணுக்கமான...

! ஜோதி ரிடையரானாலும் ஜொலிக்கிறது! பிரதிபலனை எதிர்பார்த்தால் அது தியாகமாகாது அல்லவா...?

● த. குமரேசன், புதூர். ❒

? இந்தியா ஒரு நாட்டுடன் விளையாட்டில் தோல்வியுற்றாலே கோபப்படும் மனிதர்கள் ஏன் ஐந்து வருடம் ஏமாற்றும் அரசியல்வாதியைக் கண்டு கோபப்படுவதில்லை?...

! Right of Recall என்பதற்கு நமது அரசியல் சாசனத்தில்-தேர்தல் சட்டத்தில் - வசதி செய்யப்படுமானால், கோபப்படுவதில் அர்த்தமுண்டு. அல்லாத பட்சத்தில் ஐந்து வருஷத்துக்குக் கோபப்பட்டுக் கொண்டே

யிருப்பது வாக்காளர் தாம் செய்த தவறுக்கு சுவரில் முட்டிக் கொள்வது போலத்தான்.

● அ. நாசன், பெங்களூர்–5


? பெரிய திரையில் ஒரு காலத்தில் கொடி கட்டிப் பறந்த சரிதாவின் வாரிசாக, சின்னத்திரை மௌனிகாவைச் சொல்லலாமா..?

! நுணுக்கமான உணர்வுகளை மிகையில்லாமல் வெளிப்படுத்தக் கூடிய சிறந்த நடிகை. சரிதாவைப் போலவே கிளாமரை மூலதனமாக்காத கண்ணியமும் உண்டு.

● சி. ஸ்ரீதர், தென் எலப்பாக்கம்.

? தமிழகத்தில் விரைவில் பணப்புழக்கம்

• மரபும்...



• சொர்க்கவாசல்!





• ... மறதியும்!

உறுதி என்கிறாரே முதல்வர்...?

! தெரியாமல் சொல்வாரா...? சீக்கிரமே கட்சிக்காரர்கள் கவர் வாங்க கட்டுப்பாடுகள் தளர்த்தப்படும் என்று அர்த்தம்.

● எம். சிவ குருநாதன், சென்னை – 42.

? 'மத்திய அரசு 'கல்வி'யைக் 'காவி'மயமாக்கி வருகிறது; இது தவறு' என்று காங்கிரசும் கம்யூனிஸ்டுகளும் சொல்வது பற்றி உங்கள் கருத்து என்ன...?

! அவர்கள் கருத்தை முழுமையாக ஒப்புக்கொள்கிறேன். கல்வித் திட்டத்தை நிர்ணயிப்பது அரசின், அரசியல்வாதிகளின் வேலையாக இருக்கக் கூடாது. அது அறிஞர்களின் கல்வியாளர்களின் பணி.

● எஸ். சுவாமிநாதன், மன்னார்குடி.

? இந்தியாவின் புகழ்வாய்ந்த இலக்கியங்களை மொழிபெயர்க்க ஒரு தனிப்பிரிவை மத்திய அரசு அமைக்கப்போகிறதாமே...?

! அப்பணியைச் செய்ய, சாஹித்ய அகாடமி என்பதாக ஒன்று ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டு நடந்து வருவதை அரசு மறந்துவிட்டதாகச் சொல்ல முடியாது. முற்றிலும் அரசுப் பிரிவாக மொழிபெயர்ப்பு இலாகா செயல்பட்டால் அதிலும் சில ஆதாயங்கள்– இலக்கியத்தையும் காவிமயமாக்கத் திட்டமோ...?

● எம். ரேவதி, மன்னார்குடி.

? சமீபத்திய முட்டல்–மோதல் பற்றி..?

! "தேசிய ஜனநாயக அணியில் அ.தி.மு.க. சேரத் தீர்மானித்தால் பி.ஜே.பி. தி.மு.கவை உதறிவிடும்..."– முட்டல்;

"அ.தி.மு.க. அணியை விட்டு விலகிய பா.ம.க. இன்று அனாதைக் கட்சியாகிவிட்டது"– மோதல்!

● க.நா. இராஜேஸ்வரன், மொரட்டுப் பாளையம்.

? கொத்துமல்லிச் சிரிப்பு எப்படி இருக்கும்? (தில் படப் பாடல் வரி)

சமீபத்திய முட்டல் - மோதல்..?

! கொத்துமல்லிச் செடி பூத்துப் பார்த்திருக்கிறீர்களா...? அப்படியிருக்கும்!

● லலிதா செல்லப்பா, சென்னை – 47.

? கணவன்–மனைவிக்குள் பூசல்கள் மறைந்து ஒற்றுமை நிலவ எளிய வழி ஒன்று சொல்லுங்களேன்...?


! மௌன விரதம் மேற்கொள்ள வேண்டும்– இருவரும்! அல்லது ஒருவரேனும்.

● ஆர்.எஸ்.லக்ஷ்மி, கோவை–41. *

? 'முன்பு ஸ்டேட்டன் தீவில், 'நான் முதலில் சுவயம் சேவக், அப்புறம்தான் பிரதமர்' என்று உளறியதற்குப் பிராயச்சித்தமாக குமரகம் சென்று அறிக்கை விட்ட வாஜ்பாய், மீண்டும் ஆர்.எஸ்.எஸ். புராணம் பாட ஆரம்பித்துள்ளாரே...?

! பாலுக்கும் காவல்; பூனைக்கும் தோழன் என்ற தந்திரத்தைக் கையாள்கிறார்.

* ரூ. 50/- பரிசு பெறுபவர்:
ஆர்.எஸ். லக்ஷ்மி,
20, வி.என்.ஆர். நகர் முதல் தெரு.
வடவள்ளி அஞ்சல்,
கோவை – 641 041.



கல்கி

சூட்டும் வைரவிழா கிரீடம்!

நீங்கள் செய்ய வேண்டியது: கல்லூரிக்கு அணி செய்யும் மாணவர் / மாணவி என நீங்கள் கருதும் இளைய வைரத்தைப் பற்றிய முழு தகவல்களோடு புகைப்படம் இணைத்து எங்களுக்கு எழுதி அனுப்பவும் 'இவர் இக் கல்லூரியின் தலைசிறந்த மாணவ/மாணவிதான்' என்று குறைந்த பட்சம் நான்கு பேராசிரியர்களாவது கையெழுத்திட்டு வழி மொழிய வேண்டும். படிப்பு, கலை, விளையாட்டு, சமூகசேவை என எந்தத் துறையில் பிரகாசித்தாலும் அத்தகைய மாறுபட்ட முகங்களைக் கண்ணாடியாய்ப் பிரதிபலிக்க நாங்க ரெடி!

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621.
Annual Subscription : India : Rs. 275/-; Overseas : Rs. 2000/- (Air Mail)
Half Yearly Subscription : India : Rs. 140/-; Overseas : Rs. 1000/- (Air Mail)



“என் குழந்தைக்கு, சரியான அளவில், இன்றியமையாத ஊட்டச்சத்து அளிக்கப்படவேண்டும். அதனால்தான், நான் செரிலாக்கை நம்புகிறேன்.”

“என் குழந்தைக்கு, 4 மாதங்கள் முடிந்தவுடன், அவனுக்கு எந்த திட உணவைப் புகட்டத் தொடங்குவது என்று, உண்மையிலேயே நான் யோசிக்கலானேன். வெறுமனே திட உணவு மட்டும் போதுமானது ஆகாது. குழந்தை ஆரோக்கியமாகவும், வலுவாகவும் வளர்ச்சியடைய, சமச்சீரான அளவில் ஊட்டச்சத்துக்கள் நிறைந்த திட உணவு தேவைப்படுவதாம், என் மருத்துவர் கூறினார். எனவேதான், நான் செரிலாக்கையும் புகட்டத் தொடங்கினேன்.”



செரிலாக் எளிதில் சீரணிக்கத்தக்க, சமச்சீரான போஷாக்கு :

செரிலாக் தேவையான ஊட்டச் சத்துக்களை, சரியான அளவில் வழங்குகிறது. இயற்கையான புரதச்சத்துக்கள் நிறைந்த, பால் மற்றும் கோதுமை கொண்டு தயாரிக்கப்பட்ட செரிலாக்கில், கார்போஹைட்ரேட்டுகளும், கொழுப்புச் சத்துக்களும் கூட அடங்கியுள்ளன. அத்துடன், அத்தியாவசியமான விட்டமின்களும், தாதுப் பொருட்களும் இதில் நிரம்பியுள்ளன. இதனால் உங்கள் குழந்தைக்கு, ஒவ்வொரு முறையும் சமச்சீரான உணவு கிடைக்கிறது.

சீரணிப்பது எளிது. விதவிதமான பல சுவை உணவுகள் :

நெஸ்லேயின் புரட்சிகரமான ‘ஜெட்-லைன் என்ஸைமேடிக் தொழில்நுட்பம், கார்போஹைட்ரேட்டுகளை எளிதில் சீரணிக்க உதவுகிறது. இதனால் மிருதுவான செரிலாக்கை, உங்கள் குழந்தை, எளிதில் சீரணிக்க முடிகிறது.

செரிலாக்கின் சுவையை, குழந்தைகள் மிகவும் விரும்புகின்றன. 4 மற்றும் 6 மாதங்களுக்கு இடையேயான காலத்தில், செரிலாக் வீட் மற்றும் செரிலாக் ரைஸ்-ஆகியவற்றிலிருந்து ஒன்றைத் தெரிந்தெடுங்கள். பின்னர் பார்த்து மகிழுங்கள் உங்கள் குழந்தையின் மகிழ்ச்சிக் கும்மாளத்தை!



உங்கள் குழந்தைக்கு செரிலாக் அனுகூலத்தை அளியுங்கள்.

IMPORTANT NOTICE : MOTHER'S MILK IS BEST FOR YOUR BABY. INFANT FOOD SHALL BE INTRODUCED ONLY AFTER 4 MONTHS OF AGE.

महत्वपूर्ण सूचनाः माँ का दूध आपके बच्चे के लिए सर्वोत्तम है। ४ महीने के बाद ही उसे शिशु आहार देना शुरू करें।

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / Chief PMG-141 / 2001 *
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 37 * Registered as a Newspaper in Srilanka